# ஞானச்சுடர்




ஆடி — 211 ஆவது மலர் — 2015

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்**
**புறங்கூறா னென்றல் இனிது.**

**பொருள் :** ஒருவன் அறமென்னும் சொல்லைத் தானும் உச்சரிக்காதவனாய்த் தீய செயல்களைச் செய்து ஒழுகுபவனாயினும் அவன் புறங் கூறாதவன் என்று மற்றவரால் சொல்லும்படி நடத்தல் நல்லதாகும்.
(181)

**அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே**
**புறனழீஇப் பொய்த்து நகை.**

**பொருள் :** ஒருவன் இல்லாதவிடத்தில் அவனைப் புறங்கூறி அவனைக் கண்டவிடத்துப் பொய்யாக அவனைப் புகழ்தல் அறத்தைக் கெடுத்துப் பாவம் செய்தலினும் தீமையுடையதாகும்.
(182)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



எல்லாம் நீயே யென்றிருந்த மாதவர்
சொல்லாலே சொல்லப் புகார்நீ சும்மா
நில்லா யென்ன நிறுத்துவ ரதனை
நல்லோ ரறிவார் நயந்து போற்றுவோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 35

ஏக னநேக னெல்லார்க்கு மீசன்
மோகமார் தக்கன் வேள்வி முனிந்தவன்
வேகமா கரியை யுரித்துப் போர்த்தவன்
தாகமா நாடினோர்க் கருடரு வானே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 36

ஐயனை யழகனை யன்பர் சகாயனைத்
தையல் பாகனைத் தத்துவா தீதனை
வையகம் வானகம் வணங்கும்பொற் பாதனை
மையல் தீர வந்திப்போம் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு -2  சுடர் - 211

2015 பொருளடக்கம் ஆடி


| | | |
|---|---|---|
| வாழ்வு நலம் பெற... | கு. சோமசுந்தரம் | 01 -05 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 06 -10 |
| பழந்தமிழ் இலக்கியங்களில்... | நா. நல்லதம்பி | 11 -13 |
| வித்தகா உன் ஆடல் ஆர்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 14 -16 |
| கலகத்தரக்கர் பலர்... | முருகவே பரமநாதன் | 17 -21 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 22 -23 |
| ஈழத்துத் தமிழ், சைவப்... | மு.க. மாசிலாமணி | 24 -29 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 30 -31 |
| பரிபாடல் பகரும் பழுத்த... | அமரர் சிவ. சண்முகவடிவேல் | 32 -33 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 34 -39 |
| சிவ வழிபாட்டில் எமது தொண்டு | - | 40 -41 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 42 -46 |
| ஆடி மாதத்தின் மகிமைகள் | திருமதி பொ. செல்வக்காந்திமதி | 47 -48 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 49 -53 |
| ஐம்பூதங்களும் அருளும் | இரா. இராஜகோபால் | -54 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 55 -57 |
| குதிரையும் காதம் கிழவியும் காதம் | அ. சுப்பிரமணியம் | 58 -60 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 61 -62 |
| வருடாந்த மகோற்சவ... | சந்நிதியான் ஆச்சிரமம் | 63 -64 |
| மணிவாசகர் தந்த கோவை... | செல்வி ந. தில்லைநாயகி | -65 |
| தமிழகத் திருக்கோயில் வரிசை | வல்வையூர் அப்பாண்ணா | 66 -68 |



வருட சந்தா: 500/=. (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் ஆனிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஆனிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை ஆற்றுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) அவர்கள் தவிர்க்கமுடியாத காரணத்தால் வருகைதர முடியாத நிலையில் அவ் வெளியீட்டுரையினை ஆச்சிரமத்திற்கு வருகை புரிந்த செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையில் ஆச்சிரமம் செய்யும் பலவிதமான சமய, சமூகப் பணிகளின் தொகுப்பைக் கூடியிருந்த அடியார்களுக்கு விளக்கியதோடு அதில் காத்திரமான பங்களிப்பினை மாதாந்தம் வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் மலர் வகுக்கின்றது என்றதோடு பல இளம் எழுத்தாளர்களின் பலவிதமான ஆக்கங்களை உள்வாங்கி அவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கின்றது. இது ஒரு முன்மாதிரியான செயல் என்றும் கூறினார்.

அதனடிப்படையில் இம்மலர் மென்மேலும் வளர்ந்து பலவிதமான அறக்கருத்துக்களையும், சமயம் சார்ந்த செய்திகளையும் வெளிக்கொணர வேண்டுமெனச் சந்நிதி வேற்பெருமானை வேண்டி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

210ஆவது மலருக்கான மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய ஆசிரியர் திரு க. நவரெத்தினம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில் இம்மலர் வெளியிடப்பட்ட ஆரம்ப காலங்களில் தான் ஆசிரியனாக கடமை புரிந்துள்ளேன். இப்போது ஆசிரியத் தொழிலிலிருந்து இளைப்பாறியுள்ளேன். ஆனாலும் வருடாவருடம் வரும் ஆனிமாத மலருக்கான மதிப்புரையை ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை நிகழ்த்துவதற்கு சந்நிதி வேலவனது அருட்திறம் கிடைத்துக்கொண்டே இருக்கின்றது.

அவ்வகையில் காலத்துக்குக் காலம் இம்மலரின் வளர்ச்சியானது அபரிமிதமானதாகவே என்னால் நோக்கப்படுகின்றது. எத்தனையோ விதமான ஆக்கங்களையும், கவிதைகளையும் அவைபற்றிய கருத்துக்களையும் கூறியிருக்கின்றேன். இது ஒரு சாதாரண விடயமல்ல. இம்மலரின் பெறுமதிகூட ஆரம்ப காலத்தில் இருந்ததைப் போன்றே இப்போதும் இருப்பதும், அது எப்படி நடைமுறை சாத்தியமாகின்றது என்பது கூட வியப்பான காரியம். இவற்றுக்கெல்லாம் காரணம் சந்நிதியான் என்று கூறியதோடு மலரில் இடம்பெற்ற ஆக்கங்கள் பற்றிய மதிப்புரையை தனக்கேயுரிய பாணியில் கூடியிருந்த அடியார்களுக்கு வெளிப்படுத்தித் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

நமது மனமானது எப்பொழுதும் எதையோ நினைத்தபடியே இருக்கும். அப்படி இருக்கும் காலங்களில் நல்லவற்றையே எப்போதும் நினைக்க வேண்டும். நினைத்ததைச் செயலாற்ற வேண்டும். நல்ல நினைவு இல்லையெனில் எமது வாழ்வு சிதைந்துவிடும். தனக்கு உரியவற்றையே தான் அனுபவிக்கவேண்டும். தன் உடமை அல்லாதனவற்றை மனத்தினால்கூட நினைக்கக்கூடாது.

நினைவு எப்பொழுதும் இறைவன்மீது இருந்தால் துன்பமேயில்லை. வேறு நினைவிற்கே இடமில்லை. சிந்தனை முழுவதும் சிவன்பால் வைத்தவருக்கு தாம் அடிமை என்பார் சுந்தரர். எமது இன்றைய துன்பங்களுக்குச் சிந்தனை மாறுபாடே காரணம். இறைவழிபாடு, இறைசிந்தனை இவற்றிற்கு எமக்கு நேரமில்லை என்று நாள் முழுவதும் ஏதோ செய்கிறோம். தினமும் சில நிமிடநேரமாவது இறைவனை நினைத்து வழிபட வேண்டும். ஆலயத்திற்குச் சென்று வழிபாடு இயற்ற வேண்டும்.

நாம் உயர்ந்த ஆடை அணிகலன்களை அணிந்து கோயில்களுக்குச் செல்வதாலும் ஆர்வத்துடன் வணங்குவதாலும் இறைவனைக் காணமுடியாது. ஆலயச் சூழலில் உள்ள ஏழை, எளிய, வறுமை, நோய் முதலிய பிணிகளால் பீடித்துள்ள மக்களைப் பார்த்தும் பாராததும்போல் ஆலயத்திற்குச் சென்று வழிபடுகின்றோம். ஆலயங்களில் நாம் செய்யும் எதுவும் மக்களைச் சென்றடைவதில்லை. எனவே நலிவுற்றவர்க்கு உதவுவதே சைவசமயம் புகட்டும் பாடமாகும். சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று இல்லாமல் வாழ்வுடன் இணைந்து மானிட சமுதாயம் உய்யும் வண்ணம் ஒவ்வொருவரும் வாழவேண்டும். உலகில் உள்ள அனைத்து உயிர்களும் நலமாக வாழவேண்டும் என்று நினைக்க வேண்டும். ஆலயங்களுக்குச் சென்று தனக்கு மட்டும் வேண்டாது நாட்டில் இடம்பெற்றுவரும் சகல பாதிப்புக்களிலிருந்தும் எல்லாவிதமான இடர்களையும் களையும் வண்ணம் இறைவனை வேண்டுதல் செய்ய வேண்டும்.

நமது சமயத்தில் அன்றாடம் சமூகப் பணிகள், சமயப் பணிகள் செய்யுமாறு வலியுறுத்தப்படுகிறது. இவ்விதமாக சமய, சமூகப் பணிகளை ஆற்றும்பொழுது நாம் ஒடுங்கிய மனப்பான்மையிலிருந்து விலகி பரந்த மனப்பான்மையுள் உள்வாங்கப்படுகிறோம். “சமயம் வெறும் வயிற்றிற்கு உரியதல்ல” என்று இராமகிருஸ்ண பரமஹம்சரும், “கடவுளை அடைய சிறந்த வழி மனிதருக்கு சேவை செய்வதே” என்று சுவாமி விவேகானந்தரும் கூறியிருப்பதன் கருத்தினை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் மூல காரணமாக அமைவது மனம்தான். மனதுமது செம்மை யானால் மந்திரம் தேவையில்லை. அவ்வகையில் எமது மனம் நல்ல நினைவோடு இருக்குமானால் எல்லோரும் எல்லா நலமும் பெற்று வாழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி எழுந்தருளும் திருமுருகனின் பிள்ளைத்தமிழ்

(தொடர்...

## 1. காப்புப் பருவம்

### சிவபிரான்

அரியயன் தேடியுங்
காணா தயர்ந்திட
ஆதியாய்ச் சோதி யாகி
ஆன்மாக்க ளுய்யவே
அணைந்தும்வே றாகியும்
அவற்றை நல்வழிப் படுத்தியும்
உரிமையுடன் மும்மலம்
யானென தகற்றியும்
உய்யவே வழி துலக்கும்
உத்தமா சங்கரா
உயர் மகேஸ் வராவுனை
உளமொன்றி யான் வணங்குவேன்
ஒருமையுடன் தனைப்பணியும்
அடியவரைக் காத்திடும்
ஒப்பற்ற சிறுவ னானால்
ஓங்காரப் பொருள் தெரியாப்
பிரமனைக் குட்டியவன்
ஒரு தாதைக் கதையோதி னோன்
இருமையையுந் தரவல்ல
ஈழத்து வடபாலில்
எழிலான சந்நிதியிலே
இருந்துபெரு மற்புதஞ்
செய்து விளையாடு மோர்
ஏந்தல் எனைக் காக்கவே.

-முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர் 2015 ஆடி மலர்

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு ந. ஜவகர்லால்நேரு**
(லண்டன்)

**மாதர்க்கரசி பொன்னுத்துரை**
(கொழும்பு)

**T.கனகசபேசன்**
(கனடா)

**செல்வி தம்பு சறோஜா**
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)

**திரு இ. பேரின்பநாயகன்**
(நாவலர் பாலர் பாடசாலை ஸ்தாபகர், சுதுமலை)

**திரு Dr. V. ஸ்ரீஸ்காந்தன்**
(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)

**திரு சி. பஞ்சலிங்கம்**
(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)

**திரு வே. பாராளன்**
(தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)

**திரு S. தர்மரெத்தினம்**
(அதிபர், சிறுப்பிட்டி)

**திரு ச. நவரத்தினராசவேல்**
(அதிபர், வேல்பதி, புத்தூர்)

**திரு நா. இராசலிங்கம்**
(இளை. அத்தியட்சகர்)

**திரு செ, சுந்தரலிங்கம் J.P**
(நிர்வாகி சதா பொன்ஸ் கல்வி நிலையம், மாலி சந்தி)

**திரு ந. சேகர்**
(கிராம சேவையாளர், வீரபத்திரர்கோயிலடி, உடுப்பிட்டி)

**திரு கு. ஸ்ரீமுருகமூர்த்தி**
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)

**திரு சு.பொ. நடராசா**
(அண்ணா தொழிலகம், இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு த. கந்தசாமி
(இருபாலை வீதி, கோண்டாவில்)
செல்வி இ. வல்லிபுரம் ஆசிரியை
(நவக்கிரி)
திரு சு. சர்வேஸ்வரன்
(காளிகோயிலடி, மல்லாகம்)
திரு சுப்பிரமணியம் அருளானந்தசிவம்
(அல்லாரைவீதி, மீசாலை கிழக்கு)
திரு ச. நடராசா
(இளை. தபாலதிபர், மீசாலை)
திரு ச. இராசரத்தினம்
(நாவலர்வீதி, யாழ்ப்பாணம்)
திரு இ. மணிவண்ணன்
(யாழ்ப்பாணம்)
திருமதி உ. பேரானந்தம்
(பொற்பதிவீதி, கொக்குவில்)
திரு த. திருஞானசம்பந்தர்
(ஏழாலை வடக்கு)
திரு புஸ்பநாதன் பிரதீபன்
(உரும்பராய் வடக்கு)
திருமதி பூ. கனகம்மா
(மாசுவன் சந்தி, நீர்வேலி)
திரு க. குணசிங்கம்
(சாவகச்சேரி)
திரு இ. சிவஞானம் J.P
(புத்தூர்)
திரு N. குலசேகரம்
(வருணன், அச்சுவேலி)
திரு க.ம. செல்வரெத்தினம்
(நவாலி கிழக்கு, மானிப்பாய்)
திரு சி. தனபாலசிங்கம்
(புலோலி)
திரு இ. சிவராசா
(யாக்கரைவீதி, கரவெட்டி)
சிதம்பரப்பிள்ளை அனுஜா
(அல்வாய்)
செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை
(பொலிகண்டி)
திரு S. ஜெயசுந்தரம்
(சந்நிதி)
திரு நாகமுத்து சிவஞானம்
(புத்தூர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு வி. சிவபாலசிங்கம்
(கரன் பான்சி, சுன்னாகம்)
திரு க. ஸ்ரீஸ்கந்தராசா
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)
திரு M. பாலசுப்பிரமணியம்
(ஸ்ரீ முருகன் கபே, ஈவினை)
திரு மு. இராஜேந்திரன்
(முருகையா கோவிலடி, புலோலி)
திரு பொன். சற்குணநாதன்
(வேம்பன் வீதி, உரும்பராய்)
திரு சொ. செல்லத்துரை
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)
திரு நா. தெய்வேந்திரம்
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
திரு வி. தவத்துரைராசா
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)
சு. அனுஷியாதேவி
(முருகவாசா, சித்தங்கேணி)
திரு சி. கணேசமூர்த்தி
(அல்வாய்)
திரு தயானந்தன் சுஜந்தன்
(அச்சக வீதி, கொக்குவில்)
திருமதி ஜெயராணி கமலேஸ்வரன்
(ஈஸ்வரி வாசம், இணுவில்)
திரு செல்லப்பா சோமசுந்தரம்
((முன்னால் வங்கி முகாமையாளர் பகவதி கோயிலடி, உடுப்பிட்டி)
உரிமையாளர்
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)
திரு ச. சூரியப்பெருமான்
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
திரு மா. அருட்செல்வம்
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
திரு ச. சிவரூபன்
(சிறுப்பிட்டி)
திரு செல்லையா சர்வேஸ்வரன்
(செல்வறங்கம், இணுவில்)
திரு ஆ. மகேந்திரலிங்கம்
(வேம்போலை, இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமையாளர்**
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
**திரு சி. கருணா**
(கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)
**திரு மூ. பஞ்சலிங்கம்**
(நியூ கிளினிக், இணுவில்)
**செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்**
(யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(ரேவதி நகைமாடம், யாழ்ப்பாணம்)
**திரு செ. வாமதேவன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**திரு V. சேனாதிராசா**
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
**பிறேமதாஸ் சசிகலா**
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
**திரு ந. இராசரத்தினம் J.P**
(நாகம்ஸ் நிறுவனம், சுண்ணாகம்)
**செல்வி தர்மினி ரவிச்சந்திரன்**
(கட்டுடை, மானிப்பாய்)
**திரு க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திருமதி பொ. இரத்தினசோதி**
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
**திரு ச. கிருஷ்ணமூர்த்தி**
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
**திரு செ. அட்செயலிங்கம்**
(ஆசிரியர், அல்வாய்)
**திரு மூ.சிவலிங்கம்**
(காரைக்கால் வீதி, இணுவில்)
**திரு க. விகர்ணன்**
(குமரகோட்டம், கோண்டாவில்)
**திரு R. பொன்னுராசா**
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
**திரு S. தர்மலிங்கம்**
(கமலபதி மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
**திரு சி. குகநாதன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு நலம்பெற நாநலம் காப்போம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

நாம் நம் நாவினைத் தவறாது காத்தும்; அதன் நலம் பேணியும் வரவேண்டியது; வாழ்வில் அமைதியையும் இன்பத்தையும் விரும்பும் நம் அனைவரினதும் முதற் கடமையாகும். நாவுக்கு இரண்டு முக்கிய தொழிற்பாடுகள் உள்ளன. ஒன்று, சுவைத்தல்; மற்றையது பேசுதல் ஆகும். இவ்விரண்டும் நமக்கு இன்பத்தையும் இனிமையையும் தரக்கூடியன. அதேவேளை, துன்பத்தையும் துயரையும் கூடத் தரவல்லன. எனவேதான், வள்ளுவப் பெருந்தகையும், "யாகாவாராயினும் நா காக்க" என்று அழுத்திக் கூறுகிறார்.

இக்கட்டுரையில், நாவின் பேசுதல் பணிபற்றி நோக்குவோம். நாம் நாவினால் பேசும்போது; நன்கு சிந்தித்து, ஆராய்ந்து, இனிய பயனுள்ள சொற்களைத் தேர்ந்து பேச வேண்டும். பேச்சு, வாழவும் வைக்கும்; தாழ்த்தியும் விடும் வல்லமையுடையது. ஆக்கமும் கேடும் சொல்கின்ற சொல்லால், ஏற்படக்கூடியனவாக இருப்பதால்; பேச்சிலும் சரி, எழுத்திலும் சரி சொற்களில் தவறு நேராமல் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். நா நலம் என்பது ஒருவகைச் செல்வம் ஆகும். அது பாதுகாக்கப்பட வேண்டியது முறையும் அறமும் ஆகும். எனவே, எம்முடைய நாவினை மிகுந்த அவதானத்துடன் காத்து ஓம்பி வரவேண்டியது இன்றியமையாததாகும். அது பலதையும் பத்தையும் முன்பின் யோசனையில்லாமல்; யாருடன் பேசுகிறோம் என்ற உணர்வு இல்லாமல், பிறர் முன்னிலையில் உளறிவைத்து விடும் தன்மையது. பின்விளைவு பற்றி யோசித்துப் பேசுவது முறையாகும்.

பொய் பேசுதல், புறங்கூறுதல், வசை பேசுதல், வஞ்சினம் பேசுதல், ஏசுதல், திட்டுதல், வைதல், சபதம் செய்தல், பழியுரை பகர்தல், சாபம் இடுதல், தூற்றுதல், பழித்துரைத்தல், கெட்ட வார்த்தைகள் பேசுதல், சினந்து பேசுதல், அங்கதப் பேச்சு; நையாண்டி, கேலி, கிண்டல் செய்தல், பகிடிவதை செய்தல், வதந்தி பரப்புதல், பொல்லாங்கு பேசுதல், கடுஞ்சொல் பேசுதல், அண்டி வைத்தல் என்பனமூலம்; நாக்கு நமக்குப் பிரச்சினை களையும், வாழ்க்கை இடர்பாடுகளையும், இன்னல்களையும் வருவிக்கும் கருவியாக விளங்குகின்றது. அதனாலேயே, "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும், ஆறாதே வாயினாற் சுட்ட வடு" என்கிறது தமிழ்மறையான திருக்குறள்.

அதேவேளை, உண்மை பேசுதல், இன்னுரை பகர்தல், வாழ்த்துதல், போற்றுதல், அன்பை வெளிப்படுத்துதல்; அறிவுரை, அறவுரை வழங்குதல்; நல்லெண்ணங்கள், நற்சிந்தனைகளை வெளிப்படுத்துதல்; வாசித்தல், கற்றல், கற்பித்தல்; நல்லுறவு பேணல் ஆகியவற்றை நிகழ்த்தி உதவுதல்மூலம் மனிதர்களுக்கு அளப்பரிய சேவைகளையும், நன்மை களையும் நாக்குச் செய்கின்றது. பேசுதல், மொழிமூலம் நடைபெறுகின்றது. மொழி ஒரு தொடர்பாடல் சாதனம். அதனை இயங்கு நிலைக்குக் கொண்டுவந்து தொடர்பாடலை நிகழ்த்தும் கருவியாக அமைவது நாக்கு ஆகும். ஒலியின் பிறப்பிடம் நாக்கு; அதை இனிமையும் பொருளும் நிறைந்த பேச்சாகவோ, இசைப்பாடலாகவோ, உரையாடலாகவோ, உணர்வுகளாகவோ வெளிப்படுத்தி, மனிதகுலத்திற்கு நற்பணியும் நாவினாலேயே நிகழ்த்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவின் பணிகளை நன்குணர்ந்து; நமக்கோ, பிறருக்கோ; தற்காலத்திலோ, பிற்காலத்திலோ; அப்பணிகள் நன்மை பயப்பனவாயும், தீமை விளைவிக்காதனவாயும் அமையுமாறு, கண்காணித்துவரும் பாரிய பொறுப்பும் கடமையும் நம் ஒவ்வொருவரினது கடமை என்பதை உணர்ந்து, செயற்படுதல் வேண்டும்.

இன்சொல் வழங்குதல்; பொருள்கொடுக்கும் ஈகையைவிடவும் மிகச்சிறந்த ஈகையாகும். "ஈதல் அறம்" ஆகும் என்பது ஆன்றோர் வாக்கு. ஈகை எனும் அறம் செய்வதற்குப் பணம் இல்லையே என்று பலர் அங்கலாய்க்கின்றனர். பணத்திலும் பார்க்க மனம்தான் ஈதல் செய்வதற்கு முதற் தேவை. அதனாலேயேதான், ஔவையாரும், "அறஞ் செய்ய விரும்பு" என்று ஆத்திசூடியின் ஆரம்பப் பாடமாக கூறிவைத்தார். "யாவர்க்குமாம் இன்னுரைதானே" என்கிறார் திருமூலர்.

நல்ல பேச்சுக்கு இலட்சணங்கள் உண்டு; பேச்சு முறைகள், பேச்சுப் பண்புகள், அளவு என்பன உண்டு. அவற்றை அனுசரித்துப் பேசினால்; அந்தப் பேச்சினாலோ, உரையாடலினாலோ; தமக்கோ, பிறர்க்கோ எவ்வித பிரச்சினைகளோ, தொல்லைகளோ, இடையூறுகளோ ஏற்படாமல், தம்மையும் பிறரையும் காத்துக் கொள்ளலாம்.

நாம் பேசுகின்ற பேச்சுக்களினால் எவ்வளவு தூரம் பிறரின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது; பிறர் மனங்கள் புண்படுகின்றன; மனித உறவுகள் குலைந்து விடுகின்றன; வேதனைகள், துன்பங்கள், அவலங்கள் ஏற்படுகின்றன; என்பவற்றைச் சிந்தித்துப் பார்த்துச் செயற்படுவோர் தொகை தற்காலத்தில் மிகவும் அருகி வருகிறது. இருவரிடையே உள்ள இணைபிரியாத நட்புக்கூட; பேச்சினால், பகைமையாகிவிட்ட சம்பவங்கள் பல உள்ளன. வெறுப்பினை வளர்க்கும் பேச்சுக்கள், மனிதர்களிடையே; சமூகங்களிடையே; மதங்களிடையே; வேற்றுமைகளைப் பெருக்குகின்றன. அதேவேளை சமூக ஒற்றுமை, ஒருமைப்பாடு, நல்லிணக்கம், புரிந்துணர்வு, மனித நல்லுறவு என்பவற்றைச் சிதைத்தும் சீர்குலைத்தும் விடுகின்றன. வேற்றுமையில் ஒற்றுமை காணும் பாங்கும் பான்மையும்; வெறுப்புணர்வுகளைத் தூண்டும் பேச்சுக்கள், உரைகள் விவாதங்கள் என்பவற்றால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி விடுகின்றன.

நமது பேச்சுக்கள், ஒற்றுமைக்கு வழிவகுக்கிறதா; வேறுபாடுகள், முரண்பாடுகள், பகைமை என்பவற்றைத் தோற்றுவிக்கின்றனவா; என்பதை விவேகபூர்வமாக, முன்கூட்டியே, பகுத்தறிய வேண்டும். அவை வேறுபாடுகளை ஏற்படுத்துமானால், வெறுப்பைத் தூண்டுமானால், அவற்றைப் பேசாது தவிர்த்துக் கொள்ள வேண்டும். பேச்சுக்கள், அன்பு தழுவியும்; கருணை நிறைந்தும்; உணர்ச்சிகளைத் தூண்டாதனவாயும்; அதேவேளை வேற்றுமையில் ஒற்றுமை காணக்கூடிய நிலைப்பாட்டிற்கு இட்டுச் செல்லக்கூடிய வகையில் அமையுமானால்; அவை நிச்சயமாக ஆக்கபூர்வமான நல்லுரைகள், நற்பேச்சுக்கள், நல்ல கலந்துரையாடல்கள் ஆக அமையும்.

நமது எண்ணங்கள், செயல்கள் யாவும் ஒருமையை, ஒற்றுமையை நோக்கி நகர்கின்றனவா, அல்லது ஒருமையைக் குலைத்துப், பன்மையை, வேற்றுமையை வளர்க்கின்றனவா, என்பதை முதலில் நிச்சயித்துக் கொள்ள வேண்டும். செயலுக்கேற்ற விளைவையும் அறிந்து செயற்படுதல், நல்லவற்றைச் செய்யவும், அல்லாதவற்றைத் தவிர்க்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாயிருக்கும். "அல்லவை தேய அறம் பெருகும்" என்பது ஆன்றோர் வாக்கு. எண்ணம்தான் சொல் ஆகவும், செயல் ஆகவும் வெளிப்பாடாகிறது. எண்ணம் தூய்மையாக இருப்பின்; சொல்லும் செயலும் தூய்மையானவையாகவும்; ஒருமையை வளர்ப்பனவாயும், வேற்றுமை களைக் களைவனவாயும் அமையும்.

நாம் பேசும் பேச்சுக்கள், எவ்வாறு அமைய வேண்டும் என்பதை, நம் நாட்டவர், உலகம் போற்றும் அருட்குரு, சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்கள் பின்வருமாறு வரையறுத்துள்ளார். "உண்மையே பேசுக; நன்மையே பேசுக; அளவாகப் பேசுக; மெதுவாகப் பேசுக; இனிமையாகப் பேசுக; சிந்தித்துப் பேசுக; சமயமறிந்து பேசுக; சபையறிந்து பேசுக; பேசாதிருந்தும் பழகுக". சுவாமிகளின் இப் பொன்மொழிகளை, பகிரங்க மேடைப் பேச்சாளர்கள்; மற்றும் விவாதம், உரையாடல்கள், நாளாந்தப் பேச்சுக்கள் என்பவற்றில் ஈடுபடுவோர், அனுசரித்துத் தமது பேச்சுக்களை நிகழ்த்துவார்களேயானால், ஒரு பொல்லாப்பும் நேர்ந்து விடாது. குடும்பங்களில்; கணவன் மனைவிக்கிடையிலோ; பெற்றோர், பிள்ளைகளுக்கிடையிலோ ஏற்படும் தகராறுகள், பிரச்சினைகள், சண்டை சச்சரவுகள் யாவும் தோன்றுவதற்கும், தொடர் வதற்கும்; ஈற்றில் பிரிவுகள், கோபதாபங்கள் நீடித்து நிலைப்பதற்கும் காரணமாக அமைவது, அவர்கள் ஒருவருக்கொருவர், விட்டுக்கொடாமல், ஏட்டிக்குப் போட்டியாக நிகழ்த்துகின்ற வாய்த்தர்க்கங்கள், கடுஞ் சொற்பிரயோகங்கள், சொற்போர் என்பனவேயாகும். விடாக் கொண்டன், கொடாக் கொண்டன் நிலைமை, சம்பந்தப்பட்ட இருதரப்பினர்கள் மத்தியிலும் தொடர்வதாலேயே, பேச்சு வார்த்தைகள்மூலம் பிரச்சினை தீர்த்தல் முயற்சிகள் பெரும்பாலும் இழுத்தடிக்கப்படுகின்றன. அல்லது தோல்வியடைகின்றன.

ஆக்கபூர்வமான, தூய்மையான, ஜனநாயகப் பண்புகள் தழுவிய பேச்சு வார்த்தைகள்; பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கும், அமைதியை நிலை நாட்டுவதற்கும், உரிய மிகச் சிறந்த வழியாகும். விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, தியாகம், பொறுமை, இன்சொல் வழங்குதல் ஆகிய விழுமியப் பண்புகள், பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் தரப்பினர்களால் நன்கு கடைப்பிடிக்கப்படுதல், வெற்றிக்கு மிக இன்றியமையாததாகும். நாநலம் வெற்றிக்கு வித்தாகும். அதனாலேயே, வள்ளுவர் "நா நலம் என்னும் நலனுடைமை, அந்நலம் யாநலத்து உள்ள தூஉம் அன்று" என்கிறார். நாவன்மை எனும் நாநலம் இன்றியமையாச் செல்வம் ஆகும். அதன் நலம் காத்து ஓம்புதல் அறம் ஆகும்; அமைதிக்கு வழியுமாகும். உலக சமாதானம், சமூகங்களுக்கிடையே சமாதானம், குடும்ப அமைதி, தனிமனித அமைதி என்பவற்றில் சிரத்தை கொள்பவர்கள்; இதயபூர்வமாக முயற்சிப் பவர்கள் ஆகியோர், தத்தம், நாநலம் பேணிவருவதில் கண்ணுங் கருத்துமாக இருத்தல் அவசியம்.

பிறர் குற்றங்குறைகளை வலிந்து ஆராய்ந்து காணல்; பிறர் குறைகளையே மற்றை யோரிடம் பேசிப் பேசிக் காலத்தை வீணாக்குதல்; பிரசாரஞ் செய்தல்; தன் குற்றங்களை மறைத்தல்; தற்புகழ்ச்சியில் ஈடுபடல், வதந்தி பரப்புதல் என்பன இன்று பலரின் வாழ்க்கைப் பழக்கமாகி விட்டது. இருவர் சந்தித்தால், அவர்கள் பேச்சுக்களில் பெரும்பகுதி, பிறரின் குற்றங் குறைகளைப் பட்டியல் இட்டுப் பேசுவதாகவே இருக்கின்றது. சுவைபடப் பேசுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதானோ, என்று எண்ணத் தோன்றுகிறது. இதனால் இவர்களுக்கு என்ன நன்மை ஏற்படப் போகின்றது, என்பதுதான் புரியாத புதிராக உள்ளது. பிறரிடம் நிறைகள் இருப்பதைத் தெரிந்தும், தெரியாதவர்போல் நடிப்பதில் வல்லவர்கள் இவர்கள். நிம்மதி, அமைதிக் குறைவுக்கும், குலைவிற்கும் இதுவும் பங்களிப்புச் செய்கின்றது. பிறரைத் தாழ்த்திப் பேசுவதால், தன் மதிப்பு சமூகத்தில் உயரும், என்பது பிழையான நிலைப்பாடு "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாட்களுக்குத்தான்" என்பது பொருள் நிறைந்த கூற்று.

"இனிய உளவாக இன்னாத கூறல்; கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இனிய சொற்கள் தாராளமாகத் தமிழ் மொழியில் இருக்கத் தக்க தாக; இன்னாத, கசப்பான வார்த்தைகளை, ஏன் தேடிப் பிடித்துப் பேச வேண்டும்? சுவையான இனிக்கும் கனியைக் கையில் வைத்துக்கொண்டு, கசப்பான காயைத் தேடித், தெரிந்து உண்பது போன்றதே இதுவாகும். மனிதர்களில் நிறைகள், நல்ல குணநலன்கள் இருக்கத் தக்கதாக; அவர்களின் குறைகளையும் குற்றங்களையும் மாத்திரம் கண்டுபிடித்துப் பேசுவதும், தூற்றுவதும்; கனியிருக்கக் காய் கவர்ந்து உண்பது போன்றதேயாகும். வன்மொழியால், வசைமொழியால், தூற்றுதலால் யாரும் தம் குற்றங்களை உணர்ந்து திருந்தியதாக இல்லை. இன்னும் பகைமைக்கும், வெறுப்புணர்வு மிகுதற்கும், வழிவகுத்ததாகவே அமையும். "நீ உன்னைத் திருத்திவிடு; உலகம் திருந்திவிடும்" என்பது சத்திய வாக்கு.

நிறைவாழ்வு வாழ விழைபவர்; தம்மைப்போன்று மற்றையோரும் குற்றமற்ற நிறைவான வாழ்வு வாழவேண்டும் என்று விரும்புபவர்; பின்வரும் சாதனையில் ஈடுபட வேண்டும் என்கிறார் சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்கள்.

"நிறைவினை விரும்பும் நெஞ்சமே கேள் நீ
குறை நினையாதே, குறை பேசாதே
குறை செய்யாதே, குறை கேளாதே
குறை காணாதே, குறைவின்றி வாழி"

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன் கொலோ, வன் சொல் வழங்குவது" என்கிறது தமிழ்மறை. இனிய சொற்களைப் பேசுவதால் இன்பம் பயத்தலைக் காண்கின்றவர் எவரும், துன்பம் பயக்கும் வன்சொற்களைப் பேசி, அமைதியைக் கெடுக்க மாட்டார்கள்.

நல்லவற்றையே நினைக்க நெஞ்சத்தையும்; வாழ்த்துவதற்கே வாயையும்; தாழ்த்தி வணங்குவதற்காகவே தலையையும் இறைவன் நமக்கு அளித்துள்ளான் என்கிறார் ஓர் அருளாளர். "தலையே, நீ வணங்காய்", "வாயே வாழ்த்து கண்டாய்", "செவிகாள் கேண் மின்களோ", "நெஞ்சே நீ நினையாய்" இவை அப்பரடிகளின் அருள்வாக்குகள். இவை இறைவனை நோக்கியதாக அமைந்திருப்பினும்; சகல உயிரினங்களையும் உள்ளடக்கி, அவற்றை நோக்கியதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எல்லா உயிர்களிலும், உயிரற்றவைகளிலும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன் என்பது சைவ சமயத்தின் நிலைப்பாடு. அந்த அடித்தளத்தில் நின்று, இவ் அருள் வாக்குகளை நோக்கவேண்டியது, இன்றைய காலத்தின் தேவையும் கட்டாயமும் ஆகும். அந்த வகையில், இறைவனைத் தலை தாழ்த்தி வணங்குதல், நினைத்தல், போற்றுதல், பணிதல், அவன்புகழ் கேட்டல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துதல் என்பதால்; இறைவன் நீக்கமற நிறைந்திருக்கின்ற சகல உயிரினங்களையும், மனிதர்கள் உட்பட அனைவரையும் வாழ்த்துதல், நிறைவுகளைப் பேசுதல், வன்மொழிகள் பேசாதிருத்தல் என்பதாகவே அமையும். மாறாக நடந்தால், அல்லது வன்சொல் பேசினால், அது இறைவனை நிந்தித்ததாகவே அமையும் என்பதை நாம் ஒவ்வொருவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

நல்லனவற்றை, நன்மை பயப்பனவற்றைப் பேசுதலே மனிதத் தன்மையாகும். ஆன்மிகமும் ஆகும் என்பதை உணர்ந்து நாநலம் காத்து ஓம்பி வாழ்வில் நலமும் பலமும் பெற்று அமைதி வாழ்வு வாழ்வோமாக. "ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்; காத்தோம்பல் சொல்லின் கண் சோர்வு" என்பது வள்ளுவர் வாக்கு. ஆக்கமும் கேடும்; நன்மையும் தீமையும், சொல்லுகின்ற சொல்லால்; பேசுகின்ற பேச்சின் தன்மையால், வருதலால்; பேசுபவர் தமது சொல்லில், பேச்சில், தவறு நேராமல் காத்துக் கொள்ள வேண்டும். சொல்லால் வருங்குற்றம், சிந்தனையால் வரும் தோஷம், மிகப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைக் கருத்திற் கொள்வோமாக.

## அல்லல் அகலக் கொடி ஏற்றுகிறான்

பச்சை மயிலேறிவரும் பாலகனே கந்தன்
பாலன் எனப் பரிகாசம் செய்த சூரனை வதைத்த வீரத்தலைவன்
மாலவன் மருகன் பார்வதி பாலன்
வேலனாகச் சந்நிதியை ஆளும்
வெற்றிச் செல்வன் சரவணபவன்
சந்நிதியில் இன்று அல்லல் அகல கொடி ஏற்றுகின்றான்.

திக்கெல்லாம் திரண்டு போற்றும்
தேவரின் தானைத் தலைவன்
தக்கனின் பேரன் தமிழின்
தனிப்பெருந் தெய்வக் குமரன்
துயரங்கள் மடிய கொடி ஏற்றுகிறான்

-க. சரவணபவன்-

நாத ஒலி முழங்கும் சந்நிதிப் பதியிலே
வேத ஒலி பரவ வேலன் கொடி அசையும்
வடிவேலன் கொடி கூறும் வலுவான தத்துவங்கள்
குடிவாழக் குறைதீர்க்கும் குணமா னமருத்துவமே
கொடி இன்று ஏறட்டும் கொடுமை நீறாகட்டும்
குடி என்றும் வாழட்டும் குமரன்எமை ஆளட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போற்றித் திருவகவல்

(தொடர்ச்சி...

## சகத்திநுற்பத்தி


(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த

சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்

(யாழ்ப்பாணம் - காரைநகர்)



புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர விசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த வொருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி



**பதவுரை:-**

புலி முலை புல்வாய்க்கு அருளினை போற்றி- ஒரு புலி தனது முலையை ஒரு புல்வாய் மான் கன்றுக்கு ஊட்டுமாறு அருள் செய்தவனே நினக்கு வணக்கம்; அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி- அலைகளையுடைய கடலின் மேலே நடந்தவனே நினக்கு வணக்கம்; கருங்குருவிக்கு அன்று அருளினை போற்றி- கருங்குருவிக்கு அக்காலத்தே அருள்புரிந்தவனே நினக்கு வணக்கம்; இரு புலன் புலர இசைந்தனை போற்றி- பெரிய ஐம்புல அவாக்களும் இயல்பாகவே அவிந்து போகும்படி அமைந்தவனே நினக்கு வணக்கம்; படி உற பயின்ற பாவக போற்றி- நிலத்தின் கண்ணே பொருந்தப் பலகாலும் காட்டிய திருவுருவங்களை உடையவனே நினக்கு வணக்கம்; அடியொடு நடு ஈறு ஆனாய் போற்றி- முதலும் நடுவும் முடிவுமானவனே நினக்கு வணக்கம்; நரகொடு சுவர்க்கம் நால் நிலம் புகாமல்- துன்பவுலகத்திலும் துறக்கவுலகத்திலும் பூவுலகத்திலும் போகாதபடி, பரகதி பாண்டியற்கு அருளினைப் போற்றி- மேலான வீடு பேற்றினைப் பாண்டியற்கு அருளினவனே நினக்கு வணக்கம்; ஒளிவு அற நிறைந்த ஒருவ போற்றி- நீ இல்லாத இடம் இல்லையாம் படி எங்கும் நிறைந்த ஒப்பில்லாதவனே நினக்கு வணக்கம்; செழுமலர் சிவபுரத்து அரசே போற்றி- செழுமையான பூக்கள் நிறைந்த சிவலோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதனே நினக்கு வணக்கம்; கழுநீர் மாலை கடவுள் போற்றி- செங்கழுநீர் மாலையைத் தரித்த கடவுளே நினக்கு வணக்கம்.

புலிமுலை புல்வாய்க்கருளிய வரலாறு:

முன்னொரு காலத்திலே கடம்பவனத்தின்கட் புலிகள் நெருங்கிவரப் புல்வாய் மான்கள் அருகி வந்தன. இறுதியில் ஒரு புல்வாய் மான்பிணை தான் ஈன்ற கன்றை ஓரிடத்தில்விட்டு அவ்வனத்தின்கணுள்ள ஒரு வாவியின்கண் நீர் பருகச் சென்றபோது அதனை ஒரு வேடன் அம்பால் எய்தான். அது தன் கன்றை நினைந்து வருந்தி வீழ்ந்து இறந்தது. எல்லாவுயிர்க்கும் தாயாகி எங்கும் நிறைந்த இறைவன், அவ்வனத்து வேறு மான்பிணை இல்லாமையால் அருகில் உலாவிய பெண்புலியை அதற்குப் பாலூட்டுமாறு ஏவ அதுவும் அவ்வாறே சென்று அப்புல்வாய் மான் கன்றுக்கு முலைப்பால் ஊட்டி அதனை வளர்த்து வரலாயிற்று என நம்பி திருவிளையாடற்புராணம் கூறாநிற்கும். இத்திருவிளையாடலை,

"தழல்விழிப் பேழ்வாய்த் தரக்கின் றுளிமுலை
பைங்கட் புல்வாய் பாலுணக் கண்ட
வருணிறை பெருமானிருணிறை மிடற்றோன்" (40:19-21)

எனக் கல்லாடமும்,

"பொன்னெயிற் கடம்ப வனத்துபுல் வாய்க்குப் புலிமுலை
யளித்தபுண் ணியம் போல்" (பரத்து 59)

எனத் திருக்காளத்தி புராணமும் கூறும். புல்வாய்- ஒருவகை மான். "புல்வாய் நவ்வி யுழையே கவரி" எனத் தொல்காப்பியத்து (மரபு 57) வருதலும் காண்க.

அலைகடல் மீமிசை நடந்தாய் என்றது இறைவன் வலைஞர் கோலத்திற் சென்று, கடலுள் திரிந்து வலைஞர்களைத் துன்புறுத்திய கெளிற்று மீனைப் படுத்த திருவிளையாடலைக் குறித்தது.

"கேவேட ராகிக் கெளிறது படுத்தும்" கீர்த்தி 17.

"ஆரா வமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனை" அம்மானை 2.

"பெருந்துறையெம் பேரருளாளன்பெண் பாலுகந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும் வகையறிவார்" வார்த் 3.

"மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே" திருப்படை1.

என அடிகள் பிறாண்டும் அருளியமை காண்க. இத்திருவிளையாடலை,

"நெடுஞ்சடைக் கிடந்த குறும்பிறைக் கொழுந்துங்
கருமுகில் வெளுத்த திருமிடற் றிருளு
நுதன்மதி கிழித்த தறலவிர் நோக்கமு
மறைத்தொரு சிறுகுடிப் பரதவ னாகிப்
பொன்றலைப் புணர்வலை கொடுங்கர மாக்கி
நெடுங்கடல் கலக்கு மொருமீன் படுத்த
நிறையரு ணாயகன்" 17:23-9.

எனக் கல்லாடம் கூறுதலுங் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருங்குருவிக் கருளிய வரலாறு:

முன்னொரு காலத்திலே கருங்குருவிகள் எந்நாளும் காக்கைக்கு ஒளித்து அஞ்சி உழல்கையில் அவற்றுள் மிக்க அறிவுள்ளதொரு குருவி "இப்பூவுலகில் யாவர்க்கும் பகையுண்டு; அதனை வெல்வாருமுண்டு, எனத் தன்னுள் ஆராய்ந்து கூற்றங்கெட வுதைத்த இறைவனின் திருப்பாதம் பணிந்து பகை வெல்வோம் எனத் தெளிந்து பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி ஆலவாய் இறைவனை வலம்வந்து வழிபட்டு வந்தது. கருங்குருவியின் கருத்தினை அறிந்த இறைவன் இரங்கி யமனையும் வெல்லத்தக்க ஆற்றலைத்தரும் மூன்றெழுத் தாலாகிய மிருத்தியுஞ்சயம் என்னும் மந்திரத்தை உபதேசித்தருளினார். குருவியும் இறைவனை வணங்கி அம்மந்திரத்தைச் செபித்துக் காக்கை முதலிய பறவைகளை வெல்லவல்ல திறம்பெற்று அதனால் வலியான் என்னும் பெயரும் பெற்றது என நம்பி திருவிளையாடற்புராணம் கூறும். இவ்வரலாறு.

"பலகுறி பெற்றிவ் வுலகுயி ரளித்த
பஞ்சின் மெல்லடிப் பாவை கூறாகிக்
கருங்குரு விக்குக் கண்ணருள் கொடுத்த
வெண்டிரு நீற்றுச் செக்கர் மேனியன்" 40:6-9.

இரும்புலன் என்றது பெரிய ஐம்புல அவாக்களை. அவை இயல்பாகவே அவிந்து போகும் வண்ணம் அமைந்தவனாதலின் "இரும்புலன் புலர இசைந்தனை என்றார். "பொறிவாயிலைந்தவித்தான்" என்றார் திருக்குறளினும். இனி இறைவன் அருள்வழி நின்று அவனை நோக்கும் உயிரின்கண் ஐம்புல அவாக்களும் கெட்டொழிதல் பற்றி "இரும்புலன்புலர இசைந்தனை" என்றார் எனினுமாம்.

படி- நிலம். குறள் 606 பரிமேல். பாவகம்- உருவம். "பாவகம் பலபல காட்டிய பரிசும்" (கீர்த் 82) என வருதல் காண்க. இறைவன் அடியார்க்கருள் செய்யும் பொருட்டு நிலமிசைப் பலகாற்கொண்ட திருவுருவங்களையுடைமையின் "படியுறப் பயின்ற பாவக" என்றார். இறைவன் படியுறப் பயின்ற பாவகங்கள் பலவற்றைக் கீர்த்தித் திருவகவலுட் காண்க.

ஆதியுமந்தமுமில்லாத இறைவன் உலகத்திற்கு ஆதியாயும் அந்தமாயுமிருத்தலால் நடுவாயுமிருத்தல் அமையுமாதலின் "அடியொடு நடு ஈறானாய்" என்றார். இறைவனுக்கு "ஆதி மந்தியாந்தரகிதர்" என்னும் திருநாமமுண்மையும் ஈண்டறியற்பாலது.

"முந்தும் நடுவும் முடிவுமாகிய மூவரறியாச்
சிந்துரச் சேவடி யானை" குயில் 5.
"முந்திய முதல்நடு விறுதியு மானாய்" பள்ளி 8.

என இத் திருவாசகத்தும்,

"அந்தநீர் முதனீர் நடுவா மடிகேள்" ஞான 138:7.
"ஆதியாய் நடுவா யந்தமாய் நின்றவடிகளார்" ஞான 377:6.
"முதலாகி நடுவாகி முடிவானானே" நாவு 218:3.
"ஈறுந்நடுவு முதலுமாவா ரிடைமருது மேவியிடங் கொண்டாரே" நாவு 231:1.
"முடியாதே முதனடுவு முடிவானானை" நாவு 287:3.

எனத் தேவாரத்தும் வருவன காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகு சுவர்க்கம் என்பன வடசொல்லினின்றும் தோன்றியவை. நரகு- தீவினையாளர் துன்புறும் உலகு. ஓடு, எண்ணொடு, சுவர்க்கம்- நல்வினையாளர் இன்புறும் உலகு. நானிலம்- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நாற்பெருங் கூற்றினையுடைய நிலவுலகம். குறிஞ்சி முல்லை பாலை, மருதம் நெய்தல் என நிலம் ஐந்தாகவும் நானிலம் என்றது என்னையெனின், முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து பாலை யென்பதோர் படிவம் கொள்ளுதல் பற்றியாகும்.

"அவற்றுள்,
நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே" (அகத் 2)

எனத் தொல்காப்பியத்து வருதலுங் காண்க.

0 மலையத்துவச பாண்டியனுக்குத் திருமகளாகத் தோன்றிய 00 தடாதகைப் பிராட்டியாரை இறைவன் திருமணஞ் செய்து, இந்திரனோடொருங்கிருந்த அப்பாண்டியனைச் சுவர்க்கத்தினின்றும் வருவித்து ஏழ்கடலில் தீர்த்தமாடுவித்து வீடு நல்கியமையின் 'நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற், பரகதி பாண்டியற் கருளினை' என்றார்.

"மன்று ணாயக வாழ்ந்தனம் வாழ்ந்தன
மென்று வாழ்த்தி யிறைஞ்சல்கண் டுத்தம
னன்று தன்னுல கீந்திட வாங்கவர்
சென்ற டைந்தனர் தெய்வத் தனுக்கொடு" (9:9)

என நம்பிதிருவிளையாடற்புராணத்து வருதலுங் காண்க.

ஒப்பற்றவனாகிய இறைவன் சட சித்துக்களிலெல்லாம் நீக்கமற நிறைந்திருத்தலின் "ஒழிவற நிறைந்த வொருவ" என்றார்.

"பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கு
மொழிவற நிறைந்து மேவிய பெருமை" அண்டப் 115-6.
"ஒழிவற நிறைந்த யோகமே" பிடித்த 1.

என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

"எங்குமாகி நின்றானும்" ஞான 142:6.
"உலகெலாஞ் சோதியாய் நிறைந்தான்" ஞான 142:7.
"எவ்விடத்து முள்ளான் றன்னை" நாவு 225:3.
"எவ்விடத்து நீயலா தில்லை" நாவு 276:8.
"ஒழிவற நின்றெங்கு முலப்பிலான் காண்" நாவு 299:6.

என தேவாரத்தும்,

---

0 மலையத்துவசன்- பொதியின் மலையின் உருவமெழுதிய கொடியையுடையவன். "மன்னுமாதவம் பெருகியமலைக்கொடி மன்னன்" (நம்பி திருவிளை 4:1) என வருதல் காண்க. இவன் அகத்திய முனிவர் அருளாற் பிறந்தவனாதலின் அம்முனிவர்க்கு இருப்பிடமாயுள்ளதும் துவசம்போல உயர்ந்து தோன்றுவதுமாகிய பொதியின் மலையின் தொடர்பான பெயரை அவனுக்கு இட்டனர் என்று அஷ்டமிப் பிரதட்சிண மான்மியம் கூறுகின்றது.

00 கல்லாடம் 31:10-21 பார்க்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒழிவற நிறைந்த மதிசேர் செஞ்சடை,
ஒருவன்"

என ஞானமிர்தத்தும் வருவனவும் ஈண்டறியற்பாலன. "ஒழிவற நிறைந்த ஒருவன்" என்பதற்கு "அணுப் புதைக்கவும் இடமின்றிச் * சடசித்துக்களெல்லாம் நிறைந்த.... உவமனில்லாத பரமேசுவரன், எனவும் (53:23-4 உரை), 'சர்வ வியாபகமாய் நிறைந்த ஏகன்' எனவும் (55:7 உரை). பொருளுரைப்பர் ஞானாமிர்தம் பழையவுரைகாரர்.

சிவபுரம்- சிவலோகத்துள்ளது. "சீரார் சிவலோகந் தன்னுட் சிவபுரத்தில், ஏரார் திருக்கோயிலுள்ளிருப்ப" எனத் திருக்கைலாய ஞானவுலாவில் (9) (பதினோராந்திருமுறை) வருதலுங் காண்க. இனி. "பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம் போற் கொண்டாடும், உத்தர கோசமங்கையூர்" (தசாங் 2) என அடிகள் அருளுமாற்றால் பார்மேற் சிவபுரம் உத்தரகோச மங்கை எனினுமாம். "திருப்பெருந்துறையில் நின்றமலர்க் குருந்த மேவியசீர் ஆதியே" (1) என அருட்பத்தில் அடிகள் அருளிச் செய்தமையின் "சிவபுரம்" திருப்பெருந்துறையெனல் அமையாதோவெனின், "சிவபுரத்தரசே திருப்பெருந்துறையுறை சிவனே" (வாழாப் 1) எனச் சிவபுரத்தின் வேறாகத் திருப்பெருந்துறை கூறப்படுதலின் அமையாதென்க. "இனிச் சோழநாட்டிலுள்ள சிவதலம் எனினுமாம். "பொன்கரை பொரு பழங்காவிரியின், றென்கரை மருவிய சிவபுரமே" "பண்டமர்தரு பழங்காவிரியின், தெண்டிரை பொருதெழு சிவபுரமே" எனத் தேவாரத்து (ஞான 112:10) வருதலுங் காண்க.

சிவபுரத்தரசனாகிய இறைவன் அடிகளை ஆட்கொண்டபோது அணிந்தருளியது செழுங்கழுநீர்மாலையாதலின் "கழுநீர் மாலைக் கடவுள்" என்றார்.

"காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற வணிந்தும்" (113-4)

எனக் கீர்த்தித் திருவகவலில் வருதலுங் காண்க.

(தொடரும்...

---

* சடசித்துக்கள் என்றார் பொருள்கள் எல்லாம் சடப்பொருள், சித்துப்பொருள் என இரண்டாய் அடங்குதலின். இறைவன் சடப்பொருள்களில் நிறைந்திருத்தலை, "புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய் நிலனைந்தாய்க் கரண நான்காய், அவையவைசேர் பயனுருவாய் அல்லவுருவாய் நின்றான்" (ஞான 129:7) எனவும், "உரைசேரு மெண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேத, நிரைசேரப் படைத்தவற்றினுயிர்க் குயிராய் அங்கங்கே நின்றான்" (ஞான 132:4) எனவும் தேவாரத்து வருவனவற்றாலுமறியப்படும்.

## குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆகஸ்ட் 25 | ஆவணி 08 | செவ்வாய் | குங்கிலியக்கலயர் |
| செப்ரெம்பர் 09 | ஆவணி 23 | புதன் | நீலகண்ட சிவாச்சாரியார் |
| செப்ரெம்பர் 27 | புரட்டாதி 10 | ஞாயிறு | கடையிற்சுவாமி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழ் இலக்கியங்களில் மகளிர் மாண்பு

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

மகாபாரதம் உலக இலக்கியங்களிலே தலை சிறந்த காவியம். உலகமென்ற நாடக மேடையிலே மனித குலத்திலே தோன்றி நடித்து மறைந்த அத்தனை பாத்திரங்களையும் பாரதக் கதையில் காணலாம்.

இந்தப் பாரதக் கதையை வேதவியாசர் சொல்லச்சொல்ல விநாயகக் கடவுள் எழுதினார் என்று சொன்னால் இந்துக்கள் ஆகிய நாம் பெருமைப்படுகிறோம். இந்துதர்மமும் தமிழ் மொழியும் இறைவன் படைப்புக்கள்!

இத்தகைய சிறப்புவாய்ந்த பாரதக் கதையிலே வருகின்ற மகளிரில் காந்தாரி, குந்திதேவி, பாஞ்சாலி ஆகியோரின் மாண்பு பற்றி முதலில் பார்ப்போம். அத்தினாபுரத்தை ஆட்சிசெய்த திருதராட்டிரனும் பாண்டுவும் அண்ணனும் தம்பியும். திருதராட்டிரன் பிறவிக் குருடன். அவனது மனைவி காந்தாரி. விதிவசத்தால் கபோதி மன்னனை மணஞ்செய்த காந்தாரி, தானும் தனது கண்களை மூடி மறைத்துக் கொண்டு வாழ்ந்தாள் என்ற பெருமை யுடைய கற்புக்கரசியாக விளங்கினாள். ஆனால் அவளால் தனது பொறாமைக் குணத்தை மறைக்க முடியவில்லை. அதன் விளைவாக அவளது மக்கள் நூறுபேரும் தீமை நிறைந்த வர்களாகப் பாண்டவர்கள் ஐவருக்கும் தீமை செய்பவர்களாகவே வாழ்கிறார்கள். பாண்டவர் களுடைய வீரம், நற்குண நற்செய்கைகளினால் அவர்களுக்குள்ள புகழ் பெரியோர் நட்பு என்பவற்றைக் கண்டு காந்தாரி பொறாமையில் மூழ்கியிருந்தாள். தாயைப்போலப் பிள்ளைகளும் இருந்தார்கள்.

பாரதப்போரில் துரியோதனன் முதலிய காந்தாரியின் பிள்ளைகள் நூறுபேருமே இறந்து போகிறார்கள். அப்போதும் அவள் திருந்தவில்லை. தனது கற்பின் திறத்தால் ஸ்ரீ கிருஷ்ணனின் யாதவ குலத்தை அழித்துப் பழிதீர்க்கிறாள். அதனால் தனது கற்பின் வலிமையையும் இழந்து போகிறாள்.

குந்திதேவி யாதவ குலத்தவள். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அத்தை முறையினள். அதனால் பஞ்சபாண்டவருக்கும் கிருஷ்ணனுக்கும் நட்பும் பக்தியும் சேர்ந்த தொடர்பு உண்டு. கிருஷ்ண னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான பாண்டவரையும் குந்திதேவியையும் உதவியாக்கிக் கொண்டு தனது அவதார நோக்கத்தை கிருஷ்ண பகவான் செய்து முடித்தார் என்றால் அதில் மிகை இல்லை. இவ்வளவு செல்வாக்கு இருந்தும் குந்திதேவி திருதராட்டினனுடைய குடும்பத்துக்கு எதுவித தீமையும் எண்ணாமல் வாழ்ந்துள்ளாள். பொறுமையுள்ளவளாக (பிச்சையெடுத்து வாழ்ந்தபோதும்) குந்திதேவி வாழ்ந்து பெருமை பெற்றாள். அரக்கு மாளிகையில் குடியேற்றிக் கொல்ல எண்ணிய துரியோதனனுக்கு கந்தர்வர்களால் துன்பம் நேர்ந்தபோது, பாண்டவர் உதவி செய்து காப்பாற்றிப் பெருமை பெற்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதக் கதையிலே மிகவும் முக்கியமான பாத்திரம் பாஞ்சாலி என்று சொல்லப் பெறும் திரௌபதி. துருபத மன்னனின் தவச் செல்வியான திரௌபதி, அர்ச்சுனனை மணஞ்செய்வதற்கென அவதரித்து ஐவருக்கும் மனைவியான கற்புநிலை பெற்றவள். துச்சாதனன் துகிலுரித்து மானபங்கஞ் செய்தபொழுதும் கிருஷ்ண பக்தியினால் அந்தத் துச்சாதனனைச் சோர்வடையச் செய்தாள்; தான் சாபம் போடவில்லை.

ஒருமுறை கிருஷ்ண பகவான் பாஞ்சாலி வீட்டுக்குப் போய் தனக்கும் தன்னோடு வந்துள்ள முனிவர்களுக்கும் மதிய உணவு தரும்படி கேட்டார். அந்தநேரம் குடும்பத்தவர் உணவு அருந்தியபின் பாத்திரங்களும் காலியாக இருந்தது. இனிமேல் சமைத்துத்தான் தரலாம் என்று பாஞ்சாலி பயபக்தியாகச் சொன்னாள். "எங்கே பானையைப் பார்ப்போம்" என்று கிருஷ்ணர் பானையைப் பார்க்கும்போது, ஒரு சோற்றுப் பருக்கை அதில் ஒட்டி இருந்ததாம். அதை எடுத்து வாயிற் போட்டு, வயிற்றைத் தடவி ஏப்பம் விட்டதாம் இந்த விளையாட்டுப் பிள்ளை! அந்த நேரம் நீராடச் சென்ற முனிவர்கள் வந்து சேர்ந்தார்கள். எங்களுக்கு வயிறு நிறைந்து விட்டது. உணவு தேவையில்லை என்றார்களாம்.

உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து (குறள் 105)

இவ்வாறு ஒரு சோற்றுப் பருக்கையாலே புகழ் பெற்றாள் பாஞ்சாலி.

மேலும் "உண்மைக்கு அரிச்சந்திரன்" என்று இலக்கியமாகிவிட்ட அரிச்சந்திரனுக்கு மனைவியாகிய சந்திரமதி, அரச போகத்தை இழந்து தாதியாகி அந்தண வீட்டில் வாழ்ந்த போதும் தனது கற்பு நிலையை இழக்கவில்லை. கோபத்துக்குப் பெயர் பெற்ற விசுவாமித்திர முனிவரின் பரீட்சையினால் கணவன் சுடலை காப்போனாக வாழ்ந்தபோதும், தன் பிள்ளை பாம்புக் கடியினால் இறந்தபோதும் தாலிகட்டிய தன் கணவன் கையால் வெட்டப்படவேண்டிய நியதி வந்தபோதும் தனது நிலை தவறவில்லை; முனிவரின் சினத்தை மேலும் கிளறவுமில்லை. மாறாக அந்த முனிவரே பந்தயத்தில் தோற்றுத் தமது தவத்திற் பாதியை இழந்து போனார்; அந்தப் பெருமை சந்திரமதிக்கே உரியது!

இந்த நிகழ்வால் மோகனதாஸ் காந்தி, மகாத்மா காந்தியாக மாறினார் என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

இராமாயணத்திலே, இராமன் வனவாசம் போனது விதியினால் ஆகும். போயிருக்கா விட்டால் இராமாவதார நோக்கம் நிறைவேறியிருக்காது. ஆயினும், "பிரிவினும் சுடுமோ பெருங்காடு" என்று கூறிக்கொண்டு, மரவுரி தரித்து இராமனோடு செல்கிறாள் சீதாபிராட்டி; இராமனைக் காட்டுக்கு அனுப்பக் காரணமாக இருந்த சிற்றன்னை கைகேயியிடம் வெறுப்புக் கொள்ளவில்லை. இராவணன் கவர்ந்து சென்று சிறைவைத்த போது, தீமையாளன் என்று அவனைச் சபிக்கவில்லை. தண்டனையை இராமன் கையால் இராவணன் பெறட்டும் என்று, தன் கற்புநிலையை மாத்திரம் காப்பாற்றிக் கொள்கிறாள் சீதை.

சிலப்பதிகாரத்திலே, கற்புக் கரசியான கண்ணகி, தன் கணவன் தன்னை மறந்து மாதவியிடஞ் சென்றான் என்பதற்காக அவனை வெறுக்கவில்லை. "கைப்பொருள் தொலைத் தேன்; பொருள் தேடப் புறப்பட்டு" என்றதும், தன் காற்சிலம்பைக் கொடுத்து கோவலனோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கிறாள். கள்வன் எனத்தன் கணவனைக் குற்றஞ்சாட்டியபோது, அதனை மறுத்து வழக்குரைத்தாள்; அரசன் தன் பிழையை உணர்ந்து உயிர்விட்டானேயன்றிக் கண்ணகி அவனைக் கொல்லவில்லை.

கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டதும் மாதவி துறவியாகிறாள்; மகள் மணிமேகலையும் துறவியாகிறாள். இந்த நிகழ்வானது, அக்கால ஆடல் மகளிர் எனப்படுவோர் பண்பாட்டில், யாராலும் செய்யப்பெறாத மாண்புடைய மகளிராக மாதவியையும் மணிமேகலையையும் கற்றறிந்தோர் போற்றுகின்றனர்.

இவைபோல இன்னும் எத்தனையோ மாண்புடைய மகளிர் தமிழ் இலக்கியங்களிலே இருக்கிறார்கள். அவர்களை அறிந்து படித்துப் பயன்பெறுவது மாணவர்க்கு மாண்பாகும்.

**கந்தனைக் காணாத கண்ணெதற்கு?**

கந்தனைக் காணாத கண்ணெதற்கு - அந்த
கடம்பனை வணங்காத கரமெதற்கு
முருகனை நினையாத மனமெதற்கு - இந்த
மூன்றுமே இல்லாமல் நாமெதற்கு. (கந்தனைக்...)

வாடும் பயிர்களுக்கு மழையாவான் - தன்னை
நாடும் அடியவர்க்கு துணையாவான்
காரிருள் வாழ்விலுக்கு ஒளியாவான் - இவன்
கருணை மழைபொழியும் முகிலாவான். (கந்தனைக்...)

பிறவி கடப்பதற்கு படகாவான் - இவன்
பிணிகளைத் தீர்ப்பதற்கு மருந்தாவான்
உறவுகள் இல்லாத அகதிகட்கு - இவன்
உறுதுணை யாய்நிற்கும் உறவாவான். (கந்தனைக்...)

குமர குருபரனை பேசவைத்தான் - அந்த
கொடிய அசுரர்களை அடக்கிவைத்தான்
அருண கிரியார் தன்னை பாடவைத்தான் - தமிழ்
ஒளவைக்குச் சுட்டபழம் காட்டிநின்றான். (கந்தனைக்...)

தேவயானை அம்மன் திருமணத்தால் - மரபுத்
திருமணம் நல்லதென்று அறியவைத்தான்
கானகக் குறமங்கை தனைமணந்து - வாழ்வில்
காதலும் நல்லதெனக் காட்டி நின்றான். (கந்தனைக்...)

-மோனக்கானா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ!

(தொடர்ச்சி...

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

வள்ளி நாயகியார் தினைப்புனத்தைக் காவல் செய்துகொண்டிருக்கும்போது, அவ்வாறான பரிபக்குவ நிலையில், அவவுக்கு அருள்புரிய வேற்படையைத் தாங்கிய சுப்பிரமணியப் பெருமான், கந்தகிரியைவிட்டு நீங்கித் தனிமையாக வந்து திருத்தணிகை மலையின் கண்ணே எழுந்தருளியிருந்தார். அச்சமயத்திலே திரிலோகங்களிலும் சஞ்சாரம் செய்பவரும், யாழ் வாசித்தலில் இசை வல்லவருமாகிய நாரதமகா முனிவர் பூமியில் உள்ள வள்ளிமலைக்கு வந்து தினைப்புனத்தைப் பாதுகாத்து வீற்றிருந்த வள்ளி நாயகியாரைத் தரிசித்து கைகூப்பி வணங்கி; உலக மாதாவாய் இங்கே தினைக்காவல் செய்யும் அம்மையாரின் பேரழகினைக் கண்டு, அடியேனை ஆளுடை ஆறுமுகன் துணைவியாய் இருப்பதற்கு இவ்வம்மையார் முன்பே மாதவம் புரிந்தவர் என நினைந்து, அவரைத் தரிசித்து போற்றி வணங்கிப் பின்பு திருத்தணிகை மலையையடைந்தார். அங்கு எழுந்தருளியுள்ள ஒப்பில்லாத கந்தசுவாமியினுடைய திருவடிகளை வணங்கி, தாழ்ந்து நின்று கூறுவாராயினர்.

சுவாமி! சிவமுனிவரின் புதல்வியார், மான் வயிற்றில் பிறந்தவர், கானவ குலக் கன்னியாகி, தினைப்புனத்தைக் காவல் செய்து கொண்டு பரண்மீது அமர்ந்திருக்கிறார். அந்தப் பெண் தெய்வத்தின் திருமேனியின் அழகு நலம், செந்தாமரையிலிருக்கின்ற இலக்குமிக்கும் இல்லை. நான் கண்டு வந்து தேவரீருக்கு விண்ணப்பிக்கின்றேன். மாயவன் புதல்வியாகிய அம்மையார் தேவரீருடைய திருப்புயங்களை அணைதற்கு முன்னரே தவஞ்செய்திருந்தார். பரிபக்குவம் மிக்க அம்மையாருக்கு அநுக்கிரகம் புரிந்தருள்க எனப் பிரார்த்தித்தார்.

நாரத முனிவனே; நீ கூறியது நன்று. இனி நீ செல்லக் கடவாய் என்று கூறியருளி எம்பெருமான்; தேனென்று பாகென்று உவமிக்கொணாமொழித் தெய்வ வள்ளி உய்யுமாறு பெருங்கருணை கொண்டு தமது ஞான சொரூபத்தை நீத்து, மோகத்துக்குரிய மானுட வடிவந்தாங்கி எழுந்தருளினார். திருவடிகளில் வீரக்கழலும், திருவரையிற் கச்சும், திருப்புயங்களில் மாலைகளும், கையில் வில்லும், பாணமும், தலையில் இருண்ட குடுமியும் பொலிய வேட்டுவக் கோலம் பூண்கின்றார். கிளியின் மழலையையொத்ததாகிய ஒப்பற்ற மழலை மொழியினையுடைய வள்ளிநாயகியாரிடத்தில் வைத்திருக்கும் மோகம் உள்ளத்தைப் பிடித்துந்த எம்பெருமான் திருத்தணிகையை நீங்கி வள்ளி மலையிடத்து வந்தருளினார்.

வள்ளிநாயகியாரின் பரிபக்குவம் இருந்தவாறு என்னே! கடப்பமாலையை விரும்புகின்ற காளையாகிய குமரப்பெருமான், பிரிந்திருந்த தலைவியாரைக் கண்டருளி, திருநோக்கஞ் செய்து, வள்ளி நாயகியார் இருக்கும் பரணிற்கு அணியராய்ச் சென்று பேசத் தொடங்குகின்றார்.

நாந்தகம் அனைய உன் கண்
    நங்கைகேள் ஞாலம் தன்னில்
ஏந்திழையார் கட்கெல்லாம்
    இறைவியாய் இருக்கும் நின்னைப்
பூந்தினை காக்க வைத்துப்
    போயினார் புளினர் ஆனோர்க்(கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்ந்திடும் உணர்ச்சி ஒன்றும்
அயன் படைத்திலன் கொல் என்றான்.

வாட்படையை ஒத்தமையுண்ட கண்களையுடைய பெருமையிற் சிறந்த பெண்ணே, கேட்பாயாக; உன் அருமையை அறியாத புன்புல வேடுவர் தினைக் கொல்லையைக் காவல் செய்யும்படி இருத்தினர். அவர்களுக்குப் பிரமதேவன் ஆராய்ந்து முடிவு செய்யும் அறிவைப் படைத்திலன்போலும் எனத் திருவாய் மலர்ந்து அருள்கின்றார். நீண்ட கரிய கூந்தலையுடைய பெண்ணே, நின்னைக் கண்டு மதி தளர்ந்தேன். நின் பெயர் யாது? பெயர் சொல்லாவிட்டால் நின் ஊரின் பெயரையாவது சொல்லு. ஊரின் பெயரையும் உரைத்திடமுடியாதென்றால், அவ்வூருக்குச் செல்லும் வழியையேனும் சொல்லமாட்டாயா? என்று கெஞ்சுகிறார்.

"பெண்ணே, ஒரு வார்த்தை பேசு; ஒரு புன்முறுவலாவது செய். அதுவும் செய்யா யாயின் உன் கண்ணாற் கடைக்கணித்தலாகிய அநுக்கிரகத்தைச் செய். அதுவும் செய்யா யாயின் விரகம் மிக்கு உழல்வேன் உய்யும் வழி ஒன்று காட்டு. அதுவும் செய்யாயாயின் நின் மனத்தை ஒரு சிறிது என்நிலை நோக்கி உருகும் படி செய். மனம் உருகுதலும் செய்யாயாயின் உன்னிடம் கொலைப்பழி ஒன்று வந்தே தீரும். ஆதலினாலே கொலைப்பழி சூழாமல் பாராமுகமாக இருத்தலை ஒழியக் கடவாய்" என்று எச்சரிக்கையும் செய்து அருளுகின்றார்.

ஆன்ம இயல்புகளாகிய அறிவு, இச்சை செயல்களில் அன்பின் மூலமாகிய இச்சையை ஆன்மாக்கள் பால்விருத்தி செய்யுமுகமாக, ஆறுமுகன் ஆடல்கள் நிகழ்ந்தன. கொல்லனது உலைமுகத்தில் எதிர்ப்பட்ட மெழுகைப்போல வள்ளிநாயகியை எதிர்ப்பட்டு உருகி, காதல் வலையில் அகப்படுகின்ற ஒருவனைப் போல வருத்தம் உற்று இரங்கா நின்று அருள்கின்றார். ஆறுமுகக் கடவுளின் திருவிளையாடல் அனைத்தின் தன்மையும் சலனம் இல்லாத சந்திரன் கலங்குகின்ற சலத்திலே சலனம் உறுவதாகத் தோன்றுதல் போன்றது. இயற்கையில் தம் மாட்டு இல்லாத ஆசையின் மிகுதியை உள்ளதுபோலக் காட்டுகிறார். அந்தநேரத்தில் எதிர்பாராத விதமாக வேட்டுவர்கள் புடைசூழ நம்பிராஜன் தன் புதல்வியிடம் வந்தான். அப்போது முருகப்பெருமான் அடி வேதங்களாகவும், நடு சிவாகமங்களாகவும் கிளைகள் யாவும் பல கலைகளாகவும், தாம் ஒரு வேங்கை மரத்தின் உருவாகி நிற்கின்றார். நம்பி தன் பெண்ணைக் கண்டு நல்ல வள்ளிக் கிழங்கும், தினைமாவும், தேனும், காட்டுப் பசு வின் பாலும், பிற உணவு வகைகளையும் கொடுத்து, பின்பு புதுமையாக நிற்கின்ற வேங்கை மரத்தைக் கண்டான். வேடுவர்கள் மரத்தை வெட்டி எறிய முனைகின்றார்கள். அவர்களைத் தடுத்த நம்பிராஜன் வள்ளியின் திருமுகத்தைப் பார்த்து, "நறிய மலர்களையுடைய புதினமாகிய வேங்கைமரம் உண்டான காரணம் என்ன? கூறுவாயாக" என்றான். வள்ளி நாயகியார் தனது மனங்கலந்தார்க்கு யாது வருமோ என அச்சங்கொண்டு நடுங்கி, "பிதாவே, இது வந்த வரலாற்றை யான் அறியேன்" இது மாயம் போல் தோன்றுகிறது என்றாள். "இந்த வேங்கைமரம் உனக்கு இனியதொரு துணையாய் இவ்விடம் வந்து தங்கியது. அஞ்சற்க" எனக்கூறிச் சென்றான் நம்பி.

நம்பிராஜன் சென்றதைக் கண்ட சுப்பிரமணியப் பெருமான் வேங்கை வடிவம் நீங்கி கானவர் மகள் காணும்படி முன்னர் கொண்ட மானுட வடிவத்தைக் கொண்டு நின்றார்.

*செய்வதற்கு எப்போதும் வேலை இருக்கவேண்டும்; அப்போதுதான் முன்னேற முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறவர் குலப்பாவையே, இவ்விடத்தில் யான் உன்னைச் சரணடைந்தேன். தமியேனுக்கு நின்னிற பூங்கழல் அன்றிப் புகலிடமில்லை. ஆகையினால் நின்னை எப்பொழுதாயினும் பிரியேன், பிரியேன்.

வள்ளிநாயகியார்மீது மையல் கொள்வது ஆன்மாக்களின் இச்சையை விருத்தி செய்வதாமென்க.

உடம்பானது உயிரை அகன்று அறிவு கொண்டு எழுந்துபோக வன்மை இல்லை என்பதைச் சொல்லவும் வேண்டுமா? இந்த உண்மையை உனக்கு வெளிப்படையாகச் சொல்லவும் வேண்டுமோ. நீ உணரும் பக்குவம் உடையை. மை தீட்டப்பட்ட கரிய கண்ணாகிய நின் வலையில் அகப்பட்டவனாகிய எனக்கு, பூரணமாகிய கண்ணருள் செய்யாமல், புறக்கணித்தல் செய்தாய். எனக்கு உய்யும் வழி உன்னை இன்றி வேறு உண்டோ. என் உயிர் உன்கைதனில். அதனைக் காத்துக்கொள். பெண்ணே, நீ ஆடும் சுனையாயும், அணியும் சந்தனமாயும், சூடும் மலர்களாயும் தோயப் பெற்றிலேன். வாடினேன் இத்தினைப் புனத்தைக் காத்தல் நின் பெருமைக்கு இழிவு! இழிவு!! நீ என்னுடன் வருவாயாயின் தேவலோகத்தில் உள்ள அரம்பையர் அனைவரும் உன்னை வணங்கி வாழ்த்திட, நித்திய செல்வத்தை நீ அநுபவிக்குமாறு உனக்கு நான் தருவேன் என்று பல வார்த்தைகளைக் கூறி நின்றவரை, வள்ளி நாயகியார் குமரன் சிந்தையிலொன்றிய கருத்தினை உற்றுநோக்கி இவர் திறம் நன்று என நாணிக் கூறுவாராயினார். "முழுதுலகருள்புரி முதல்வர்" என்று தோன்றியமையால், நான் இழிகுலமாகிய வேட்டுவ சாதிப் பெண். நீரோ உலகம் முழுவதற்கும் அருள்புரியும் முதல்வர் ஆவீர். இழிந்தேனாகிய என்மீது காதல் கொண்டு உமது பெருந்தகைமைக்கு ஏலாத தாழ்வு மொழிகளை கூறுதல் குடிப்பழியைத் தருவதாகும். உமது உயர்வையும், எனது தாழ்வையும் கருதாது மனம் மயங்கி என்னைத் தழுவ விரும்புதல் முறையாகாது. புலி பசித்தால் புல்லையும் தின்னுமா? தின்னாது என்று பலப்பல வார்த்தைகளைச் சொல்லி நிற்கின்றாள் வள்ளி நாயகியார்.

இழி குலமாகிய எயினர் பாவை நான்
முழுதுலகருள் புரி முதல்வர் நீர் எனைத்
தழுவுதல் உன்னியே தாழ்ச்சி செப்புதல்
பழியது வேயலால் பான்மைத் தாகுமோ

வள்ளி தன்னைத் தான் உணராத நிலையிலே பேசுகிறாள். (தொடரும்...

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மகோற்சவ விபரங்கள்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 14.08.2015 ஆடி 29 வெள்ளி | இரவு 9.00 மணி |
| காலைத் திருவிழா ஆரம்பம் | 18.08.2015 ஆவணி 01 செவ்வாய் | |
| பூங்காவனம் | 23.08.2015 ஆவணி 06 ஞாயிறு | |
| கைலாசவாகனம் | 24.08.2015 ஆவணி 07 திங்கள் | |
| சப்பறம் | 27.08.2015 ஆவணி 10 வியாழன் | |
| தேர் | 28.08.2015 ஆவணி 11 வெள்ளி | |
| தீர்த்தம் | 29.08.2015 ஆவணி 12 சனி | |
| மௌனத் திருவிழா | 29.08.2015 ஆவணி 12 சனி மாலை | |

*அன்பையும் ஆற்றலையும் இடைவிடாது வெளிப்படுத்துகிறவர் ஆர்வத்துடன் பணி புரிவர்.* 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலகத்தரக்கர் பலர் எம் கருத்தினுள்ளே புகுந்து கொண்டார்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக் கெடும் நோய்.

360 குறள்.

விருப்பு, வெறுப்பு, அறியாமை ஆகிய இக்குற்றங்கள் மூன்றினுடைய பாதிப்பு இல்லாமல் ஒழுகினாற் துன்பங்கள் வராமற் கெடும். (ஒழிந்து நீங்கும்)

இவ்வண்ணம் அநுபூதியில் மூவேடணை வருகிறது.

மாவேழ் சனனம் கெட மாயை விடா
மூவேடணை என்று முடிந்திடுமோ
கோவே குறமின் கொடி தோள் புணரும்
தேவே சிவ சங்கர தேசிகனே.

39 கந்தரநுபூதி.

மூவேடணை: செல்வத்தில் ஆசை- தனம்
மனைவியாசை - தாரம்
மக்கள் ஆசை - புத்திரர்.

பிறவிப் பெருங்கடல் வெள்ளம் போன்றது. பொன் ஆசை, பெண் ஆசை, பிள்ளைகள் ஆசை மூன்றையும் ஒவ்வொன்றாக விட்டபின் முத்திக்கரையை அடையலாம். பொதுவாகப் பற்றை விட்டால் ஆத்ம விடுதலை பெறலாமென்பது சமயம் காட்டும் உண்மை. எனவே பொன்னை, மாதரைப், பூமியை நாடேன் என்கிறார் தாயுமானவர்.

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய என் உயிர் நாதனே
உன்னை நாடுவன்; உன்அருள் தூவெளி
தன்னை நாடுவன்; தன்னந்தனியனே.

18 பொன்னை மாதரை.1

மனம்தான் எல்லாவற்றுக்கும் அடிப்படை. எனவே மனதைக் குதிரை என்றார் பாரதி. குரங்கு என்றார் வள்ளலார். இந்த மனத்தூய்மை, புனிதம், சுத்தம் உள்ளும் புறமும் ஒன்றாய் அமைதல் சாலவும் நன்று. மனம், வாக்கு, காயம் திரிகரண சுத்தியென அழைக் கப்படும். சொல்லையொத்துச் செயல் மனமும் தூயவர்க்கே இறைவன் காட்சி தருவான். வள்ளுவனார் மனத்தூய்மை பற்றிப் பேசுகிறார்.

புறந் தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய் மையான் காணப்படும்.

298 குறள்.

ஆரோக்கியமான வாழ்விற்குச் சுகாதாரம் தேவை. சமய நோக்கிலே ஆசார அனுட்டானங்கள்- இயமநியமங்கள் இன்றியமையாதன. ஆசாரம் என்பது கல்வி, ஒழுக்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு எனப் பொருள்படும். எனவே நல்லொழுக்கங்களை நாம் கைக்கொள்ளல் பொருத்த மானதே. பஞ்சமா பாதகங்கள் அகற்றப்பட வேண்டும். மனித விழுமியங்கள் பற்றிப் பேசும் பதினெண் கணக்கு நூல்களைப் படிப்பவர் அருகிப் போயினர். எண்ணற்ற நீதி நூல்கள் தமிழில் உண்டு. இன்றைய மன அழுத்தம் துன்மார்க்க வழியிலே, வன் செயலிலே மக்களை வழிப்படுத்துகின்றன. வன்முறைக் கலாசாரம் மலிந்த சகாப்தம் இது.

மனித மனப்பான்மையைப் பகுத்துப் பார்த்த மகாகவி பாரதி இந்த மனம் வெளுக்க வழியில்லையே என முத்துமாரியிடம் முறையிடுவது எமக்கும் இயைபாய் அமைகிறது.

உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரி
மாரியம்மா எங்கள் முத்துமாரி
உன்பாதம் சரண்புகுந்தோம் எங்கள் முத்துமாரி
மாரியம்மா, எங்கள் முத்துமாரி

கலகத்தரக்கர் பலர் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி
கருத்தினுள்ளே புகுந்து விட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி!

பல கற்றும் பலகேட்டும் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி
பயனொன்று மில்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
நிலையெங்கும் காணவில்லை - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் - முத்துமாரி
நின்பாதம் சரண் புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி.

துணிவெளுக்க மண்ணுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி
தோல் வெளுக்கச் சாம்பருண்டு - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி.

மணிவெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி
மனம் வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி

40 முத்துமாரி.

இந்தப் பாடலிலே நடைமுறைச் சித்தாந்தம் பற்றிப் பாடிய பாரதி கூறிய கலாம் (கலக்கம்) விளைவிக்கும் அரக்கர் பலர் எனப் பாடியவர்கள் யார்? அவைகளே காமம்- குரோதம்- லோபம்- மோகம்- மதம்- மாற்சரியம் என்பன. இவற்றைப் பற்றிச் சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம்- என்பது தனம், தான்யம், புத்திர பௌத்திராதிகளின் பேரில் அதிகப் பிரீதி வைத்தல். இதனாற் துயரடைந்தவர்- நரகாசுரன்- வாலி- சந்திரன் முதலியோர்.

குரோதம்- என்பது ஒருவருக்குக் கெடுதி செய்யப் பிரயத்தனம் செய்ய இச்சை (விருப்பம்) கொள்ளல். இதனாற் துயரடைந்தோர் பகாசுரன் முதலியோர்.

லோபம்- என்பது தனது சொத்தில் இருந்து ஞானிகளுக்குக் கூட சிறிதேனும் கொடுக்கக் கூடாது என்னும் எண்ணமிருத்தல். இதற்குச் சான்று துரியோதனன்.

மோகம்- என்பது புத்திர களத்திரர்களின்மீது அதிகம் பிரீதியை வைத்துத் தனக்குரிய பொருள் போதாதென்று இன்னும் கொஞ்சம் அதிகமாய்ச் சம்பாதிக்க வேண்டும் என்னும் ஆசையை விருத்தி செய்தல். புத்திர சோகத்தாற் துயரடைந்தவன் தசரதன்.

மதம் என்பது பொருள் அதிகப்படுவதனால் மற்றவர்களை அலட்சியம் பண்ணிப் பேசுதல். நான் என்ற எண்ணம் இதனாற் துயர் அடைந்தவன். கார்த்த வீரியார்ச்சுனன். மாற்சரியம்- என்பது தன்னைப்போல் பிறரும் சுகம் அனுபவித்தலைச் சகியாமை. (கயமை) விளைவிக்கும் சித்த விருத்தியை உண்டாக்குதல். இதற்கு உதாரணம் சிசுபால தந்தவக்கிரன்.

எனவே இவற்றினின்று மனசை மீட்டெடுக்க வேண்டும். இந்நிலையிலே பல கற்றும் பல கேட்டும் பயனொன்றும் இல்லையடியெனப் பாடிய மகாகவி அம்பாளிடம் சிலவற்றை முன் வைக்கிறார்.

மோகத்தைக் கொன்றுவிடு - அல்லாலென்றன்
மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்து விடு - அல்லாலதில்
சிந்தனை மாய்த்துவிடு
யோகத்திருத்திவிடு - அல்லா லென்றன்
ஊனைச் சிதைத்துவிடு
ஏகத் திருந்துலகம் - இங்குள்ளன
யாவையும் செய்பவளே! 1

பந்தத்தை நீக்கிவிடு - அல்லாலுயிர்ப்
பாரத்தைப் போக்கிவிடு
சிந்தை தெளிவாக்கு - அல்லாலிதைச்
செத்த உடலாக்கு.
இந்தப் பதர்களையே - நெல்லா மென்
எண்ணி இருப்பேனோ
எந்தப் பொருளினுமே - உள்ளே நின்று
இயங்கி இருப்பவளே. 2

உள்ளம் குளிராதோ? - பொய்யாணவ
ஊனம் ஒழியாதோ?
கள்ளம் உருகாதோ? அம்மா பக்திக்
கண்ணீர் பெருகாதோ?
வெள்ளக் கருணையிலே - இந்நாய்சிறு
வேட்கை தவிராதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விள்ளற் கரியவளே - அனைத்திலும்
மேவியிருப்பவளே! 3

14 மகா சக்திக்கு விண்ணப்பம்.

நாய் மனிதர்க்குத் தோழனடி எனப் பாடிய மகாகவி தன்னை நாயாக்கிய செய்தியை இப்பாடலிலேதான் பார்க்கிறோம். மாணிக்கவாசக சுவாமிகள் சுமார் முப்பத்துமூன்று இடங் களிலே நாயைத் தன்னோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்.

ஆக மனித வாழ்வின் புனிதத்தைப் பாதுகாக்க மனத்தைச் செப்பம் செய்ய வேண்டும். மனமது செப்பமானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்பர். வயலிலே களை எடுப்பதுபோல மனதிலே தீங்கு விளைவிக்கும் முட்பற்றைகளை வேரோடு ஒழிக்க வேண்டும். அதேபோது புதிய களைப்பூண்டுகளை விளைவிக்கக் கூடாது. எனவே பொல்லாங்கென்பவை எல்லாந் தவிர்ப்போம். இரத்த கான்சர் உள்ளவர்களின் இரத்தத்தை எடுத்துப் புது இரத்தம் பாய்ச்சுவர். கிட்னியில் நோய்காணின் டயலசிங் செய்து வாழ வைப்பர். அஃதேபோல கூடாத எண்ணங்களை உள்ளேவிடாது பாதுகாப்போம். கோபம்வரின் அடக்குவோம். பொறாமையை உள்ளே விடோம். எம் மன உறுதியால் தீமைகளை நீக்கி புதிய நல்லெண்ணங்களை விதைப்போம். கிணற்றைச் சுத்தம் செய்ய வேண்டின் கலக்கி இறைத்து, புது ஊற்று வர ஆவன செய்வோம். ஆனால் நீரை வாளியால் அள்ளி மீண்டும் கிணற்றிலே ஊற்றின் புதிய நீர் கிடையாது. அவ்வண்ணமே பழைய நினைவுகளை மாற்றி புதிய புனித எண்ணங்களை உருவாக்கி நல்ல அறுவடை செய்வோமாக.

இதையே தாயுமான சுவாமிகள் ஒருவிவசாயமாகச் சொல்கிறார்.

கார்ஆரும் ஆணவக் காட்டைக் களைந்து; அறக்
கண்டு- அகங்காரம் என்னும்
கல்லைப் பிளந்து, நெஞ்சு அகமான பூமிவெளி
காணத் திருத்தி, மேன்மேல்
பார் ஆதி அறியாத மோனம் ஆம் வித்தைப்
பதித்து, அன்புநீர் ஆகவே
பாய்ச்சி அது பயிர் ஆகும் மட்டும்மா மாயைவன்
பறவை அணுகாத வண்ணம்
நேராக நின்று விளைபோகம் புசித்து உய்ந்த
நின் அன்பர் கூட்டம் எய்த
நினைவின் படிக்குநீ முன்நின்று காப்பதே
நின் அருள் பாரம் என்றும்,
ஆர்ஆரும் அறியாத சூதான வெளியில்வெளி
ஆகின்ற துரியமயமே
அண்ட பதிரண்டமும் அடங்க ஒரு நிறைவு ஆகி
ஆனந்தம் ஆன பரமே!

ஆனந்தமான பரம் 6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ-ன்)

கார் ஆரும் ஆணவக்காட்டைக் களைந்து- இருள் நிறைந்த ஆணவக் காட்டினை வேரறப்பறித்து, அறகண்டு- வெட்டவெளியாக்கி, அகங்காரம் என்னும் கல்லைப் பிளந்து- அகங்காரம் என்கிற கல்லைப் பிளந்தெறிந்து, நெஞ்சகமான பூமிவெளிகாண திருத்தி- மனமாகிய நிலமானது வெளியாய்த் தோன்றும்படி திருத்தி, மேன்மேல்- மேலும் மேலும், பார் ஆதி அறியாத மோனம் ஆம் வித்தைப் பதிந்து- பூலோகத்தார் முதலானவர்கள் அறியாத மோனநிலை என்கின்ற விதையை ஊன்றி, அன்பு நீராகப் பாய்ச்சி- அன்பாகிய நீரைப் பாயவிட்டு, அதுபயிர் ஆகுமட்டும்- அது பயிர் ஆகும் அளவும், மா மாயை வன்பறவை அணுகாத வண்ணம்- பெரிய மாயை ஆகிய வலிய பறவை சேர்ந்து அழியாத வகை, நேராக நின்று- தனது முயற்சியின் அளவில் குறையாமல் செவ்வேநின்று அப்பயிரைக் காத்து, விளைபோகம் புசித்து உய்ந்த- விளைந்த சிவபோகத்தை அனுபவித்து உச்சீவித்த, நின் அன்பர் கூட்டம் எய்த- உன் அடியார் கூட்டத்தை நான் அடையும்படி நினைவின் படிக்கு- என் எண்ணத்தின்படி, நீ முன்னின்று காப்பது- நீ எனக்குப் பிரத்தியட்சமாய் நின்று காப்பாற்றுவது, நின் அருள் பாரம்- உன் திருவருட்குரிய கடமையாகும், என்றும் எப்பொழுதும், ஆராரும் அறியாத- எவ்வகைப்பட்ட மேலோரும் உணராத, சூது ஆன வெளியில்- இரகசியமான சதாகாசத்தில், வெளிஆகின்ற துரிய மயமே- வெளிப்படத் தோன்றுகின்ற துரியவடிவே- அண்டபதி என்க.

உரை- பூவை கல்யாண சுந்தர முதலியார்.

### ஆன்மீகச் சிந்தனை

இந்த உலகத்தில் பிறந்த எல்லா உயிரினங்களும் ஒருநாள் இந்த உலகை விட்டுப் பிரிந்து செல்லத்தான் வேண்டும். மனிதர்களாகிய நாம், ஆடு, மாடு மாதிரி இறக்கக் கூடாது. ஆனந்தமும், அமைதியும் நிரம்பி அதன்பின் இந்த உடலில் இருந்து உயிர் பிரிந்தால் அதுதான் பூரணத்துவம் ஆகும்.

பூரணத்துவத்திற்கு வேண்டிய காரியங்களை நாம் செய்வதாக இருந்தால் நம்மை நாம் அறியவேண்டும். நமக்கு சாப்பாடு வேண்டும். உத்தியோகம் வேண்டும். கல்யாணம் செய்து மக்களைப் பெற்று இல்லற தர்மத்தைக் கடைப்பிடித்தாக வேண்டும்.

ஒழுக்கமாக நான்கு பேருக்கு உதவியாக நல்ல பெயருடன் வாழ்ந்த மனிதன், இந்த உலகத்தை விட்டுப் பிரியும்போது சமுதாயம் அவனுக்காக கண்ணீர் வடிக்கிறது. தானும் அமைதியடைந்து பிறருக்கும் தன்னால் முடிந்தவரை அமைதியைத் தந்து வாழக்கற்றுக் கொள்பவனே மனிதர்களுள் சிறந்தவனாகிறான்.

தாயிற் சிறந்த தெய்வம் இல்லை.

சந்நியாசம் வாங்கிவிட்ட மகன் எதிரே வந்தால் தந்தையாக இருந்தாலும் வணங்க வேண்டும். ஆனால் சந்நியாசம் வாங்கிவிட்டாலும் தாயை வணங்கித்தான் ஆகவேண்டும். ஏனென்றால் தாயைவிட சிறந்த தெய்வம் வேறெதுவும் இல்லை.

-காஞ்சிப்பெரியவர்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 18. மணிச்சுடர் ரமணன்

திருச்சுழியில் பகவானுடைய குழந்தைப் பருவத்தில் விளையாட்டுத் தோழியாக இருந்த லக்ஷ்மி அம்மாள், பகவானின் பரம பக்தை. அவருடைய பிள்ளைகள் டாக்டர் ராமகிருஷ்ணய்யர், டாக்டர் நாராயணய்யர், குருஸ்வாமி அய்யர், டாக்டர் மகாதேவய்யர் அனைவருக்கும் பகவானைத் தவிர வேறு தெய்வமில்லை. லக்ஷ்மியம்மா அடிக்கடி ஆச்ரமத்துக்கு வருவார். பகவான் சிறு வயதில் அவளை அன்புடன் "லக்ஷ்மி" என்று கூப்பிட்டது போலவே இன்றும் அழைக்கும். ஆரம்ப நாட்களில் பகவானும் மற்றவர்களும் கிரிபிரதக்ஷிணம் போகும்போது லக்ஷ்மியும் உடன் சென்றார். வழியில் சோண தீர்த்தத்தருகில் அனைவரும் இளைப்பாறத் தங்கினர். அருகில் ஒரு சரக்கொன்னை மரத்தில் தங்கநிற மலர்கள் கொத்தாகப் பூத்துக் குலுங்கியிருந்தது. லக்ஷ்மி அம்மாள் ஆவலுடன் அவற்றைக் கொய்து, தரையில் விரித்திருந்த துணியில் சேகரிக்கலானார். சிறிது நேரத்திற்குப் பிறகு எல்லோரும் எழுந்து நடக்க ஆரம்பித்தனர். பகவானும் எழுந்து, லக்ஷ்மி அம்மாள் மும்முரமாக ஏதோ செய்து கொண்டிருப்பதைப் பார்த்து, அருகில் சென்று, லக்ஷ்மி! என்ன செய்கிறாய்? என்றது. பூ பறிப்பதாக அவள் பதிலளித்ததும் பகவான், துணியில் குவிக்கப்பட்டிருந்த மலர்களைச் சுட்டிக்காட்டி ஏற்கனவே இவ்வளவு இருக்கிறதே, மேலும் எதற்கு? என்று கேட்டது. லக்ஷ்மி அம்மாள், இவ்வளவு பூக்களும் வீணாகப் போகுமே, அதனால் முடிந்தமட்டும் பறிக்கிறேன் என்றார். பகவான் அதிருப்தியுடன், சற்றுக் கடுமையாகவே "ஆமாமா! நீதானே நட்டு, தண்ணி விட்டு வளர்த்திருக்கே! அது வீணாகப் போகாதா? அதன் அழகையெல்லாம் நீ பார்த்தாச்சு, வேறே யாரும் பார்க்க வேண்டாமில்லையோ? அந்த செடியெ மொட்டெ அடிச்சிடு!" என்றது. பகவானின் கண்டனத்தால் ஆடிப்போன லக்ஷ்மியம்மாள் தன் தவறை உணர்ந்து, பச்சாத்தாபமடைந்தார். இந்நிகழ்ச்சியின் பிறகு எங்கெங்கு மலர் குலுங்கும் செடியையோ, மரத்தையோ பார்த்தாலும் உடனே லக்ஷ்மியம்மாள் கைகூப்பி வணங்கி, பகவானே! உன் கமல மலர்த் தாள்களுக்கு இவையனைத்தையும் அர்ப்பிக்கிறேன் என்பாரே தவிர, அவர் வாழ்நாளில் எங்கும், என்றும் அதன்பின் பூக்களைப் பறிக்கவேயில்லை.



* * * * *

சப் ரெஜிஸ்திரார் நாராயணய்யருக்கு என்மீது பிரியமதிகம். பகவான் சம்பந்தப்பட்ட தன் நினைவுகளை என்னுடன் பகிர்ந்து கொள்ள எப்போதும் தயாராக இருப்பவர். அவருக்கும் பகவானுக்கும் இடையிலிருந்த உறவை வெளிப்படுத்தும் அனேக விஷயங்கள் முன் வந்த "மௌண்டன் பாத்" இதழ்களில் வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவானது பிரம்ம நிர்வாணத்திற்குப்பின் முதல் ஆராதனைக்கு அவர் பகவானிடம் மனமுருகி எழுதிய முறையீடு இது:

பகவானே, பகவானே! ஓ! என் ஆருயிர் பகவானே!

இன்றுதான் நீ எங்களை விட்டுப் போனதாகச் சொல்லப்படும் நாளா? 1950, ஏப்ரல் மாதம் 14ஆம் தேதி, மாலையில் உன்னைப் பார்க்க நின்ற நீள் வரிசையில், முருகனாரும் நானும் கடைசியாக நின்றிருந்தோமே, அந்த நாள் என் மனதில் நெருப்பால் சுட்டதுபோல் ஆழமாகப் பதிந்து இன்றுதான் நடந்ததுபோல் நினைவிருக்கிறது. நானும் ஒரு மாணிக்க வாசகர்போல், தாயுமானவர்போல், மெய்சிலிர்த்தேன், கதறினேன், விதிர் விதிர்த்தேன் என்று சொல்லவா? கடைசியாக, நண்பர் முருகனாரும் நானும் மாத்திரம் தனியே நின்றிருந்தோம். கிடந்த நிலையில் உன் தேகத்தைப் பார்த்தேன். மூடிய கண்களைக் கண்டேன். மேல் நோக்கியிருந்த உன் முகமும் தெரிந்தது. ஆஹா! தாங்கொணாத் துக்கத்தால் பீடிக்கப்பட்டு, விம்மி அழுதுகொண்டு உன் சந்நிதியில் தேம்பி நிலைகுலைந்து நின்ற எங்கள் பக்கம் திரும்பி எங்கள் மேல் பார்வையைப் பதித்தனை! பிறகு திரும்பி கண்களை மூடிக்கொண்டனை! நாங்கள் மேலும் தயங்கி நின்றோம். நீ மறுபடி எங்கள் பக்கம் திரும்பி எங்கள் மேல் உன் பார்வையைப் பதித்தனை. அது விடைபெறும் அருள் நோக்கா? முடிவான ஒன்றுதானா?

நான் எங்கு போகமுடியும்! நான் இங்கே இருக்கிறேன் என்ற உன் அழியாத, நிலையான சுடர் மணிவாசகங்களாகிய ஆறுதல் மொழிகள் எங்களைத் தாங்கி நிறுத்தின. நினதன்பின் அடையாளமான ஆயிரமாயிரம் அருட்செயல்களை எங்ஙனம் மறப்பேன்? நீயே அடுப்பைப் பற்றவைத்து, எனக்காகவே வறுத்த பாதாம் பருப்பின் சுவையும், வேங்கட ரத்னத்திடம் எனக்காக எடுத்து வைக்கச் சொன்ன நிலக்கடலைக் கூட்டின் ருசியும் என் நாவில் இன்றும் இனிக்கிறதே!

என் நண்பர் சுப்பராமையா உன்னிடம் என்னை என் உத்தியோகச் சிக்கலிலிருந்து காப்பாற்ற வேண்டி பகவானே, பாவம் நாராயணய்யர்! அவருக்கு உதவலாகாதா? என்று மன்றாடியதற்கு "வாடிகி ஏமி தக்குவா" (அவருக்கு என்ன குறை?) என்று நீ சொல்ல வில்லையா? கடைசிக் காலத்தில் ஒருநாள் அவர் "அபயம்" என்றிறைஞ்ச நீ சந்தேகத்திற்குச் சற்றும் இடமின்றி "இச்சினாமு" (தந்துவிட்டேன்) என்றருளவில்லையா? அப்பொழுது நானும் அதில் சேர்த்தி என்று தெரிவிக்க எண்ணி என் கைகளை அவர் கரங்களுடன் கோர்த்ததை நீ கண்டனையன்றோ?

என் பொருட்டு நீ புரிந்த அருட்செயல்கள் எண்ணிலடங்கா. அவை வீணாவதுமுண்டோ? பெருக்கெடுக்கும் கண்ணீரால் நனைந்து கரைய எத்தனை எத்தனை பக்கங்கள் நானுனக்கு எழுதியிருக்கிறேன்? அன்பில் தோய்ந்த எண்ணங்களுடன் நின் புனித மலர்ப்பாதங்களில் நான் கிடக்கின்றேன். உனக்கு நமஸ்காரம்! அழிவற்ற அன்பை உன் பொன் மலர்த்தாள்களில் அர்ப்பணிப்பதற்காகவே இங்கு இன்று கூடியிருக்கும் அன்பர்களின் இதயத் துடிப்போடிசைந்து என் உள்ளமும் துடிக்கிறது".

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ், சைவப் பாரம்பரியத்தின் தலைமகன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

– திரு மு.க. மாசிலாமணி அவர்கள் –

சைவ உலகம் ஐந்தாம் குரவரெனவும் தமிழ் கூறும் நல்லுலகம் இலக்கண, இலக்கியப் பேராசான், சொற்பொழிவுக் கலையின் ஆதிகர்த்தா, தற்காலத் தமிழுரை நடையின் தந்தை, தூயநூற் பதிப்பின் முன்னோடி, புராண படன உரை மரபின் மூலவர் எனப் பலவாறு விதந்து போற்றும் - யாழ்ப்பாணத்துச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கிறீஸ்தவ மத ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டு நலிவுற்றுச் சென்றுகொண்டிருந்த சைவ சமயத்தையும் அதனை மீட்டுப் பாதுகாத்து வளர்த்து நிலைநிறுத்த இன்றியமையாக் கருவியாக அமையக்கூடியது கல்விதான் என்பதனைத் தீர்க்கதரிசனமான தன் சிந்தனையூடாக உணர்ந்து கல்வியையும் ஒரு சேர வளர்ந்து சிறக்கத் தனி மனிதனாயினும் ஒரு நிறுவனத்திற்கு இணையாக நிகராக ஈட்டிய சாதனைகள் நவீனகாலச் சைவசமய வரலாற்றிலும் தமிழ்மொழி வரலாற்றிலும் மிகப் பெரிய அத்தியாயமாகும். கி.பி. 5ம்,6ம் நூற்றாண்டுகளில் சமண, பௌத்த குறிப்பாகச் சமண மத ஆக்கிரமிப்புக்குள் அமிழ்ந்து சைவமும் அது சார்ந்த கோவில் வழிபாடு போன்ற பண்பாட்டுப் பாரம்பரியங்களும் சிதைந்து சின்னாபின்னமாகி நலிந்து சீரழிந்த இருள் படர்ந்த சூழ்நிலையில் சமய குரவர்கள் சிறப்பாகச் சம்பந்தரும் நாவுக்கரசரும் அவதரித்து இறையருள் பெற்று அவர்கள் பண்ணிசைத் தமிழாலும் சாதாரண மனித சக்திக்கு அப்பாற்பட்ட அதீத ஆற்றல்களினாலும் சைவத்தையும் அது சார்ந்த பண்பாட்டுக் கூறுகளையும் மீட்டு வளர்த்து நிலைநிறுத்திச் சைவத் தமிழ் வரலாற்றில் மறுமலர்ச்சி ஒன்றினைத் தோற்றுவித்தனர். அவ்வாறுதான் அவர்களுக்கு ஏறக்குறைய 1200 ஆண்டுகளுக்குப் பின் கிறிஸ்தவமும் அதுசார்ந்த மேல்நாட்டுப் பண்பாடும் வேகமாகக் காலூன்றிப் பரவ யாழ் தமிழ் சமூகம் தம் சமயம், மொழி, வாழ்வியல் விழுமியங்கள் அனைத்தையும் புறந் தள்ளி அந்நியமயப்பட்ட செல்வாக்கிற்குள் சிக்கித் தத்தளித்த ஒரு சூழ்நிலையில் விடிவெள்ளி போல் தோன்றியவர்தான் நாவலர். 1822 - 1879 வரை 57 ஆண்டுகளே இந்நிலவுலகில் வாழ்ந்த நாவலர் இளமையில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தமிழ் இலக்கண, இலக்கியங் களைத் துறைபோகக் கற்றவர். தொடர்ந்து கற்பதற்குச் சைவசமய பண்பாட்டுச் சூழலிலமைந்த பாடசாலைகள் இல்லாமையால் பர்சிவல் பாதிரியார் தலைமையில் இயங்கிய வெஸ்லியன் மிசன் (இன்றைய யாழ் மத்திய கல்லூரி) கல்லூரிக்கு அனுப்பப்பட்டார். அங்கு கற்றும் பின் அங்கே கற்பித்தும் கிறிஸ்தவ சூழலில் ஏறக்குறையப் 14 ஆண்டுகளைக் கழித்த நாவலர் பர்சிவல் பாதிரியாரின் தமிழ்ப் பண்டிதராகவும் விவிலியத்தை Bible தமிழில் மொழிபெயர்க்கும் குழுவினருள் ஒருவராகவும் இணைக்கப்பட்டுச் செயற்பட்டார். கிறிஸ் தவர்களின் தீவிரமான பிரசாரப்பிடியிலிருந்து சைவத்தையும் சைவ சமூகத்தையும் மீட்டுப் பாதுகாக்க வேண்டுமென்ற உயிர்மூச்சாகக் கொண்டிருந்த தன் நோக்கினைச் சற்றும் வெளிப்படுத்தாமல் மிகப் புத்திசாதுரியமாகக் கிறிஸ்தவர்கள் மத்தியில் நடந்துகொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் கிறிஸ்தவர்கள் தம் மதத்தினைப் பரப்ப மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தையும் சைவர்கள் மத்தியில் கிறிஸ்தவ மதக் கருத்துக்களைப் பிரசங்கம் செய்தல், நூல் வடிவில் வினாவிடையாகவும் உரைநடை நூல்களாகவும் எழுதுதல், கிறிஸ்தவமே உயர்ந்ததெனச் சைவத்தைத் தாக்கிக் கண்டன நூல்கள், பிரசுரங்கள் வெளியிடல் கிறிஸ்தவ சமயக் கருத்துக்களைத் தாம் கற்பிக்கும் பாடநூல்களூடாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் பரப்புதல்; இன்னும் பல்வேறு வழிகளிலும் கிறீஸ்தவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டு அக்கல்வி நிறுவனத்தை விட்டு வெளியேறிய நாவலர் மேற்குறித்த செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் சைவத்தையும் அது சார்ந்த பண்பாட்டுப் பாரம்பரியங்களை யும் மீட்டுப் பாதுகாத்து வளர்க்க முழுவீச்சுடன் உச்ச அளவில் பயன்படுத்தினார். சுமார் 14 ஆண்டு காலக் கிறிஸ்தவ சூழல்தான், அறிவின் பெருக்கமும் அஞ்சா நெஞ்சமும் துணிவும் செயலாற்றுந் திறனும் கொண்ட நாவலர் என்ற வரலாற்று நாயகன் ஒருவரை உருவாக்கி ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமொன்றுடன் தனிமனிதனாக நின்று போராடித் தன் மக்களின் சமயத்தை, மொழியைப் பண்பாட்டைச், சுய கௌரவத்தை மீட்டு நிலைநிறுத்து வதற்கெனச் சைவத் தமிழுலகத்திற்கு வழங்கியது. "கிறிஸ்தவச்சூழல் யாழ்ப்பாணத்திற்கு வந்திராவிட்டால் நாவலர் என்றொருவர் இல்லை" என அறுதியிட்டு உறுதியாகத் தமிழ் அறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறிய கருத்து நாவலரின் பன்முக ஆளுமையினை யும் அண்மைக்காலச் சைவம், தமிழ், தமிழர் கல்வி ஆகியனவற்றின் வரலாற்றில் அவரின் வகிபாகத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினையும் மதிப்பிடப் போதுமானதாகும்.

சமய குரவர் நால்வர் தலங்களுக்கு யாத்திரை செய்து பண்ணிசைத் தமிழால் சிவன் புகழ் பாடிச் சைவத்தை வளர்த்ததுபோல் தன் காலத்தில் பெரு வழக்காகவிருந்த வசனநடையில் தனக்குக் கைவந்த சொற்பொழிவுத் திறனால் வேதாகம நூல்களின் சாரம். சைவசித்தாந்தம் விளக்கும் நுண்பொருள், சைவத் திருமுறைகள் கூறும் அருங்கருத்துக்கள், கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் போன்ற சைவக் கருவூலங்கள் விபரிக்கும் செம்பொருள் இவைபோன்ற இன்னும் பல ஆழ்ந்த செய்திகளை ஆற்றொழுக் கனைய தன் நா வன்மையால் மக்களிடம் சென்று சேரச் செய்தார். இதன்மூலம் கிறிஸ்தவர் களின் தீவிர சமய போதனைகளால் தம் சுயநிலை மறந்து போலிகளில் மூழ்கியிருந்த மக்கள் உண்மையுணர்ந்து தம் சமயம், மொழி, பண்பாடு ஆகியவற்றில் மீள் பற்றுக் கொள்ளவும் அவை காட்டும் வழியில் ஒழுகவும் தூண்டப்பட்டனர். நாவலரின் அதியற்புதமான சொல் வன்மையால் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் சைவமும் தமிழும் வளர்ச்சியடைந்து வந்த சிறப்பினை மதிப்பீடு செய்த தமிழ்நாடு ஆதீனங்களில் பழமையும் பெருமையுமுடைய தான திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" என்ற சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. ஆறுமுகம் என்ற இயற்பெயர் கொண்டவருக்கு ஆதீனம் வழங்கிய "நாவலர்" என்ற பெயரே பிற்காலத்தில் நிலைத்த பெயராகி ஈழத் தமிழினத்தின் இதயங்களில் ஆழத் தடம்பதித்து விட்டது. இந்த வகையில் பௌத்தம் குறிப்பாகச் சமண சமயத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து சைவத்தை மீட்டு வளர்த்த சமயகுரவர்களை "சமய குரவர் நால்வர்" எனப் போற்றி வணங்குவதுபோல் கிறீஸ்தவ சமய ஆக்கிரமிப்பிலிருந்து சைவத்தை மீட்டு வளர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரை "ஐந்தாம் சமயகுரவர்" எனச் சைவ உலகம் போற்றி வணங்குகின்றது. சைவ சமய தத்துவங்களை மிக இலகு தமிழில் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கும் வகையில் நாவலரால் எழுதப்பட்ட 1ம், 2ம் சைவ வினாவிடைகள் சைவச் சிறார்கள் இளமையிலேயே தம் சமயம் கூறும் உண்மைகளைத் தெரிந்து உணரவும் பற்றுக் கொள்ளவும் உந்துசக்தியாக அமைந்தன. சாதாரண மக்கள் படித்து விளங்கிக்கொள்ள முடியாத வகையில் செய்யுள் நடையிலிருந்த சைவ சமயத் தத்துவக் கருவூலங்களான கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் போன்றவற்றினை இலகு உரைநடையில் எழுதி அந்நூல்களில் அடங்கியிருந்த அரும் பொக்கிசங்களைச் சாதாரண மக்களும் படித்துணர வழிகாட்டினார். பெரியபுராணத்திற்கு நாவலர் எழுதிய "பெரியபுராண சூசனம்" என்ற விரிவுரை ஒன்றே நாவலரின் அதிசிறந்த சைவப்பணிக்கு சிறந்த எடுத்துக்காட்டு. இவ்வாறு தான் எழுதியனவும், உரை எழுதியனவுமான சைவம் சார்ந்த நூல்கள் அனைத்தையும் மக்கள் படித்துணர வாய்ப்பாக அச்சுயந்திரசாலைகளை யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் நிறுவி நூல்கள் அச்சிடும் பணியை விரிவாக்க நாவலர் மேற்கொண்ட முன்னோடி நடவடிக்கை தமிழ்நூல்கள் வெளியீட்டுத் துறையில் பாரிய மறுமலர்ச்சி தோன்ற வழிகாட்டியாக அமைந்தமை நாவலரின் பன்முகப் பணிகள் பலவற்றில் தலையாயது.

சைவசமய உண்மைகளை விளக்கும் கந்தபுராணம் போன்ற நூல்களுக்கு உரைகூறும் "புராணபடன மரபு" ஒன்று யாழ்ப்பாணத்தில் ஆழ வேரூன்றிச் சைவ வாழ்வு சிறக்க வழி காட்டியவரும் நாவலரே. புராணப் பாடல்களுக்கு ஏற்ற ராகத்தில் ஒருவர் பாடலை வாசிக்க அதே ராகத்தில் கருத்துரை, பொழிப்புரை, சொல்நயம், பொருள்நயம், சைவசித்தாந்தக் கருத்துக்கள், திருமுறை மேற்கோள்கள் என்ற ஒழுங்கில் நாவலர் கூறும் விரிவுரைகள் பதிவு செய்யப்பட்டிருந்தால் ஆய்வு முறையில் அமைந்த புராண விரிவுரை நூல்கள் பல தமிழிற்குக் கிடைத்திருக்குமெனக் கூறுவர்.

சைவச் சிறார்கள் சைவச் சூழலில் கல்விகற்றுச் சைவநெறி ஒழுகலாறுகள் வழி வாழவேண்டுமென்ற உயர் நோக்குடனேயே சைவப் பாடசாலைகளை யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலும் தமிழ் நாட்டில் சிதம்பரத்திலும் நிறுவித் தமிழ்க் கல்வி வளரவும் கிறிஸ்தவர்கள் ஆங்கிலக் கல்வி மூலமாக மக்களை ஈர்த்ததனால் வேலை வாய்ப்புக்கள் போன்ற வாழ்க்கை வசதிகளைக் கருதி அக்கல்வி நிறுவனங்களில் கல்விக்காகச் சேர்ந்து மதம் மாறுவதனை அவதானித்த நாவலர் 1872இல் சைவ ஆங்கில பாடசாலை ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நிறுவி ஆங்கிலக் கல்வி வளரவும் வழிவகுத்தார். இக் கல்வி நிறுவனமே வளர்ந்து இலங்கையின் இன்றைய விரல் விட்டெண்ணக்கூடிய புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றான யாழ் இந்துக்கல்லூரி என்பதுடன் நாவலரின் வழிகாட்டலை முன்னுதாரணமாகக் கொண்டு சைவ சமூக சிந்தனையும் நிதிவளமும் ஒருசேர வாய்க்கப்பெற்ற சேர். பொன். இராமநாதன், யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றுயர்ந்த பாவலர் துரையப்பாபிள்ளை, இந்து போட் இராச ரெத்தினம் போன்ற சில பரோபகாரிகளினால் சைவசமயக் கல்வி நிறுவனங்கள் யாழ்ப்பாணத் தின் முக்கிய மையப் பகுதிகளில் நிறுவப்பட்டு இருபதாம் நூற்றாண்டில் யாழின் கல்வித்தரம் பிரமிக்கத்தக்க வகையில் வளர்ச்சியடைவதற்கு நாவலர் தமிழர் கல்வியிலும் குறிப்பாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம், தருக்கம், வைத்தியம், வர்த்தகம், வேளாண்மை, ஆங்கிலம் போன்ற ஒரு வளரும் சமுதாயத்திற்குத் தேவையான அனைத்தும் போதிக்கப்பட வேண்டுமென அவர் கொண்டிருந்த தீர்க்கதரிசனமான கல்விச் சிந்தனைகளே அடிப்படையாகவும் நவீன கல்வியியற் துறைக்கும் மிகமிக ஏற்றனவாகவும் முன்னோடியாகவும் அமைந்தன எனக் கூறலாம்.

பாடசாலைகளில் கற்பிப்பதற்காகச் சமயம், வாழ்க்கை விழுமியங்கள், பல்துறை அறிவு சார்ந்த பலபாடப் புத்தகங்களை நாவலர் எழுதினார். சிறார்களின் அறிவு, ஆளுமையினை வளர்க்கவென அவர் எழுதிய 1ம் 2ம் பால பாடங்கள் முக்கியமானவை. மாணவர்கள் இளமையிலேயே சமய உண்மைகளையும் நீதிகளையும் தம் தாய்மொழியின் அதிசிறப்புக் களையும் உணர்ந்து கற்கவேண்டுமென்ற நோக்கில் எழுதப்பட்டவையே நாவலரின் பாடப் புத்தகங்கள். அவற்றினை மதிப்பீடு செய்த அக்காலத்திய பிரபல இலக்கிய விமர்சகர் வ.வே.சு. ஐயர் தமிழ் நாட்டில் எழுதப்பட்ட பாடப் புத்தகங்களைக் காட்டிலும் நாவலரால் எழுதப்பட்ட பால பாடங்கள் போன்ற பாடப்புத்தகங்கள் வளரும் சமுதாயத்திற்குப் பொருத்த மான முறையில் இலகுவான இனிய தமிழ் நடையில் தெளிவாக எழுதப்பட்ட தரத்தில் சிறந்தவை என்றும் தமிழ்நாட்டுப் பாடசாலைகளிலும் அவற்றினையே பாடப் புத்தகங்களாகக் கற்பிக்கப்பட வேண்டுமென்றும்- Native publik opinion என்ற ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியுள்ளமை நாவலரின் பாடசாலைப் பாடப்புத்தகங்களின் தரச்சிறப்பையும் தமிழ்ப் பாடப்புத்தகங்கள் எழுதுவதற்கு அவரே வழிகாட்டி என்பதனையும் விளக்கப் போதுமானவை.

இளம் வயதிலிருந்தே இலக்கண வழுவின்றித் தூயதமிழைக் கற்க வேண்டுமென்ற நோக்கங்கொண்ட நாவலர் தமிழிலக்கணத்தை மிக இலகுவான உரைநடையில் இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம் என இளவயதினர்க்கும் வகுப்பு உயர உயர நன்னூற் காண்டிகை உரை, நன்னூல் விருத்தியுரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தியுரை எனப் படிக்கிரமத்தில் எழுதித் தூய தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டார்.

நாவலர் செந்தமிழில் நீண்ட வசனங்களை எழுதுவதில் ஆற்றல்மிகு "வசனநடை கைவந்த வல்லாளராயினும்" சாதாரண கல்வியறிவுடைய மக்களை மையமாகக் கொண்டே சமய நூல்கள், பாடப் புத்தகங்கள், அறிவியல் நூல்கள், புராணங்களுக்கான உரை நூல்கள் என அவரெழுதிய உரைநடை நூல்களில் காலத்திற்கேற்ற ஒரு உரைநடையினை அறிமுகப்படுத்தித் தமிழுரைநடையினை வளம்படுத்தினார். சாதாரண கல்வியறிவுடைய மக்கள் வாசித்து விளங்கி உணர்ந்து சமயப் பற்றும் தாய்மொழிப் பற்றும் மிக்க சமூகமாகக் கல்வியில் உயரவேண்டுமென்ற நோக்கிலேயே அவர்களின் அறிவு விருத்திக்கு ஏற்றவாறு கருவியாகத் தமிழுரை நடையினைப் பயன்படுத்தினார். சிறு சிறு வசனங்களில் சந்தி விகாரமின்றி இலக்கண வழுவின்றிப் பொருத்தம் பொருத்தமான இடங்களில் அறநூற் கருத்துக்கள், மேற்கோள்கள், உவமைகள், வடமொழிச் சொற்கள் என விரவி வரக் கூற வந்த கருத்து வாசிப்பவர் மனதில் இலகுவாகப் பதியும் வண்ணம் ஒரு இனிமையான இலகுவான உரைநடையினை நாவலர் தமிழில் கையாண்டமைதான் அவரைத் தற்கால உரைநடையின் தந்தை என விதந்து கூறுவதற்குக் காரணமாகும். சைவம் நிலைதளர்ந்து சீர் குன்றுவதற்குக் கிறிஸ்தவர்களின் தீவிரமான மதப் பிரசாரம் மட்டுமன்றிச் சைவ மக்கள் தம் சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களைக் கற்காமையும் கற்றவர்களும் ஏனையோருக்குப் போதிக்காமையுமே காரணம் எனச் "சைவ சமயிகளுக்கு ஓர் விஞ்ஞாபனம்" என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ள நாவலர் அக்குறைபாட்டினை நிரந்தரமாக நீக்குவதற்கேற்ற வகையில் தமிழுரைநடையினைக் கையாண்டு வெற்றி பெற்றார்.

கறையானுக்கும் கால வெள்ளத்துக்கும் இரையாகி அழியும் நிலையில் ஏட்டுச் சுவடிகளிலிருந்த அரும் பெரும் பொக்கிசங்களான பழந்தமிழ் நூல்களை நுணுகி ஆராய்ந்து பரிசோதித்துப் பாடல்களையும் உரையையும் ஒழுங்கமைத்துப் பதிப்பித்தலிலும் நாவலருக்கு நிகர் நாவலரே. தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையருரை, திருக்குறள், நன்னூல் விருத்தியுரை, சூடாமணி நிகண்டு எனப் பல பழம்பெரும் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட நாவலரின் பதிப்புப் பணி அவருக்குப் பின் சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே. சாமிநாதையர் போன்ற பெரும் பதிப்பாசிரியர்களுக்கு முன்னோடியாக அமைந்தது. "நாவலர் பதிப்பென்றால் தூய பதிப்பு" என்பது தமிழ் கூறும் நல்லுலகில் நாவலர் பதிப்பித்த நூல்களுக்கான சிறப்படையாளமாகும். நாவலர் பதிப்புத்துறையில் ஈடுபடாதிருந்திருப்பின் அருந்தமிழ் நூல்கள் பல தமிழ்கூறும் நல்லுலகிற்குக் கிடைத்திருக்காத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கும்.

கிறிஸ்தவர்கள் பத்திரிகைகள் மூலமாகத் தம் சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்பியதுபோல் நாவலரும் "உதயதாரகை" எனத் தமிழிலும் "Hindu Organ" என ஆங்கிலத் திலும் இரு பத்திரிகைகளை வெளியிட்டு சைவசமயம், சைவப் பண்பாடு, பாரம்பரியம் பற்றி இலகு தமிழில் கட்டுரைகளை எழுதி அக்கருத்துக்களை மக்களிடையே பரவச்செய்தார்.

ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரங்களென அழைக்கப்படும் மன்னார் திருக்கேதீஸ்வரம், கீரிமலை, நகுலேஸ்வரம் ஆகிய தொன்மைமிகு இரு சிவாலயங்களும் போர்த்துக்கேயர் போன்ற அந்நியர்களால் அழித்தொழிக்கப்பட்டன என்றும் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையே அமைந்த மகிமையும் சிறப்பும் பெற்ற அச் சிவாலயங்கள் புனரமைக்கப்பட்டு மக்கள் வழிபாட்டுக்கான சிவத்தலங்களாக விளங்கவைக்கவேண்டுமென்றும் சைவசமயிகளுக்கென நாவலர் வெளியிட்ட விஞ்ஞாபனங்களே அக் கோவில்களின் இன்றைய புதுப்பொலிவிற்கும் சிவவழிபாட்டுச் சிறப்பிற்கும் காரணமாகின.

குறிப்பிட்ட ஒரு விடயம் பற்றி அதனை வாசிப்பவர்கள் அதில் எழுதப்பட்ட கருத்துக் களை இலகுவில் விளங்கிக் கொள்ளும் வகையில் விளக்கமாகவுந் தெளிவாகவும் எழுதப்படும் "கட்டுரை" என்னும் இலக்கிய வடிவம் தமிழில் சிறந்த முறையில் அமைந்து வளர்ச்சிபெற வழிகாட்டியவரும் நாவலரே. அவர் எழுதி வெளியிட்ட கிறிஸ்துவத்தைக் கண்டித்துச் சைவத்தின் சிறப்பை வியக்கும் கண்டனக் கட்டுரைகள் "யாழ்ப்பாணச் சைவசமய நிலை" போன்ற துண்டுப் பிரசுரங்கள், விஞ்ஞாபனங்கள் என்பன நாவலரின் கட்டுரை ஆக்கங்களுக்குச் சிறந்த உதாரணங்களாகும். ஆங்கில மொழியிலுள்ள, மொழிக்கு அழகு சேர்க்கும் குறியீட்டு முறைகளைத் தமிழில் அறிமுகப்படுத்திக் கட்டுரைக்கலை தமிழில் பெருவளர்ச்சி பெறவும் நாவலரே முன்னோடி.

இவ்வாறு கிறீஸ்தவ மதத்தின் தீவிரமான பிரசாரப் பிடியிலிருந்து சைவத்தை விடுவித்துக் காத்து வளர்க்க வேண்டுமென்பதனைப் பெர்சிவல் பாதிரியாரின் கிறீஸ்தவ பாடசாலையில் கல்வி கற்ற காலத்திலிருந்தே தன் உயிர் மூச்சாகக் கொண்டிருந்த ஆறு முகம் என்ற இளைஞன் சைவம், தமிழ் சார்ந்த நூல்களைத் தாம் துறைபோகக் கற்று பேரறிவு நிரம்பப் பெற்றவராக உயர்ந்ததனாலும், மேற்படி நூல்களைக் கற்கும் வாய்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகளின்றியும் கற்ற ஒரு சிலரும் ஏனையோருக்கு அவற்றில் அடங்கியுள்ள அருங்கருத்துக்களைக் கற்பிக்காமலும் அக்காலத்திய தமிழ்ச் சமூகம் கல்வியில் மிகமிகப் பின்தங்கிய ஒரு சூன்யமான இருள்படர்ந்த ஒரு சூழ்நிலைதான் கிறிஸ்தவர்கள் தம் தீவிர பிரசார நடவடிக்கைகளினால் தமிழ் மக்களைத் தம்பால் ஈர்க்கவும் மதம் மாற்றும் முயற்சியில் வெற்றி கொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்பாக அமைகின்றது என்பதனைத் திடமாக உணர்ந்தவர் நாவலர். தனது இவ்வாதங்கத்தினை "எமது சைவசமயிகள் தமது சமய நூல்களைக் கற்காது கல்வியில் பின் தங்கியிருப்பதனால் சைவம் குன்றுகிறது; கிறீஸ்தவம் பரவுகின்றது. நான் இல்வாழ்க்கையில் புகவில்லை. காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டுமென்ற பேராசையே தன்னை இருபது வருடகாலம் இரவும் பகலும் தொண்டாற்றச் செய்ததென்றும்" சைவ சமயிகளுக்கான விஞ்ஞாபனம் என்னும் கட்டுரையில் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டுள்ள நாவலர் பிறமத ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்படும் சைவம் நீடு நின்று நிலைக்க வேண்டுமாயின் தன் மக்கள் கல்வியறிவில் உயர்ந்தவர்களாக வளரவேண்டுமென்ற தீர்க்கதரிசனமான சிந்தனையுடனேயே அவர் சைவத்தோடு அதற்குக் கருவியாகிய கல்வியையும் ஒருசேர வளர்க்க முழு மூச்சுடன் முயன்று மேற்கொண்ட பன்முகப் பணிகள் நாவலரைப் பரசமயக் கோளரியாக மட்டுமன்றித் தமிழ்மொழி வரலாற்றிலும் விரல்விட்டெண்ணக்கூடிய பேராசான்களில் உன்னதமான ஒருவராகவும் உயர்த்தி விட்டது எனக் கூறலாம்.

நாவலரின் மேற்குறிப்பிடப்பட்ட பன்முகப் பெரும் பணிகள்தான் சைவத்தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியம் தமிழ் சமூகத்தில் ஆழ வேரூன்றவும் ஈழத் தமிழர் பாரம்பரியம் நாவலர் வழி வந்ததெனவும் தமிழ்ப் பேறறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை சிறப்பாகக் கோடிட்டுக் காட்டவும் காரணமாயின.

## ஆன்மீகச் சிந்தனை

மக்களில் பலர் புகழ் வேண்டியோ அல்லது புண்ணியம் பெற வேண்டியோ தர்மம் செய்கின்றனர். அத்தகைய செயல்கள் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை. பரோபகாரம் செய்பவர்கள் இறைவனுக்காக மட்டுமே செய்வதே சிறந்ததாகும். இறைவனுடைய நியதியில் உலகில் உள்ள அனைத்து விஷயங்களுக்கும் இடமுண்டு. அதனால், நம்முடைய கொள்கைதான் சிறந்தது. மற்றவர்கள் கொள்கைகள் தப்பானவை என்று எண்ணம் கொள்வது கூடாது. பிறருக்குப் போதிப்பது சுலபமல்ல.

ஒருவன் வாழ்வில் இறைவன் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற பின்னரே பிறருக்குப் போதனை செய்ய முன்வர வேண்டும். அப்போதுதான் அது நல்ல பயனைப் பிறருக்குத் தரும். மனிதனைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் அவனைப் பெரிதும் பாதிக்கின்றன. அதனால் தெய்வீகப் படங்களை, நாம் இருக்குமிடத்தில் எப்போதும் கண்ணில் படும்வகையில் வைத்திருப்பது நல்லது. அவற்றைப் பார்க்கும்போதெல்லாம் நம் மனதில் அருள் உணர்வு உதிக்கத் தொடங்கும். செடி பெரிய மரமான பிறகு, அதற்கு வேலி தேவையில்லை. ஒரு யானையைக்கூட அதில் கட்டி வைக்கும் அளவிற்கு வலிமை அந்த மரத்திற்கு உண்டாகிவிடும். அதைப்போல பக்குவம் உண்டான மனிதனுக்கும் உலக விஷயங்கள் எந்த இன்னலையும் உண்டாக்குவதில்லை.

*-இராமகிருஷ்ணர்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| தாரணி தர்மேந்திரன் | சுதுமலை | 5000. 00 |
| க. தர்மேஸ்வரன் | ஆனைக்கோட்டை | 2000. 00 |
| பொ. வெங்கடேஸ்வரன் | வல்வெட்டித்துறை | 3000. 00 |
| ஸ்ரீதரன் தமயந்தி | மன்னார் | 6000. 00 |
| பகவத்சிங்கம் கீதப்பிரியன் | நீர்வேலி | 2000. 00 |
| சோ. தனராஜா | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| M. மயூரன் | கொழும்பு | 5000. 00 |
| செ. பாலசுந்தரம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| S. முருகானந்தராசா | சுண்ணாகம் | 1000. 00 |
| க. கதிரேசு ஆசிரியர் | ஆனைக்கோட்டை | 500. 00 |
| குமாரசாமி சோமசுந்தரம் | தெகிவளை | 5000. 00 |
| கு. நித்தியானந்தன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| ரவீந்திரன் மாலா | புத்தூர் கிழக்கு | 3500. 00 |
| நி. சிவரூபன்<br>சி. பாமினி<br>சி. அகிஷன்<br>நி. ரூபகௌரி | வியாபாரிமூலை பருத்தித்துறை | 4500. 00 |
| திருமதி பவானி வடிவேல் (குகன்) | சாவகச்சேரி | 1000. 00 |
| ந. பாலசுப்பிரமணியம் | நீர்வேலி | 500. 00 |
| சண்முகரட்ணம் நாதசொருபன் | ஆவரங்கால் | 1000. 00 |
| சி. பாலமுருகன் | ஆவரங்கால் | 1000. 00 |
| இ. நடேசபிள்ளை | யாழ்ப்பாணம் | 15000. 00 |
| தா. பாலசுப்பிரமணியம் | கரவெட்டி | 2000. 00 |
| அ. பகீரதன் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| சி. செல்வமயூரன் | லண்டன் | 1000. 00 |
| மு. குலவீரசிங்கம் | துன்னாலை | 2000. 00 |
| இ. சிவராஜா | கரவெட்டி | 10000. 00 |
| சர்வானந்தா கோமளா | உடுப்பிட்டி | 500. 00 |
| மா. தெய்வேந்திரம் | ஊரெழு | 5000. 00 |
| ந. ஆனந்தன் குமரய்யா | நல்லூர் | 2000. 00 |
| மா. பிருந்தா | கொழும்பு-6 | 3000. 00 |
| பூ. பவந்தி | லண்டன் | 5000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பூ. மதுரவன் | லண்டன் | 5000. 00 |
| ஜெயராணி யோகிராஜ் | இடைக்காடு | 1000. 00 |
| தி. கோபாலகிருஷ்ணன் குடும்பம் | புத்தூர் | 500. 00 |
| S. பிரதிஷ்குமார் | கொழும்பு | 3000. 00 |
| திருமதி தா கணாதீபன் | தெகிவளை | 5000. 00 |
| வ. ஆறுமுகம் | ஆவரங்கால் | 1000. 00 |
| கு. ரங்கநாதன் மூலம் க. சத்தியஜெயன் நினைவாக | இணுவில் | 5000. 00 |
| ந. பிரசாத் | அச்சுவேலி | 2000. 00 |
| விசாலாட்சி சந்திரசேகரம் நினைவாக | அமெரிக்கா | 25000. 00 |
| மார்க்கண்டு சுவாமிகளின் 35ஆம் ஆண்டு நினைவாக | வவுனியா | 26000. 00 |
| சி. கந்தையா கந்தரோடை | சுன்னாகம் | 5000. 00 |
| திரு திருநாவுக்கரசு குடும்பம் சிவராசா குடும்பம் | நீர்கொழும்பு | 1000. 00 |
| க. சத்தியதாஸ் | சிறுப்பிட்டி | 1000. 00 |
| கேதீஸ்வரன் உதயசாந்தி (மக்கள் வங்கி) | வல்வெட்டித்துறை | 500. 00 |
| சறோஜினிதேவி சிவஞானசுந்தரம் நினைவாக | தும்பளை | 5000. 00 |
| நடராசா சிவபாக்கியம் நினைவாக | அல்லாரை மீசாலை | 1000. 00 |
| சி. ஜெயரட்ணம் | துன்னாலை மத்தி | 1000. 00 |
| ச. டர்வின் | கொடிகாமம் | 1000. 00 |
| ஆ. தெய்வேந்திரன் தோப்பு | அச்சுவேலி | 3000. 00 |
| து. துஷாந்தி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| இ. பாலகிருஷ்ணன் | எழுதுமட்டுவாள் | 1000. 00 |
| பி. திவிஷன் | மல்லாகம் | 5000. 00 |
| திரு முத்துலிங்கச் செட்டியார் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| சி. ஞானாம்பிகை | திருகோணமலை | 500. 00 |
| S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சுசீலா நகைமாடம் | பருத்தித்துறை | 3மூடை அரிசி |
| நிமலன் ஜெயகாஷ் அந்திரான் | நெல்லியடி | 2000. 00 |
| குழந்தைவடிவேல் கதிர்செல்வன் | | 5000. 00 |
| சி. வேல்முருகன் | கரணவாய் தெற்கு | 1000. 00 |
| திருமதி சுவாமிநாதன்மூலம் (மு. சுவாமிநாதன் நினைவாக | ஆவரங்கால் | 5000. 00 |
| வி. மதனதீபன், ரிதுஷன் | அச்சுவேலி (U.K) | 5000. 00 |
| ஆறு திருமுருகன்மூலம் A. குரு | அவுஸ்திரேலியா | 200 அவுஸ்திரேலியா டொலர்ஸ் |
| இரா. சிவலிங்கம் | கரவெட்டி மத்தி | 2000. 00 |
| திரு செல்வரெத்தினம் குடும்பம் (சிவபூமி முதியோர் இல்லம்) | | 100000. 00 |
| நடராஜா சிவகுமார் (சிவபூமி முதியோர் இல்லம்) | அச்சுவேலி | 10000. 00 |
| ஐ. தங்கேஸ்வரன் குடும்பம் | வெள்ளவத்தை | 16000. 00 |
| சி. சண்முகநாதன் ஐயனார் வீதி | பருத்தித்துறை | 3500. 00 |
| திரு மதிதரன் | கரவெட்டி | 2000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிபாடல் பகரும் பழுத்த பக்திப் பிரார்த்தனை - 4

– அமரர் சிவ. சண்முகவடிவேல் அவர்கள் –

சங்கத் தமிழ் தொகைநூல் பரிபாடலில் திருமால்மீது பாடப்பட்ட பாடல்கள் ஆறாகும். அவற்றில் முதற்பாடல் இதுவாகும். அது கடவுள் வாழ்த்தாக அமையப்பெற்றது. திருமால் அடியார்கள் கடவுளாகத் திருமாலைப் போற்றும் திறமே திறம்.

"உயிர் எல்லாவற்றிற்கும் அச்சந்தரும் படம் விரிக்கப்பட்ட ஆதிசேடனுடைய அரிய ஆயிரம் தலைகளும் சினத்தீயைச் சொரிகின்ற தன்மையோடு நினது திருமுடியின் மேலிடத்து உயர்ந்து எழுந்து நிழற்றா நிற்ப திருமகள் வீற்றிருக்கும் அகன்ற திருமார்பினை உடையாய்!!

"குற்றமில்லாத வெண் சங்கினை ஒத்த நிறத்தினையும் உயர்ந்த மூங்கில் தடியின் உச்சியில் கட்டப்பட்ட அழகிய யானைக் கொடியை உயர்த்தி கூரிய வளைந்த கலப்பைப் படையையுடைய ஒற்றைக் குழை கொண்ட பலதேவனாகவும் விளங்கா நின்றனை.

"கருடச் சேவல் வரைந்த அழகிய கொடியை உடைய பெருமானே!!

"தேவரீர் அழகிய தாமரை மலரை வென்ற கண்களை உடையாய்! காயா மலரின் நிறத்திற்கு நிகரான திருமேனியை உடையாய்! அத்திரு மேனியினிடமாகத் திருமகள் விரும்பி அமர்ந்த திருமார்பினை உடையாய்! அம் மார்பினிடத்தே கௌத்துவ மணி திகழும் ஆபரணம் பூண்பாய்!

"கருமலையைச் சூழ்ந்து தீப்பிழம்பு சுற்றியது போன்ற பொன்னிறப் பூந்துகில் புனைவாய்! நாவன்மை மிக்க அந்தணர்கள் உணர்தற்கரிய வேதப்பொருள் நினது அருளுடைமையால் நினது வலப்பக்கத்தில் நிறுத்தப்பட்ட உயிர்கள் நினது அருள் தழுவுதலுள்ளே அமர்ந்து நின்னை வழிபடும் தன்மையை விரித்துரைக்கும்.

"யாங்கள் அவற்றை எடுத்து இயம்ப வல்லேம் அல்லேம்.

பரிபாடல் பாடக் கேட்போம்.

"ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை
தீயுமிழ் திறனொடு முடிமிசை அணவர
மாயுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனிச்
சேயுயர் பணைமிசை எழில்வேழம் ஏந்திய
வாய் வாங்கும் வளை நாஞ்சில் ஒருகுழை யொருவனை (இது தரவு)
எரிமலர் சினைஇய கண்ணை பூவை
விரிமலர் புரையு மேனியை மேனித்
திருநெஞ்சமர்ந் தமர்ந்த மார்பினை மார்பில்
தெரிமணி பிறங்கும் பூணினை மால்வரை
எரிதிரிந் தன்ன பொன்புனை உடுக்கையை
சேவலங் கொடியோய்நின் வலவயி னிறுத்து
மேவலுட் பணிந்தமை கூறும்
நாவல் அந்தணர் அருமறைப் பொருளே" (வரி 1-13) (இது கொச்சகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்கள் மேலும் மொழிகின்றார்கள்.

நினது வரலாறு அறிதற்கு அரிதாதலை யாங்கள் அறிவோம். அடியேங்களுக்கு நினது. திருவடியினிடம் எழுந்த அன்புடைமை சாலப் பெருமையுடையது.

"யாங்கள் இவ்விடத்தே கூறமாட்டாதனவாய்க் கூறாநின்ற கூற்றுக்கள் சிறுமையுடையன என்று எண்ணி வெறுத்துவிடலாகாது! தாமரையில் வீற்றிருக்கும் அழகிய திருமகளாகிய மறுவினைப் பொறுத்த மார்புடையாய்!1

"அடியேங்களுக்கு நீவிர் திருவருள் புரிந்து அருளுதல் வேண்டும்.

"அருமைநற் கறியினும் ஆர்வ நின்வயிற்
பெருமையின் வல்லா யாமிவண் மொழிபவை
மெல்லிய எனாஅ வெருஅ தல்லியந்
திருமறு மார்பநீ அருளல் வேண்டும்"
(வரி 33-36)

"வெற்றி மிக்க புகழினையுடைய அந்தணர்களால் காக்கப்படும் அறமும், நின் அன்பர்களுக்கு நீ அருளுகின்ற திருவருளும் நீயே! நன்னெறியில் செல்லும் திறனில்லாதவரை அந்நெறியில் செல்லும்படி திருத்திய குற்றம் தீர்ந்த சிறப்புடைய மறமும் இவ்வாற்றல் பகையினரை வருத்தும் துன்பமும் நீயே! அழகிய இடத்தையும், எழுச்சியினையுடைய வானத்தில் அழகிய நிலவொளியோடு விளங்கும் திங்களும் சுடுசுடர் கொண்ட ஞாயிறும் நீயே!

"ஐந்து தலைகளைத் தனக்குத் தோற்றுவித்துக் கொண்ட கொல்லும் தொழிலையுடைய கடத்தற்கரிய திறமையையும் வலிமையையும் உடைய ஒப்பற்றவனாகிய சிவபெருமானும் அவனாற் செய்யப்படுகின்ற ஒடுக்கற் றொழிலும் நீயே!

"மெய்யுணர்வினை அளிக்கும் வேதமும் பிரமனும் அவன் இயற்றும் படைப்புத் தொழிலும் நீயே! வானில் வலமாக எழுந்து உயரும் முகில்களும் வானமும் நிலனும் நிலனில் உயர்ந்த இமயமும் ஆகிய அனைத்தும் நீயே!!

"நீ நினது புகழோடு விளங்கி நின்னையே ஒத்தவனாக இருக்கின்றாய்" என்பேன்.

"நின்னாவார் பிறர் இன்றி நீயே ஆனாய்! பொன்னிற ஆடை உடையினாய்! கருடக் கொடியினாய்! சங்கினை உடையாய்! பகைவரைக் கொல்லும் சக்கரப் படையினாய்! கழுவின நீல மணியின் நிறத் திருமேனியானாய்! அளவிறந்த புகழினாய்.

என்று கூறிப் பின்பு வாழ்த்துவர்:

"இன்பம் உறுகின்ற நெஞ்சை உடையேமாகிய யாங்கள்....; யாங்கள் விரும்பும் உறவினரோடும் வேதத்தை அருளிச் செய்த வித்தகா!

"நினது திருவடியாகிய புகலிடத்தில் ஒன்றுகூடி நின்று நினது திருவடி நிழலை கரங்குவித்து வணங்குகின்றோம்.

"என்றென்றும் அத்திருவடி விளங்குவதாக" என்று வாழ்த்தக் கடவோம்.

இவை முதலாம் பரிபாடல் வரி 62-65.

காமரு சுற்றமொ டொருங்குநின் அடியுறை
யாம்இயைந் தொன்றுபு வைகலும் பொலிகென
ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழிப் புலவநின் தாள்நிழல் தொழுதே
(இது சுரிதகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 10

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## சமுதாய ஒற்றுமைக்கு வழிகாட்டிய சித்தர்கள்

### 01) உண்மைக்கு வழிகாட்டும் ஆசான்.

சித்தர்கள் எல்லாம் வல்லவர்கள்; அவர்களால் எதையும் செய்ய முடியும். "தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை" என்ற கம்பன் வாக்கிற்கு அமையத் தனது மனத்தில் நினைத்தவற்றைத் தளர்வறியா மனத்துடன் செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர்கள். எவ்வளவு பெரிய கொடுமையையும் அடக்கிவிடும் சக்தி சித்தர்களிடம் உண்டு. உலகில் நடைபெறும் கொடுமைகள் அனைத்தையும் அடக்கி நீதியை நிலைநாட்ட முடியும் என்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

ஆதிசேடன் ஆகிலுமே அங்கையினாலே
ஆட்டிவிடுவோம் எங்கள் ஆக்கினைக்குள்ளே
நீதியோடு அடங்கியே நின்றிடச் செய்வோம்
நின்ற நிலை தவறாமல் ஆடுபாம்பே.

சிவனுடைய மூர்த்தங்களிலே தெட்சணாமூர்த்தி வடிவம் குருமூர்த்தமாகத் திகழ்கிறது. ஞானம் என்பது உணரப்படும் பொருளே ஒழிய அறியப்படும் பொருள் அல்ல என்பதை தெட்சணாமூர்த்தியின் சின்முத்திரை வடிவம் உணர்த்தி நிற்கிறது. அஞ்ஞானமாகிய இருளி னால் ஒளி மழுங்கிய கண்களை ஞானம் என்கிற துலக்குமாற்றல் வாய்ந்த கருவியினால் திறக்கவல்ல திறமையாளன் எவனோ அவனே குரு என இந்துக்களின் ஞானக்களஞ்சியமாகிய உபநிடதங்கள் கூறுகின்றன. இன்று நமது நாட்டிலே ஞானகுரு என்ற போர்வையிலே பல வேடதாரிகள் நடமாடித் திரிகின்றார்கள். சாதாரண மக்களின் அறியாமையையும் மனித பலவீனத்தையும் பயன்படுத்திப் பணத்தையும் புகழையும் தேட முயற்சிக்கிறார்கள்.

சமயம் மனிதனைப் புனிதனாக்குகிறது. புத்தம்புதிய கலைகள் பஞ்சபூதச் செயல் களின் நுட்பங்களை விளக்கும் கலையாக விஞ்ஞானம் மிளிர்கிறது. விஞ்ஞானம் மெய்ஞ்ஞானமாகிய சமயத்திற்கு எதிரானது என்று சிலர் கருதுகின்றார்கள். "விஞ்ஞானம் மூடநம்பிக்கைகளின் எதிரியே ஒழிய சமயத்தின் எதிரியன்று" என்பது மூதறிஞர் ராஜாஜியின் கருத்தாகும். மூட நம்பிக்கைகளுக்கு எல்லாம் சமயமுலாம் பூசி சாதாரண மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் கயவர்கள் பலர் நமது பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மக்களின் அறிவுக்குச் சுதந்திரம் கொடுக்க மாட்டார்கள். மக்களுடைய சுயசிந்தனையை மட்டந்தட்டுவதே இவர்களுடைய உபதேசமாக இருக்கும். உலகியல் வாழ்வில் துன்ப துயரங் களை அனுபவிக்கும் மக்களுக்குத் தாங்கள் தீர்வு தருவதாகக் கூறிப் பல போலிச் சடங்கு களைச் செய்வார்கள். ஏழை மக்களின் உழைப்பைச் சுரண்டுவதே இவர்களுடைய முக்கிய நோக்கமாகும். மக்கள் ஒன்றுபட்டு முன்னேறுவதற்கும் மூடநம்பிக்கையற்று வாழ்வதற்கும் இவர்கள் தடையாக நிற்பார்கள். ஒன்றுபட்டு நிற்கும் மக்களிடையே பிரிவினையைத் தூண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவார்கள். பிரித்தாளும் தந்திரத்தினால் ஒன்றுபட்டு நிற்கும் சமூகத்தைத் துண்டாடி விடுவார்கள்.

இப்படியான வேடதாரிகளை நம்ப வேண்டாம்; நம்பி ஏமாற வேண்டாம். இவர்களை நம்புவதனால் எந்த நன்மையையும் பெறமுடியாது. துன்பத்திலிருந்து கரையேற முடியாது எனப் பாம்பாட்டிச் சித்தர் தெளிவாகக் கூறுகின்றார். உண்மைக்கு வழிகாட்டும் ஆசானைத் தேடிப் பிடியுங்கள் என்கிறார். துன்பத்திலிருந்தும் கவலையிலிருந்தும் விடுதலை அளிக்கக் கூடியவரே உண்மையான குரு எனக் கூறுகின்றனர். வேதத்தின் உண்மையான பொருளைத் தெளிவாக அறிந்தவர் வேதத்தையும் கடந்து நிற்கும் மெய்ப்பொருளை கண்டறிந்தவர். அந்த உண்மையைத் தமது உள்ளத்திலே படியும்படி தெளிவாக அறிவிக்கக் கூடியவர் எவரோ அவர்தான் உண்மையான குரு எனக் கூறுகின்றார். இத்தகைய உண்மையான குருவினை அடைந்து உண்மையை அறிந்து ஆனந்தம் கொண்டு ஆடு பாம்பே என்று பாம்பாட்டிச் சித்தர் பாடுகின்றார்.

வேதப் பொருள் இன்னதென்று வேதம் கடந்த
மெய்ப் பொருளைக் கண்டு மனம் மேவ விளம்பிப்
போதப் பொருள் இன்னதென்று போதனை செய்யும்
பூரண சற்குருநாதன் கண்டு ஆடாய் பாம்பே.

உலகப் பொருள்களிலே உள்ளத்தை ஈடுபடுத்தி உழலக் கூடாது. உலகப் பொருள்கள் நிலையற்றவை; அழிந்து விடக்கூடியன. அறிவற்றவர்கள் தான் உலக வாழ்விலே மயங்குவார்கள். "நில்லா உலக வாழ்வை ஏழை நான் நிலையென்று கொண்டு நித்தம், பொல்லா வழிகளிலே புத்திகெட்டு அலைந்திட்டேன் என அலைந்து திரிவார்கள். இவ்வுலக வாழ்வை இன்பந்தருவது என நினைத்து மூடர்கள் மயங்கிக் களிப்பார்கள். அழியாத பேரின்பத்தைத் தரும் இறைநிலையை உணர்ந்தவர்கள் பயனற்ற வார்த்தைகளைப் பேசிக் காலத்தைக் கழிக்கமாட்டார்கள். இவர்கள் சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த ஞானச் செல்வர்களாக அகத்திலே இறைவனைக் காண்பார்கள். பேரானந்தப் பெரு அனுபவத்தைப் பெற்று இன்புறுவார்கள்.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் தனது அறிவின் வல்லமையை உணர்ந்து கொள்ள வேண்டும். இருட்டறைக்கு நல்ல விளக்காக இருப்பது அறிவு. நமது வாழ்க்கையிலே நமக்கு கெடுதி வருவதற்கு முன்பு எமது அறிவு மங்கி விடுகிறது. "விநாச கால விபரீத புத்தி" (கேடு வரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே) என்று வடமொழி சுலோகம் இதனைக் குறிப்பிடுகிறது. அறிவுக்கு முதன்மை கொடுக்காமல் வெறும் உணர்ச்சிவசப்பட்டுக் காரியங்களை ஆற்றிவிட்டுப் பின்பு வேதனைப்படுபவர்கள் பலரை நாம் காண்கிறோம். நமது அறிவு சரி பாகச் செயற்படுவதற்கு உரிய ஆற்றலையும் இறைவன்தான் தரவேண்டும். அன்னை பராசக்தியிடம் மகாகவி பாரதி இதனை உருக்கமாக வேண்டுவதை அவருடைய பின்வரும் பாடலிலே காணலாம்.

நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர்மிகு அறிவுடன் படைத்துவிட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமை தாராயோ, இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி! - நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

நமது அறிவு சரியாகச் செயற்பட்டால் நம்மைப் பீடித்திருக்கும் அஞ்ஞான இருளை விரட்டியடிக்க முடியும். மூட நம்பிக்கைகள் நமது அறிவின் ஆற்றலை மங்கச் செய்கிறது. மூட நம்பிக்கைகளின் பெட்டகமாக சிலபேர் சமயத்தைக் கருதுகின்றார்கள். விஞ்ஞானத்திற்கு எதிரானது சமயம் என்றும் கூற முற்படுகின்றார்கள். உள்ளத்தை அருள் நெறியிலே நிறுத்தினால் உண்மையைக் காணும் ஞான விளக்காக நீ நிற்பாய் என்கிறார் இடைக்காட்டுச் சித்தர்.

"இருட்டறைக்கும் நல் விளக்காய்
இருக்கும் உன்தன் வல்லமையை
அருள் துறையில் நிறுத்தி விளக்கு
ஆகு நீ புல்லறிவே"

## 02) அகந்தை அழிந்த இடத்திலே அன்பு வளரும்.

சைவம் என்பதற்கு அன்பு என்பது பொருள். ஆதலால் சைவர் என்பவர்கள் அனைவரிடமும் அன்பு காட்ட வேண்டும்; அகங்காரம் அற்று வாழ வேண்டும். அகந்தை அழிந்த இடத்தில்தான் அன்பு வளர முடியும். அன்பு என்றும், சிவம் என்றும் வெவ்வேறாகப் பிரித்துக் கூறுவதை தவறு என்கிறார் சித்தபுருஷராகிய திருமூலர். இரண்டும் ஒன்றேயென வலியுறுத்துகிறார். அன்புதான் கனிந்து பூரணம் பெற்றுச் சிவமாகிறது என்பதை மக்கள் அறியாமல் தடுமாறுகிறார்கள் என்று வருந்துகின்றார். அறியமாட்டாமல் அலைகிறார்கள் என்பது முனிவனின் துயரம். அன்புதான் சிவமாகிறது என்பதை அறிந்து விட்டால் அந்த அன்பு வெள்ளத்திலே இதயம் திளைத்து சிவானந்தப் பேற்றினைப் பெறுவார்கள். அன்பு நிலைப்பட்டு வணங்குபவர்கள் பேரின்பத்தைப் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

நான் என்ற அகங்காரமும், எனது என்ற மமகாரமும் நீங்கிய இடத்திலேதான் அன்பு தோன்றும். எல்லா உயிர்களிடத்தும் அன்பைச் செலுத்துபவனே உண்மையான சைவன் ஆவான். ஊன் உணவைக் கைவிட்டு அனைவரிடமும் அன்பு காட்டுபவரே குற்றமற்ற சைவர் எனப் பாடுகின்றார் அகப்பேய்ச்சித்தர்.

தான் அற நின்ற இடம் - அகப்பேய்!
சைவம் கண்டாயே!
ஊன் அற நின்றவர்க்கு - அகப்பேய்
ஊனம் ஒன்றும் இல்லையடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைப் பொருளை அறிந்த மெய்ஞ்ஞானிகளின் அகமும் புறமும் என்றும் தூய்மையாகவே இருக்கும். உடலை வலுப்படுத்தக்கூடிய காயகல்பம் போன்ற மருந்துகள் எதுவும் அவர்களுக்குத் தேவையில்லை. பொய், கயமை, சினம், சோம்பல், கவலை, மயக்கம், வீண்புழுக்கம், அச்சம் என்னும் பேய்கள் எல்லாம் அவர்களுடைய அகத்தில் குடியிருப்பதில்லை. சமநிலை தளம்பாத மனநிலை என்றும் அவர்களிடம் இருக்கும் என்கிறார் குதம்பைச் சித்தர்.

மெய்ப்பொருள் கண்டு விளங்கும் மெய்ஞ்ஞானிக்குக்
கற்பங்கள் ஏதுக்கடி - குதம்பாய்
கற்பங்கள் ஏதுக்கடி.

03) பாதகச் செயல்களைத் தவிர்த்தால் பரகதி கிடைக்கும்.

ஈசனுடைய அடியவர்களின் இதயம் கலங்கினால் தேசமும், நாடும், சிறப்பும் அழிந்து விடும். எல்லாம் உன் உடைமையே, எல்லாம் உன் அடிமையே. எல்லாம் உன்னுடைய செயலே என்று சிவத்தினையே எங்கும் வியாபகமாகக் கொண்டு இறைபணியிலே ஊன்றி நிற்போரே ஈசனுடைய அடியார்களாகத் திகழ்கிறார்கள். இவர்களுடைய இதயம் கலங்கினால் சிவமும் கலக்கமுறும். இவர்களுடைய இதய மகிழ்ச்சி உலகை வாழ வைக்கும்.

ஈசனடியார் இதயம் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமதாகுமே நந்நந்தி ஆணையே

-திருமந்திரம்- 534-

சூது, பொய், மோசம் இவைகளை விட்டொழிக்க வேண்டும். சூதாடினால், பொய் பேசினால், பிறரை மோசம் பண்ணினால் நம் சுற்றத்தார் அனைவரும் நம்மை வெறுப்பார்கள். நம்மை விரும்புவோர், ஒருவரும் இருக்கமாட்டார்கள். நாம் அழிந்து போவோம். நமக்கு நாசந்தான் உண்டாகும். தூய்மையான பக்தியும், எல்லா உயிர்கள்மீதும் அன்பு கொண்டிருத் தலுமே மனிதர்களுக்கு நன்மை தரும் செயல்களாக அமையும். ஆதலால் பக்தியையும் அன்பையுமே நேசிக்க வேண்டும்; விரும்ப வேண்டும்; பின்பற்ற வேண்டும் என்கிறார் கடுவெளிச் சித்தர்.

சொல் அரும் சூது, பொய், மோசம் - செய்தால்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்துவிடும்; நாசம்;
நல்ல பக்தி விசுவாசம் - எந்த
நாளும் மனிதர்க்கும் நன்மையாம் நேசம்.

நல்ல வழியைக் கைவிட்டுத் தீநெறியிலே நடப்போர் துறவி வேடம் பூண்டிருந்தாலும், உணவிற்கும், உடுதுணிக்கும் திண்டாடுவார்கள். மானம் துறந்து நல்லவர் கெட்டவர் என்று பாராமல் அற்பர்களிடமும் சென்று யாசிப்பார்கள். பொருள் வேண்டிக் கையேந்தி நிற்பார்கள். பல்லைக் காட்டிப் பரக்க பரக்க விழிப்பார்கள். இந்த நிலையை அழுகணிச் சித்தர் தன்மேல் ஏற்றிப் பாடுகின்றார். அருட் செல்வத்தை தனக்குத் தரவேண்டும் என்று சக்தியை இரந்து வேண்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லர் இடத்தில் போய் பொருள் தனக்குக் கையேந்தி
பல்லை மிகக் காட்டி பரக்க விழிக்கிறண்டி;
பல்லை மிகக் காட்டாமல், பரக்க விழிக்காமல்
புல்லரிடம் போகாமல் - என் கண்ணம்மா!
பொருள் எனக்குத் தாராயோ -அழுகணிச் சித்தர்-

04) ஜீவ சேவையே சிவபூசை

துன்பப்படும் மக்களின் துயரினைப் போக்குவது மிகச் சிறந்த தெய்வீகப் பணியாகும். "ஜீவ சேவையே சிவபூசை" என்பதே இராமகிருஷ்ண பரமஹம்சரின் தாரக மந்திரமாகும். நரர்களாகிய மானிடர்களுக்குச் செய்யும் சேவை நாராயணனுக்குச் செய்யும் சேவை என்கிறார் சுவாமி விவேகானந்தர். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. நோயற்ற உடம்பைப் பெற்று வாழும் மக்கள் சமூகத்தில் பலர்க்கும் உதவுபவர்களாக வாழவேண்டும். துன்பப்படுகின்ற மக்களின் துயரத்தினைப் போக்கவேண்டும். ஏழை எளியவர்களிடம் இரக்கம் காட்ட வேண்டும். ஏழைகள் விட்ட கண்ணீர் கூரிய வாளை ஒக்கும். எனவே ஏழைகளுக்கு எத்தகைய துன்பங்களும் இழைக்காமல் வாழவேண்டும். சுயநலத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு வாழ்வது மனிதத் தன்மையாகாது.

வயிற்றுப் பசியோடு வரும் ஏழைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் உணவு கொடுத்து அவர்களுடைய பசிப்பிணியைப் போக்க வேண்டும். "யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" என்றே தவயோகி திருமூலநாயனாரும் குறிப்பிடுகின்றார். பசித்து வருபவனுக்கு நாளைக்கு வாருங்கள் என்று கூறினால் அவர்களுடைய பசி அடங்காது. பசிப்பிணி போக்குதல் மிகச் சிறந்த அறம் என்றே வேதங்களும் கூறுகின்றன.

ஏழை அனாதிகள் இல்லை என்றால் அவர்க்கு
இருந்தால் அன்னம் கொடுக்க வேண்டும்
நாளை என்று சொல்லில் ஆகாதே; என்று
நான் மறை வேதம் முழங்குதடி.
-கொங்கணச் சித்தர்-

எளியாரை அடித்துத் துன்புறுத்தாதே; அடித்துத் துன்புறுத்துவதால் வரும் பாவம் என்ன பரிகாரம் செய்தாலும் போகாது. உன்னைத் தஞ்சமாக அடைந்தவர்களுக்கு தீங்கு எதுவும் செய்யாதே. பிறர்க்கு முதலில் செய்கின்ற துன்பங்கள் யாவும் துன்பம் செய்தவர்க்குப் பல மடங்காக பின்பு வந்து சேரும் என்றே தமிழ்மறையாகிய திருக்குறளும் கூறுகிறது.

பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்.
-திருக்குறள் 319-

யாருக்கும் வஞ்சனை செய்வதற்கு மனத்திலும் நினைக்காதே என்கிறார் கொங்கணச் சித்தர்.

பஞ்சைப் பனாதியை அடிக்காதே அந்தப்
பாவம் தொலைய முடியாதே
தஞ்சம் என்றோரைக் கெடுக்காதே; யார்க்கும்
வஞ்சனை செய்ய நினைக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05) சிவ மூல மந்திரத்தின் சிறப்பு

சிவனைக் குறிக்கும் மந்திரங்களிலே சிவாயநம என்பது சூக்கும பஞ்சாட்சரம் என்றும், நமசிவாய என்பது தூல பஞ்சாட்சரம் என்றும் அழைக்கப்படும். முத்தியை வேண்டுவோர் சிவாயநம என்ற மந்திரத்தையும் உலகியல் நன்மைகளை விரும்புவோர் நமசிவாய என்ற மந்திரத்தையும் உச்சரிப்பர். அபாயத்தையும் ஆபத்தையும் தடுக்கக்கூடிய மந்திரம் சிவாயநம என்பதைச் "சிவாயநம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை" எனத் தமிழ் மூதாட்டி ஔவையாரும் குறிப்பிடுகின்றார். சிவபெருமான் குடிகொண்டிருக்கும் மந்திரமாகவே பஞ்சாட்சர மந்திரங்கள் அமைந்துள்ளன. பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரிப்பதுதான் நன்மை பெறுவதற்கான வழி ஆகும். யோகம் செய்வோர்க்குத் துணை நிற்பது சிவாயநம மந்திரமே என்று சிவவாக்கியரும் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

06) அன்பும் அருளுமே உற்ற துணை.

ஒவ்வொருவருக்கும் உற்ற துணை அன்பும் அருளுமேயாகும். அன்பையும், அருளையும் பெற்றவர்களால் எதையும் செய்து வெற்றிபெற முடியும். அவர்களால் ஆகாத செயல் என்று ஒன்றுமே இல்லை. எல்லாத் துணைகளையும்விட அன்பின் துணையே, அருளின் துணையே சிறந்தது. எல்லா வலிமையையும்விட அன்பின் வலிமையே, அருளின் வலிமையே அழிக்கமுடியாத வலிமையாக உள்ளது. மனிதன் படும் துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணம் ஆசையே ஆகும். "ஆசையை வெல்பவன் பூரண மனிதன் ஆகிறான்" என்றே பகவத்கீதையும் குறிப்பிடுகிறது.

"ஆசைபடப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசைவிட விட ஆனந்தமாமே"

எனத் தவயோகி திருமூலநாயனாரும் ஆசையால் வரும் தீங்கினை எடுத்து விளக்குகின்றார்.

அகத்திலே வீற்றிருக்கின்ற சிவனுடைய அருளைப் பெற்றுவிட்டால் இவ்வுலகிலே நம்மைப் பீடித்திருக்கும் ஆசைகள் அனைத்தையும் அறுத்தெறியலாம். அவ்வாசைகள் அனைத்தும் தாமே அழிந்து போகும்.

சிந்தையுள் நின்று சிவன் அருள் பெற்றக்கால்
பந்தமாம் பாசம் அறும்.

-ஔவையார் ஞானக்குறள்-

(தொடரும்...

**ஆன்மீகச் சிந்தனை**

முழுமனதுடன் இறைவனிடம் பக்தி செலுத்த முயற்சி செய்ய வேண்டும். உங்களது சொந்த சுகத்தையும் துக்கத்தையும் நீங்கள் ஏன் பெரிதும் பொருட்படுத்துகிறீர்கள். அவனிடம் சரணாகதி அடைவீர்களாக. அவன் உங்களை எங்கு வைத்திருந்தாலும் அது உங்களது நன்மைக்கே ஆகும். இந்த சரணாகதி மனோபாவம் உங்கள் உள் மனதில் உறுதியாக நிலைபெற்றிருக்க வேண்டும் என்று இறைவனிடம் முழுமனத்துடன் பிரார்த்தனை செய்யுங்கள். பின்னர் எல்லாம் நல்லபடியாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ வழிபாட்டில் எமது தொண்டு

சைவர்களின் தெய்வம் சிவன். தெய்வ வழிபாடு சைவர்களால் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. பல ஆலயங்கள் பல காரணங்களால் முழுமையாகக் கைவிடப்பட்டு அல்லது செயலிழந்து உள்ளது. சில ஆலயங்களில் நாள்தோறும் வழிபாடு நடப்பதில்லை. வேறும் பல நிலைகளில் எமது ஆலயங்களுண்டு.

இந்நிலையில் சிவன் ஆலயங்களை நாம் இனங்கண்டு அந்த ஆலயங்களையும் அவற்றின் பயன்பாட்டையும் முழு அளவில் சிறந்த நிலைக்கு இட்டுச் செல்வதை எமது ஓர் அதி உயர் முன்னுரிமைக்குட்படுத்திய தொண்டாகக் கொண்டு உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

இத்திட்டத்தை நாம் பொது மக்களுக்கு விளம்பரப்படுத்தி அவர்கள் ஒத்துழைப்புடன் சிவன் ஆலயங்களின் விபரங்களைப் பெற்று எமது திட்டத்தைக் கட்டம் கட்டமாக விரைவில் ஆரம்பிக்க வேண்டும்.

உங்கள் அறிவிற்கு எட்டிய சிவன் ஆலயம் அல்லது ஆலயங்கள் எங்கேனும் இருப்பதை அறிந்த நீங்கள் அத்தகவலை எமக்குத் தந்து உதவும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

சிவ வழிபாடு பூவுலகெங்கும் தழைத்தோங்குவதற்கு சிறப்பான செயற்திட்டங்களை நாம் அனைவரும் இணைந்தும், ஏனைய சிவ பக்தர்கள் மூலமும் பெற்று அவற்றில் மிகப் பொருத்தமானவற்றை உடனடியாக ஆரம்பிப்பதற்கும் உங்கள் அனைவரின் தீவிர பங்களிப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

எனவே இக் குறிப்பைப் பார்வையிடுபவர்கள் தமது அறிவிற்கு எட்டியவரை செயற்பட்டுக் கொண்டிருக்கும், செயலிழந்திருக்கும், கைவிடப்பட்டிருக்கும், சிதைக்கப்பட்டிருக்கும் சிவன் ஆலயங்கள் தொடர்பான விபரங்களைச் சமர்ப்பிக்கக் கூடிய எவரும் தமக்குத் தெரிந்த தகவலை எமக்குக் கிடைக்கக் கூடியவாறு முதலில் அனுப்பும்படி பணிவன்புடன் வேண்டு கின்றோம். நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி வருமாறு:

தலைவர்,
சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம்,
48, புனித மரியாள் வீதி,
திருகோணமலை.

ஆரம்ப தகவலை நாம் பெற்ற பின் அவ்விடயம் தொடர்பான தகவல் திரட்டு படிவம் ஒன்று தகவல் அனுப்பிய அன்பருக்கு அனுப்பப்படும். அவர் அப்படிவத்தை பூர்த்தி செய்து எமக்கு அனுப்பி ஒத்துழைக்கும்படி வேண்டப்படுவார்.

### சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் சமய சமூகத் தொண்டர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

ஆன்மீகம் மற்றும் மானுட மேம்பாட்டுடன் தொடர்புடைய அறிவை மேம்படுத்தி அவ் அறிவைப் பெற்றவர்களைப் பயன்படுத்தி சமூகத்தில் ஆன்மீகம் மற்றும் மானுட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டுடன் தொடர்புடைய வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்காக மூன்று நாட்கள் வதிவிடப் பயிற்சி நெறியொன்று, எதுவித கட்டணமுமின்றி, தொண்டைமானாற்றில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்படவுள்ளது. அப்பயிற்சி நெறி தொடர்பான சில முக்கிய விபரங்கள் வருமாறு.

1. 2015.08.21ஆம் திகதி அதிகாலை பயிற்சி தொண்டைமானாற்றில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறும் பயிற்சி 23ஆம் திகதி இரவு நிறைவடையும். பயிற்சியில் கலந்து கொள்பவர்கள் அனைவரும் 20ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு சமூகம் தந்து வரவைப் பதிவு செய்தல் அவசியமாகும். பதிவின் பின்னர் நடைபெறும் செயற்பாடுகள் அனைத்திலும் அனைவரும் கலந்து கொள்வது கட்டாயமாகும். 23ஆம் திகதி பயிற்சியைப் பூர்த்தி செய்த அனைவரும் குடாநாட்டிற்குளுள்ள பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலங்களுக்கு தலயாத்திரையில் கலந்து கொள்வார்கள். அன்று நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவம் நடைபெறும் நாளாதலால் நல்லூர் கந்தனையும் தரிசித்து அவனின் அருளையும் அனைவரும் பெறலாம்.

குறிப்பு:

பயிற்சி நடைபெறும் நாட்களில் செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்பதால் பயிற்சியாளர்கள் அனைவரும் சந்நிதி முருகனைத் தரிசித்து அவன் அருளையும் பெறும் வாய்ப்பு உண்டு.

2. 21 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.
3. இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் பெறப்படும்.
4. பயிற்சியில் கலந்து கொள்ளும் அனைவரும் சிவதீட்சை பெறுவதற்கும் பயிற்சி வேளையில் வழங்கப்படும் சிவதீட்சை பெற்ற அன்றிலிருந்து 21 நாட்களுக்குச் சைவ உணவு மட்டுமே அருந்துவதற்கும் உறுதிகொண்டவர்களாயிருக்க வேண்டும்.
5. இப்பயிற்சியில் 50 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் இணைத்துக் கொள்ளப்படுவர்.
6. இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் பின்வரும் தெலைபேசிக்கு குறுந்தகவல்மூலம் அல்லது மின்னஞ்சலுக்கு உங்கள் பெயர், முகவரி, தொ.பே. இலக்கம், மின்னஞ்சல் இருப்பின் மின்னஞ்சல் முகவரியையும் அனுப்பினால் தபால்மூலம் அல்லது மின்னஞ்சல்மூலம் விண்ணப்பப் படிவம் அனுப்பி வைக்கப்படும்.

தொ.பே. இலக்கம்: 0778686150, மின்னஞ்சல்: arivukkathir@gmail.com

7. பயிற்சியை நிறைவு செய்து சான்றிதழ் பெறுபவர்கள் சமயம், சமூகம் சார்ந்த தொண்டுச் செயற்பாடுகளில் தத்தம் மாவட்டங்களில் ஈடுபடலாம்.
8. விண்ணப்பப் படிவம் எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள் 07.08.2015 பி.ப. 4 மணி

இத்தகவலை அனைவரும் தமது நண்பர்கள் உறவினர்களுக்கும் தெரிவிக்கும்படி ஏற்பாட்டாளர்கள் வேண்டுகின்றனர்.


, இத்தகவல் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பில் வெளியிடப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கருட புராணம்

(தொடர்ச்சி...



–திரு இரா. செல்வவடிவேல்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் வெளியிடப்பட்டு வரும் "ஞானச்சுடர்" மாத இதழில் ஸ்ரீ கருட புராணத்தைத் தொடர்ந்து எழுதி நிறைவடைந் துள்ளது. மூலப் பிரதியின் நகலாக இத் தொடர் எழுதப்படவில்லை என்பதை வாசகர்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பழம்பெரும் புராணங்களைப்பற்றி இன்று நம் நாட்டில் பலவிதக் கருத்து வேற்றுமைகள் உலவுகின்றன. அவற்றில் அதீதமான கற்பனைகளும், செய்யமுடியாத செயல்களும், காலம் கடந்த கருத்துக்களும், காலத்திற்கு ஒவ்வாத கொள்கைகளும் நிறைந்திருக்கின்றன என்று சிலர் கூறுகிறார்கள். அவை எல்லாம் கண்ணிற்குத் தெரியாத ஒரு நுண்பொருளை உருப் பெருக்கக் கண்ணாடியின்மூலம் பெரிதாகக் காட்டி விஞ்ஞானி விளக்க முற்படுவதைப் போலவே கண்ணிற்குப் புலனாகாத நுட்பமான தத்துவங்களைக் கதைகள், வர்ணனைகள் முதலானவற்றால் மிகப்பெரியதாகக் காட்டி அறிவிற்குப் புலப்படச் செய்வதற்காக அவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றன என்று மற்றொரு சாரார் கூறுகிறார்கள்.

புராணங்களை விரும்புவோரும், விரும்பாதவர்களும் பலவித வாதப்பிரதி வாதங்கள் நிகழ்த்தித் தங்கள் அறிவாற்றல்களை நிலைநாட்டவும் முயலலாம். அவை எப்படியிருந்தாலும் பழம்பெரும் புராணங்களைத் தற்காலத்திலும் பொதுமக்களிடையே வெகுவாகப் பரவச் செய்வது அவசியமாகும். ஏனெனில் ஜனநாயக முறைப்படி சோஷலிச சமுதாய அமைப்பின்கீழ் வாழும் நாம் மாறுபட்ட கருத்துக்களுக்கு இடமளிப்பது நம் வளர்ச்சிக்கே அதிக முக்கியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பழம் பெரும் நூல்களை தற்காலக் கண்ணோட்டத்தைக் கொண்டு மட்டும் பாராமல் வருங்காலத்தினரையும் கருத்தில் கொண்டு பரம்பரை வழியாக வழங்கச் செய்வது நம்முடைய கடமையாகும். ஏனெனில் நேற்றுவரை நாம் சரியென ஒப்புக்கொண்ட ஒரு கொள்கையை இன்று நாமே மறுக்கலாம். இதுபோலவே இன்று நாம் சரியென ஒப்புக்கொள்ளும் கொள்கைகளை நாளை நாமோ, நமக்குப் பின்வரும் பரம்பரையினரோ மறுத்து நேற்றைய கொள்கையை மறுபரிசீலனை செய்ய விரும்பலாம். மேலும் பழங்காலத்திய கட்டுக்கதை களிலிருந்துதான் இன்றைய ஜேம்ஸ்பாண்டின் வீரதீரச் செயல் போன்ற அதி அமானுஷ்யமான விஞ்ஞானக் கதைகள் பிறந்திருக்கின்றன என்பதையும் அதி அற்புதமாகத் தோன்றக்கூடிய இன்றைய விஞ்ஞான சாதனைகள், விஞ்ஞானக்கிரக ஆராய்வு, நவீன பொருளாதார வாழ்க்கைத் தத்துவங்கள் முதலான பலவற்றிற்கும் பழங்காலத்து நூல்களில் இலைமறை காய்கள் போலுள்ள நுட்பமான விடயங்கள்தான் கருப்பொருட்களாக இருந்து அடிப்படைத் தூண்டுதல்களாகவும் பற்றுக்கோள்களாகவும் விளங்கியிருக்கின்றன என்பதையும் சிந்தித்துப் பார்த்தால், ஒன்றிலிருந்துதான் ஒன்று பிறக்கிறது என்ற தத்துவத்தை நாம் புரிந்து கொள்ளலாம். எனவே நூல்கள் சம்பந்தப்பட்டவரை எதையும் அழிக்காமலோ, அழிய விடாமலோ வருங் காலத்தினருக்கு சேமித்து வைப்பது அவசியம் என்பதை நாம் உணர முடியும்.

இன்று நம் பொதுநலச் சமுதாயத்திற்கு ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் நல்ல உள்ளமும் பரந்த மனமும், தன்னலமற்ற தியாக உணர்வும், பலன் கருதாப் பணியும் இன்றியமையாதனவாகும். அத்தகைய உன்னத மனப்பான்மை சமுதாயத்தின் உள்ளொளி யாக வளரவேண்டும். அதற்கு வழி என்ன? வாழ்க்கையை ஒட்டி நின்று பார்க்கவும், எட்டி நின்று பார்க்கவும் மனிதனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தன்னை முன்னிலைப் படுத்திப் பார்க்கவும் மற்றவற்றைத் தன்னிலைப்படுத்திப் பார்க்கவும் அவனுக்கு இயல்பாக வரவேண்டும். அப்போதுதான் விருப்பு வெறுப்பின்றி வாழ்க்கையைச் சுவைப்பதற்கோ, எத்துறையிலும் வெற்றி பெறுவதற்கோ, பற்றற்ற முறையில் நடமாடிப் பலன் கருதாமல் பணிபுரிவதற்கோ அவனால் முடியும். எவராலும் எளிதில் அடைய முடியாத அத்தகைய உன்னத மனப் பான்மையை கற்பிக்கும் பயிற்சிக் கூடங்களாகப் புராணங்கள் பயன்படும்.

பொதுவாகப் பழம்பெரும் புராணங்களில் நெஞ்சை மகிழ்விக்கும், மலர்விக்கும் சுவையான கதைகளும் அறிவைப் புதுப்பிக்கும் ஆத்ம இரகசியங்களும் சித்தத்தைத் தெளிவுறச் செய்யும் சிந்தனைகளும் நிறைந்து இருப்பதோடு கால தத்துவம், இயற்கையின் இயக்கம், விண்வெளி விரிவு, செயல்வட்டம், உயிரியல், உடலியல் முதலான பலவற்றையும் பற்றி இவற்றில் கூறப்படும் ஆழ்ந்த கருத்துக்களும், நுண்பொருள்களும், நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளும் பயன்படக்கூடியனவாகும். அவற்றில் சில பகுதிகளும் சில வர்ணனைகளும், தண்டனை வகைகளும், குல தர்மத்தை ஒட்டிய கட்டுப்பாடுகளும், சில ஆண் பெண் இயல் பற்றிய சில வாசகங்களும் சில சொற்களும் இந்தக் காலத்திற்கு ஏற்காதனவாகத் தோன்றலாம். ஆனால் பழம்பெரும் புராணத்தை எடுத்து எழுதும்போது சொந்த அபிப்பிராயங்களுக்கு இடமளிக்காமலும் குறைத்தல் திருத்தல் எதுவும் இல்லாமலும் அப்படியே வருங்காலத்தினரின் வரலாற்றுத் தொடர்புகளுக்கும் ஆராய்ச்சிக்கும் விட்டுச் செல்வதே முறையாகும்.

புனிதமெனப் பக்தர்கள் போற்றும் புராணங்களைப் பதிப்பிற்போர் தற்காலத்தை ஒட்டிக் கவர்ச்சிகரமான சித்திரங்களை விற்பனைக்காகச் சேர்த்து வருகிறார்கள். இது

*யோசித்துப் பேசுகிறவன் வருந்தமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும். உணர்ச்சிகளைத் தூண்டும் படங்களை தமது கற்பனையில் வரைந்து மூலத்துடன் இணைப்பது சமூகத்தை பிழையான திசைக்கு வழிநடத்திவிடும். புராணங்களில் வரும் காதல் கதைகளுக்கு சித்திரங்கள் வரைவதைத் தவிர்த்து விடலாம். புராணங்களுக்கு சித்திரம் வரையும் அன்பர்கள் புராணக் கதைகளுக்கு விளக்கம்போல சித்திரங்களை வரைவதாகக் கூறுகின்றனர்.

எனது அன்பிற்குரிய ஓவியர் ஒருவர் பின்வரும் கருத்தைக் கூறினார். காலவெள்ளத்தையும் கடந்து நிற்கும் கலைக் கோவில்களில் சிற்ப அமைப்பு முறையை பாருங்கள். ஆலயத்தில் சுற்றுப்பிரகாரச் சுவர்களிலும், அங்குள்ள கல் தூண்களிலும், கோபுரங்களிலும் மண்டப விமானங்களிலும் சுவாமி தரிசன முகப்பு விதானங்களிலும் தெய்வச் சிலைகள் மட்டுமன்றி பக்தித்துறைக்குச் சம்பந்தமற்ற வேறுபல சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன எனக் கூறினார்.

மனித சமுதாயத்தின் பொதுவாழ்வில் பலதரப்பட்டவர்களின் வாழ்க்கை நிலைகள், மனோநிலைகள் தொழில் முறைகள், பெண்களின் குளியல் முதலான ஆடையலங்காரக் கலைகள், இளைஞர் முதல் குரங்குவரை பலரின் குறும்புகள் முதலான பலவற்றையும் பிரதிபலித்துக் காட்டும் சிற்பங்கள் ஆலயங்களில் ஆங்காங்கே நிறைந்திருப்பதற்குக் காரணம் என்னவென்று சிந்தித்தேன். ஆலய தரிசனத்தின்மூலம் ஆண்டவன் பக்தி என்பது ஒருசாரார் மட்டும் போற்றிப் பயனடையும் படியான சாதனமாகிப் பொது வாழ்வைவிட்டு ஒதுங்கிவிடாமல் பலதரப்பட்டவர்கள் நிறைந்த பொது வாழ்விலும் இடம்பெற்று அவரவரின் வாழ்க்கை நிலைகளையும் மனோ நிலைகளையும் பிரதிபலித்துக் காட்டிப் பலரின் கண்களையும் கருத்தையும் கவர்ந்து, இழுத்து கலைச் சுவையின்மூலம் வாழ்க்கை இரசனையோடு பக்தியையும் உள்ளத்தில் மூட்டிவிடவேண்டும் என்றும் அதோடு அந்தந்தக் காலத்திய நாகரிகம், ஆடையலங்காரம், தொழில் முறைகள், வாழ்க்கை விதங்கள் முதலான பலவற்றையும் பிரதிபலித்துக்காட்டும் வரலாற்று நிலையமாகவும் திகழ வேண்டும் என்றும், பொதுவாக மனித சமுதாயம் முழுவதற்கும் இருதய நாடியாக ஆலயம் இயங்கி வரவேண்டும் என்றும் கருதியே நம் முன்னோர்கள் அவ்வாறு அமைத்திருக்கிறார்கள் என்று எனக்குத் தோன்றியது.

தமிழ்நாட்டில் கும்பகோணம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பல பிரசித்திபெற்ற ஆலயங்களுக்கு அடியேன் பல தடவைகள் சென்று வழிபடும் பேறு பெற்றிருக்கிறேன். அப்போதெல்லாம் அந்த ஆலயங்களில் மேற்குலக உல்லாசப் பயணிகள் படையெடுத்து வந்திருப்பதையும், அவர்களில் பெரும்பாலானோர் கற்தூண்களில் கதை படிப்பதையும் கண்டிருக்கிறேன். பக்திக்குச் சம்பந்தப்படாதவையாகத் தோன்றும் அத்தகைய ஆலயச் சிற்பங்களிடையில் ஆண் பெண் இயல் பற்றிய சிற்பங்களே அதிகமாகவும் தத்ரூபமாகவும் கவனத்தை அதிகம் ஈர்க்கின்றன. அவற்றில்த்தான் எத்தனையெத்தனை ரகங்கள்? தற்காலச் சினிமாக் கவர்ச்சிக் கன்னிகளும் கூசும்படியான கோலத்தோடும் கோணங்களோடும் நிற்கும் பெண் சிற்பங்கள், சினிமாப் படக்காரர்களும் படம் பிடித்துக் காட்டத் தயங்கும்படியான ஆண் பெண் காதற் காட்சிகளைத் தத்ரூபமாக் எடுத்துக் காட்டும் சிருங்காரச் சிற்பங்கள்; ஹாவ்லக் எல்லீஸ் போன்ற நவீன காமஇயல் ஆராய்ச்சியாளர்களும் கூறத்தவறிய சில விசித்திர மோகங்கள் உட்பட பலவிதமான காதல் களியாட்டங்களையும் இயற்கைக்கு முரணான லீலா விநோதங்களையும் தத்ரூபமாக விளக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும் கேளிக்கைச் சிற்பங்கள் இவையெனலாம். கலைநுட்பச் செறிவோடும் கைவண்ணச் சிறப்போடும் செதுக்கப்பட்டிருந்தாலும் திருக்கோயில்களிலே கருப்பொருளாக எப்படி இடம்பெற்றன? தெய்வத் திருவுருவச் சிலைகளைச் செதுக்கிய அதே சிற்பிகள் இத்தகைய சிருங்காரச் சிற்பங்களையும் செதுக்க எப்படி முன்வந்தார்கள்? ஆலயத்தைக் கட்டியவர்கள் அவற்றுக்கு எப்படி இடமளித்தார்கள்? ஆலய தரிசனத்துக்கு வரும் பக்தர்களும் ஞானிகளும் பெரியோர்களும் அவற்றைப் பார்த்தும் அவற்றை ஆட்சேபனை எழுப்பாமல் அவற்றை ஏன் அங்கிகரித்து வந்தார்கள்? அவற்றை ஆலயத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டுமென்ற யோசனை ஏன் ஒருவருக்கும் உதிக்கவில்லை.

காரணம், பக்தியும் காதலும் நெருங்கிய தொடர்பு உடையதாக இருப்பதுதான்! மனித நிலையில் உடலின் நினைவோடு இரு உயிர்களும் அப்படியே லயித்து ஒன்றாக ஐக்கியமாகிவிட வேண்டுமென்று துடிக்கும் தவிப்புத்தான் காதல்! ஞான நிலையில் உடல் நிலையையும் தாண்டி நின்று பரமாத்மாவோடு ஜீவாத்மா அப்படியே ஐக்கியமாகிவிட வேண்டுமென்று கொள்கிற மானசீகக் காதல்தான் பக்தி. மகாகவி பாரதியாரும் “காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர். கடவுள் நிலை அவளாலே எய்தல் வேண்டும்” என்று பாடியிருக்கிறார்.

மனிதனிடம் உள்ளடங்கிக் கிடக்கும் உணர்ச்சிகளுக்கு எல்லாம் வகைப்படி வடிகால் வகுத்து வெளிப்படுத்தி அவற்றை உயர்வழிப்படுத்தும் முறை ஆலயத்துச் சிற்பங்களின் அமைப்புக்களில் அடங்கி இருப்பதையும் காணலாம். முக்கியமாக ஒரு சிற்பத்தூண் (ஓவியங்களாகவும் வரையப்பட்டுள்ளது) என் சிந்தனையைப் பெரிதும் கிளறியது. அந்தத் தூணின் நடுவே கண்ணன் குழலூதி இசைப் பிரம்மமாக நிற்கும் தோற்றமும், அதனருகே ஒரு புறம் ஒரு முனிவர் ஒற்றைக் காலில் நின்று கைகூப்பித் தொழுது தவம் புரியும் தோற்றமும், கண்ணனின் அருகே மறுபுறம் ஒரு பெண் மோக மயக்குடன் நிற்கும் தோற்றமும் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு இரண்டு முரண்பட்ட தோற்றங்கள் நிற்பது ஏன் என்று சிந்தித்தபோது, “கண்ணனைப் பார்க்கும் ஞானிகள் அந்தக் கண்ணனின் பரப்பிரம்ம நிலையைக் கண்டு மெய்மறக்கிறார்கள். மோகிகளோ அந்தக் கண்ணனின் லீலைகளையே கண்டு மயங்குகிறார்கள். இரண்டும் கண்ணனை அடைவதற்குரிய வழிகள்தான்! மேலும் பக்தர்களுக்கு பெண்ணின் மோகச் சிற்பம் ஒரு சோதனைக் கட்டம். மோகிகளுக்கோ ஞானியின் தொழுகைச் சிற்பம் ஒரு புதுத் திருப்பம்” என்று உணர்த்துவதுபோலத் தோன்றுகிறது.

மனிதனின் உடலுக்குள் இருக்கும் உயிர் அந்த உடலோடு ஒட்டிய புற வாழ்க்கையிலும் இருந்து வளர்ந்தோங்கி, அதே சமயம் அந்த உடலையும் தாண்டி நின்று பரம்பொருளில் ஒன்ற முயலும் சுக வாழ்க்கையிலும் ஈடுபடுகிறது. ஆலயத்தில் இறைவனோ அதன் உள்ளுறைப் பொருளாக இருந்து புறவாழ்க்கைப் புலனாகி, அதே சமயம் அந்த ஆலயத்திற்கு அப்பாலும் விரிந்த பரம்பொருளாக நின்று ஆனந்த உருவாக விளங்குகிறான். இவற்றைச் சிந்தித்துப் பார்த்தால் ஆலயம் என்பது உடலியல் என்றும் இறைவன் என்பது உயிரியல் என்றும் கொண்டு உடலியல் வழியே உயிரியலை உயர்த்தும் முறையை நாம் உணரலாம். அப்பொழுது ஆலயத்தின் மூலஸ்தானம் சுக வாழ்க்கைக்கும், சுற்றுப் பிரகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற வாழ்க்கைக்கும் உரியனவாகத் தோன்றும். புறவாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும் நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்துப் படிப்படியாக அகவாழ்க்கையை மலர்விக்க வேண்டும். ஒருவன் ஒவ்வொரு படியாக ஏறித்தான் கோபுரத்தின் உச்சியை அடைய முடியுமே தவிர, அடியிலிருந்து பாய்வதனால் உச்சியை எட்டிப்பிடித்துவிட முடியாது! எனவே ஆலயத்தின் சுற்றுப்பிரகாரத்தில் புறவாழ்க்கையின் பல படிகளையும் காட்டும் பலதரப்பட்ட சிற்பங்களும் அமைந்திருக்கின்றன. மூலஸ்தானத்திலோ அக வாழ்க்கைக்குரிய திருவுருவங்கள் மட்டுமே காட்சியளிக்கின்றன.

ஆண்டவனின் பரம்பொருள் தத்துவத்தை உணர்ந்து பரிபக்குவநிலை அடைந்த ஞானிகளுக்கு ஆலயமும் ஆண்டவனும் அவர்களின் உடலும் உயிருமாகி வருவதால் அவர்களுடைய புறக்கண்களுக்கு ஆலயமோ, ஆண்டவனோ தேவைப்படாது! பரிபக்குவம் அடைய விரும்பும் பக்தர்களுக்கும், பலதரப்பட்ட மனோ நிலையிலுள்ள பாமரர்களுக்குமே ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே பல தரப்பட்டவர்களையும் கவர்ந்து அவர்களின் வாழ்வு வழியிலேயே பக்தி பெருகுவதற்கே திருக்கோயில்களில் பல விதமான சிற்பங்கள் கவர்ச்சிகரமான காட்சிப் பொருளாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

## நின்தமரை இடர்யமனும் அணுகான்

நித்த முனைக் கெஞ்சி யருள் நீள் நிலத்து பக்த ரெலாம்
நேர்த்தி வைப்பர் நினைப்பது நடக்கும்,
நின்கடமை பிரதானம், நின்தமக் கூனமில்லை
நின்தமரை இடர்யமனும் அணுகான்,

சத்தியம் காத்து நீ தர்மங்கள் செய்து பார்
சந்நிதி போல் தித்திக்கும் கோயி லுண்டோ?
சங்கட மெதுவாகி லும்பழ வினை யோடுமே
சகல நோய் நிவாரணி யதுவே,

பத்தியம் பார்க்காதே பரோபகா ரம்முண்டு
பாலிக்கு மனுகூல முண்டு,
பரவுதிரு முருக வழி பாடங்கு மிகவுண்டு
பார்க்கவே பசிதீருமே,

எத்திக்கும் குழந்தைகள் முதியவர் வறியவர்
எப்போதும் கலங்கக் கூடாது,
ஏழைகள் எளியவர் வாழ்விலே எம்முருகன்
இலங்குவான் இருந்துபார் உண்மை

-கே.எஸ். சிவஞானராஜா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாதத்தின் மகிமைகள்

– திருமதி பொ. செல்வக்காந்திமதி அவர்கள் –

எல்லோராலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆடி மாதம் அம்மனுக்கு உகந்த மாதமாக இந்துக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆடி மாதத்தில் சூரியன் கடக ராசியில் சஞ்சாரம் செய்கிறான். கடகராசி சந்திரனின் ஆட்சி வீடாகும். சிவ அம்சமான சூரியன், சக்தி அம்சமான சந்திரனின் ஆட்சி வீட்டினுள் சஞ்சாரம் செய்வதால் சந்திரன் ஆளுமைப்பலம் அடைகின்றான். அதாவது சக்தியின் பலம் அதிகரிக்கின்றது. ஆடி மாதத்தில் மட்டும் சிவன் சக்திக்குள் அடக்கமாகி விடுகின்றான். இதுமட்டுமல்லாது தமிழ் வருடத்தில் நான்காவது மாதமான ஆடிமாதம் தட்ஷிணாயன புண்ணிய காலத்தில் தொடக்கமாதமாக உள்ளது. அதாவது ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை உள்ள காலமாகும். இக்காலம் தேவர்களின் இரவு நேரம் என்று இந்துமத புராண நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாடிமாத செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் சுமங்கலிப் பெண்களும், கன்னிப் பெண்களும் அம்மனை நினைத்து விரதம் இருந்து வழிபாடு செய்வார்கள். இதனால்த்தான் "ஆடிச் செவ்வாய் தேடிப்பிடி" என்ற விரதத்தின் மகிமையைக் குறிக்கும் சிறப்பு உண்டானது. இவ் ஆடிச் செவ்வாய் விரதம் துர்க்கை, முருகன் ஆகிய தெய்வங்களுக்குரிய விரதம் ஆகும். முருகனின் மறு அவதாரமே செவ்வாய்க் கிரகம் என்று சோதிட நூல்கள் சான்று பகருகின்றன.

செவ்வாய் தோஷத்தாலும், நாக தோஷத்தாலும் திருமணம் தடைப்பட்டவர்கள், குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் செவ்வாய்க் கிழமைகளில், இராகுகாலப் பூஜைகளில் கலந்து அம்மனை வழிபட்டால் தோஷம் நிவர்த்தியாகி திருமணப் பாக்கியமும் பிள்ளைப் பாக்கியமும் கிடைப்பதாக இந்துக்கள் நம்புகின்றனர். இதுமட்டும் அல்லாது நாக தோஷம் உள்ளவர்களும் இவ்விரதத்தை அனுட்டிக்கிறார்கள். ஆடிச் செவ்வாய்க்கிழமைகளில் பெண்கள் எண்ணெய் வைத்து மஞ்சள் பூசித் தோய்ந்து விரதம் அனுஷ்டிப்பார்கள். இவ் ஆடிச் செவ்வாய்க்கிழமைகளில் பச்சரிசி மாவில் வெல்லம் சேர்த்து கொளுக்கட்டை தயாரிப்பர். இந்தக் கொளுக்கட்டையின் வடிவம் வித்தியாசமானதாக இருக்கும். இது மட்டுமல்லாது அன்றையதின விரதத்திற்கு செய்யப்படும் நிவேதனங்களுக்கு உப்பு போட மாட்டார்கள். அனைத்தும் தயாரானதும் அம்மனுக்கு விளக்கேற்றி படைப்பார்கள். இவ்விரத பூஜையில் ஆண்கள் யாருமே அனுமதிக்கப்பட மாட்டார்கள். குழந்தைகளும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

வாரந்தோறும் செவ்வாயில் சித்தாமிர்தத்தில் நீராடி செல்வமுத்துக்குமரனையும், அங்கார மூர்த்தியையும் வழிபட்டால் செவ்வாய்தோஷம் நீங்கும். செவ்வாயில் அங்காருகன் ஆட்டு வாகனத்தில் ஏறி அருள் நல்குவார். செவ்வாய் பெண்ணின் சம்பந்தமில்லாததாக அவதரித்ததாக மகாபாரதம் கூறுகிறது. சிவந்த ஆடையுடன் செவ்வண்ண மலர்சூடி நான்கு திருக்கரங்களில் சக்தி, ஆயுதம், கதை, சூலம் கொண்டவள். 8 குதிரைகள் பூட்டிய ரதத்தில் பவனி வருபவள். செவ்வாய் ஷத்திரிய ஆண் கிரகம். துவரை, செப்புப் பாத்திரம்,

பவளம் முதலியவற்றைத் தானம் செய்தால் நன்மை அளிப்பவள்.

ஆறாத புண், மூட்டுவலி ஆகியவற்றால் துன்பப்படுபவர்கள் செவ்வாயில் ஆராதித்து வந்தால் நலமுண்டாகும். ஜாதகத்தில் செவ்வாய் நல்ல நிலையில் இருந்தால் பூமி, வாகனம், செல்வம், செல்வாக்கு இவற்றை அபரிமிதமாக அளிப்பவள்.

செவ்வாயை வழிபடுவதற்கு செவ்வாயின் கவசம், காயத்திரி நாமங்களைக் கூறி, பூசித்து வந்தால், செவ்வாயின் விருப்பங்களை நிறைவேற்றுவது உறுதி.

ஒரு இடத்தில் அமர்ந்து பக்தி சிரத்தையுடன் 10 நிமிடம் வணங்கினால் போதும். செவ்வாய் தோஷம் உள்ள கன்னிப் பெண்கள் நீராடி தூய உடை அணிந்து, நெற்றியில் திலகம் தரித்து கீழ்க்கண்ட துதியை ஓதினால் நன்மைகள் உண்டாகும்.

செவ்வாயின் காயத்திரி மந்திரம்.

"வீரத்வஜாய வித்மஹே விக்ன ஹஸ்தாய திமஹி
தந்நோ பௌம பிரசோதயாத்"
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## தான தர்மம்

விருதூரில் விக்னேஷ் என்ற செல்வம் மிகுந்த வணிகன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி மங்கை நற்பண்பு நிறைந்தவளாக விளங்கினாள். கணவனிடம் அவள் "நாள்தோறும் ஏழை எளிய மக்களுக்கு நம்மாலான உதவியைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்த்தான் அந்த நல்வினைப் பயனாக நமக்குச் சொர்க்கம் கிடைக்கும்" என்றாள். "இப்போது என்ன அவசரம்? நாம் இன்றைக்கே இறந்திடப் போகிறோமா? நான்கைந்து ஆண்டுகள் செல்லட்டும் உன் விருப்பம்போலப் பிறருக்கு உதவி செய்யலாம்" என்பான் விக்னேஷ். அவளும் அவ்வப்போது இப்படிக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவனும் அதே பதிலைச் சொல்லிக் கொண்டிருந்தான். கணவரை எப்படி நல்வழிக்குக் கொண்டு வருவது என்று அவளுக்குத் தெரியவில்லை. ஒருநாள் திடீரென்று விக்னேஷ் நோயில் படுத்தான்.

அவனைச் சோதித்த மருத்துவர் அவளிடம் மருந்தைத் தந்தார். "உங்கள் கணவருக்கு வேளை தவறாமல் இந்த மருந்தைக் கொடுங்கள். விரைவில் நலம் பெறுவார்" என்று சொல்லிவிட்டுச் சென்றார். அந்த மருந்தை அவள் கணவனுக்கு கொடுக்கவில்லை. அலுமாரிக்குள் வைத்துப் பூட்டினாள். இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த அவன், "மருந்தை ஏன் அலுமாரிக்குள் வைத்துப் பூட்டுகிறாய்?" என்று கேட்டான். "இப்போது என்ன அவசரம்? நான்கைந்து நாட்கள் போகட்டும். மருந்து தருகிறேன்" என்றாள் மங்கை.

"நான் இறந்த பிறகா மருந்து தரப்போகிறாய்?" என்று எரிந்து விழுந்தான். "யார் எப்போது இறப்பார் என்பது யாருக்கும் தெரியாது. இறப்பதற்கு முன் மருந்து சாப்பிடவேண்டும். அதேபோல இறப்பதற்கு முன் தான தருமங்களையும் செய்ய வேண்டும். அதைத் தள்ளிப்போடக் கூடாது" என்றாள். இதைக் கேட்டதும் அவன் ஒரு உண்மையை உணர்ந்தான். இறப்பு என்பது எப்போது வரும் என்று யாராலும் சொல்ல முடியாது. நாம் இருக்கும்போது மற்றவர்களுக்கு நம்மால் ஆன உதவியைச் செய்யவேண்டும் என்பதை உணர்ந்தான்.

தன் மனைவியிடம், "நீ என் அறிவுக்கண்ணைத் திறந்து விட்டாய். இனிமேல் நல்லது செய்வதற்குத் தாமதிக்க மாட்டேன். இன்றே தான தருமம் செய்யத் தொடங்குகிறேன்" என்றான் விக்னேஷ். இதைக் கேட்ட மங்கை மகிழ்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 26. அறியாமையை விளைவிப்பது ஆணவ மலமே

பன்மொழிகள் என்? உணரும் பான்மை தெரியாத
தன்மை இருளார் தந்தது.

**பொருள்:**

பல சொற்கள் எதற்கு? முடிவாகச் சொன்னால் உயிரினது அறியுந் தன்மையை விளங்க வொட்டாதபடி தடுப்பது இருளாகிய ஆணவ மலத்தின் செயலாகும்.

**சொற்பொருள்:**

பன்மொழிகள் என்ன?- ஆணவ மலம் பற்றிப் பலவாறு சொல்லுதல் எதற்கு?, உணரும் பான்மை- உணரும் தன்மை உடையதாகிய உயிருக்கு அத்தன்மை, தெரியாத தன்மை- தோன்றாத நிலை, இருளார்தந்தது- ஆணவ மலமாகிய இருளால் வந்ததாகும்.

**விளக்கம்:**

உயிர் அறிவுடைய பொருள். ஆனால், அதனிடத்தில் அறியாமையும் காணப்படுகிறது. பல சமயங்களில் அதன் அறிவு விளங்காமற் போகிறது. அந்த அறியாமைக்கு- அறிவு விளங்காமைக்குக் காரணம் எதுவாக இருக்கும்? இந்த வினாவை எழுப்பிக் கொண்டு சமயவாதிகள் அதற்குப் பலவிதமான விடைகளைக் கூறியுள்ளனர்.

உயிரிடத்தில் அறியாமையிருப்பது இயற்கை. அதற்குப் போய்க் காரணம் தேடுவது ஏன்? என்று ஒரு சாரர் கூறுவர். இஃது ஏற்கக் கூடியதன்று. ஒரு பொருளிடத்தில் இரண்டு மாறுபட்ட தன்மைகள் இயற்கையாக இருக்க முடியாது. அப்படி மாறுபட்ட தன்மைகள் காணப்பட்டால் அவற்றுள் ஒன்றை அதன் இயற்கை என்றும், மற்றொன்றைச் செயற்கை என்றும் கொள்ள வேண்டும். காட்டாக நீரிடத்தில் குளிர்ச்சியும், மற்றொரு சமயத்தில் அதற்கு மாறாகிய வெப்பமும் காணப்பட்டால் வெப்பத்தைத் தீயின் சேர்க்கையால் வந்த செயற்கை எனவும், குளிர்ச்சியே நீருக்கு இயற்கை எனவும் கூறுகிறோம். அம்முறையில், உயிரிடத்தில் அறிவும் அதற்கு மாறாகிய அறியாமையும் காணப்படுவதனால் அவற்றுள் ஒன்றுதான் உயிருக்கு இயற்கையாகும். மற்றொன்று பிறிதொரு காரணத்தால் வந்த செயற்கையாகத்தான் இருக்க முடியும். அப்படிப் பார்த்தால் அறிவுப் பொருளாகிய உயிருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுதான் இயற்கை என்பது சொல்லாமலே விளங்கும். அறியாமை என்பது அதற்கு வேறொரு காரணத்தால் வந்த செயற்கை என்று கூறிவிடலாம். இதனால், செயற்கையாய் வந்த அறியாமை உயிரின் இயற்கை என்றால் பொருந்தாது என்பது விளங்கும்.

இனி, பிறப்பு நிலையில் உயிர் உடம்பின் சேர்க்கையைப் பெற்று நிற்கிறது. அறிவில்லாத உடம்பின் சேர்க்கையினாலே தான் உயிருக்கு அறியாமை உண்டாகிறது என்று கூறுகின்ற மதங்கள் உண்டு. இ்.து அனுபவத்திற்கு ஒவ்வாத கருத்தாகும். உடம்பு ஊக்கமோடு செயற்படுகின்ற காலத்தில் உயிருக்கு அறிவு நன்கு விளங்குகிறது. உடம்பு செயலற்றுக் கிடக்கின்ற உறக்க நிலையிலும் மூர்ச்சை நிலையிலும் அறிவு சிறிதும் நிகழவில்லை என்பது அனுபவமாக அறிந்தது. இதனால், உடம்பின் சேர்க்கையால்-செயற்பாட்டினால் உயிருக்கு அறிவு விளங்குமேயன்றி மறைவதில்லை என்பது தெளிவாகும். இதுபற்றியே, உடம்பினால் உயிருக்கு அறியாமை உண்டாகவில்லை என்றும், அறிவை மறைத்து அறியாமையை உண்டாக்குகின்ற வேறொரு பொருள் இருத்தல் வேண்டும் என்றும் சைவ சித்தாந்தம் கொள்கிறது.

இனி, கன்மம் என ஒன்று உள்ளது என்பதையும், அதுவே உயிர்களின் இன்ப துன்பங்களுக்குக் காரணம் என்பதையும் பலரும் ஒப்புக்கொள்வர். அந்தக் கன்மமே உயிர்களின் அறிவைத் தடுத்து அறியாமையை உண்டாக்கும் என்று சில சமய வாதிகள் கூறுகின்றனர். கன்மம் செயற்படும் முறையை அறிந்தோமானால் இக் கருத்துப் பொருந்தாது என்பது புலனாகும்.

கன்மம் ஒருவருக்குத் தீமை தரவேண்டும் என்று இருந்தால் அந்த நேரத்தில் அக்கன்மம் அவருடைய அறிவைத் தூண்டித் தீமை வரும் வகையில் செலுத்தும். காட்டாக, ஒருவர் இரு சக்கரவண்டியில் சென்று கொண்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். எப்பொழுதும் மெதுவாக வண்டியை ஓட்டுவதே அவர்க்கு இயல்பு. ஆனால், இந்த நேரத்தில் அவர் படுகாயம் அடைந்து துன்பப்பட வேண்டும் என்று இருக்கிறது. ஆனால், அது அவருக்கு எப்படித் தெரியும்? அதற்கு ஏற்ப அவருடைய கன்மம் அவரது அறிவைச் செலுத்துகிறது; அதிவேகமாக வண்டியை ஓட்டும்படி அவரது அறிவைத் தூண்டுகிறது. அந்த விதி வழியே அவரது மதி செல்கிறது. விதி செலுத்த அவரும் விரைந்து வண்டியை ஓட்டுகிறார். அந்த விரைவு விபத்திலே முடிகிறது.

இவ்வாறே கன்மம் ஒருவருக்கு நன்மைதர வேண்டும் என்று இருந்தால் அந்த நேரத்தில் அக்கன்மம் அவருடைய அறிவை நல்ல முறையில் தூண்டி நன்மை வரும் வகையில் செலுத்தும். மந்த அறிவுடைய ஒருவரையும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் சிறப்பாகச் செயற்படும்படி தூண்டி அவரது கன்மம் அவருக்கு வெற்றியையோ, எதிர்பாராத பெரும் பயனையோ தேடித்தந்து விடும்.

இந்த நிகழ்ச்சிகளிலிருந்து ஓர் உண்மை தெரியவரும். கன்மம் தன்னைச் செய்தவருக்கு நன்மை விளையும் முறையிலோ, தீமை விளையும் முறையிலோ அவரது அறிவைத் தூண்டி விடுமேயன்றி, அவரது அறிவைத் தடுத்து அறியாமையை உண்டாக்காது என்பதே அந்த உண்மையாகும்.

அறிவைத் தடுத்து அறியாமையை உண்டாக்குவது கன்மமே என்றால் அதனால் உயிருக்கு துன்பம் மட்டுமே வரவேண்டும். ஆனால், முன்னேகூறியபடி கன்மம் அறிவில்லாதவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுத் திறனுடன் செயற்படும்படி வைத்து அவருக்கு இன்பம் பயப்பதையும் உலகியலில் காண்கிறோம். ஆதலால் கன்மத்திற்கு வேறாய், உயிரின் அறிவைத் தடைசெய்யும் பொருள் ஒன்று இருத்தல் வேண்டும் என்று தெரிகிறது. அந்தப் பொருளையே ஆணவ மலம் என்று சைவ சித்தாந்தம் குறிப்பிடுகிறது.

இதுகாறும் கூறியவற்றால் உயிரின் அறியாமைக்கு உடம்பின் சேர்க்கையே காரணம்; கன்மமே காரணம் என்பார் கூற்றுக்கள் பொருந்தா என்பது புலனாகும். ஆசிரியர் உமாபதிசிவம் 'பன்மொழிகள் என்'? என்ற தொடரில், இன்ன பல கொள்கைகளையெல்லாம் குறிப்பாய் மறுத்துள்ளார் என்று கொள்ளலாம்.

## 27. ஆணவம் உயிரின் குணம் அன்று

இருள்இன்றேல் துன்புஎன்? உயிர் இயல்பேல் போக்கும்
பொருள் உண்டேல் ஒன்றாகிப் போம்.

**பொருள்:**

ஆணவம் என்ற அக இருள் இல்லையாயின் உயிர்களுக்குத் துன்பம் உண்டாவதற்குக் காரணம் யாது? இந்த ஆணவம் உயிரின் குணம் என்றால், அதனைப் போக்கும் பொருளாகிய திருவருளால் அது கெடும்பொழுது, குணமாகிய அது கெடவே உயிரும் அதனோடு இல்லையாய் ஒழியும்.

ஆனால், முத்தி நிலையில் ஆணவம் மட்டுமே கெட, உயிர் அழியாதிருத்தலால் ஆணவம் உயிரின் குணமன்று. அஃது உயிருக்கு அநாதியே உள்ள குற்றம் என்பது புலனாகும்.

**சொற்பொருள்:**

இருள்இன்றேல்- ஆணவ மலமாகிய அகவிருள் இல்லையென்று சொன்னால், துன்புஎன்- ஆன்மாக்களுக்குத் துன்பம் உண்டாவதற்கு வேறு என்ன காரணம்?, உயிர்இயல்பேல்- இந்த ஆணவம் ஆன்மாவின் குணமேயன்றி, அதனின் வேறாகிய ஒரு தனிப் பொருள் அன்று என்று சொன்னால், போக்கும் பொருள் உண்டேல்- அதனைப் போக்கும் பொருளாகிய திருவருளால் அது கெடுமாயின், ஒன்றாகிப் போம்- குணமாகிய அது கெடவே, ஆன்மாவும் அதனோடு இல்லாதொழியும்.

**விளக்கம்:**

**இருளும் துன்பமும்:**

இரவு நேரத்தில் இருள் நமக்கு இடர்ப்பாட்டினை உண்டாக்குகிறது. அன்று இரவுக்குள் செய்து முடித்தாக வேண்டும் என்ற நிலையில் நாம் ஒரு வேலையில் ஈடுபட்டிருப்போம். அந்த நேரம் பார்த்து மின் தடை ஏற்பட்டு விளக்கு எரியாது போகும். அந்த இருட்டில் என்ன செய்ய முடியும்? எதைப் பார்க்க முடியும்? மின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு இருளில் செய்வதறியாது விழித்து நிற்போம்! மிகுந்த நேரம் ஆகியும் மின்சாரம் வராது. இது என்ன சோதனை! நமது பாடு எப்படியிருக்கும்? இருள் தருகிற துன்பம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இருள் வேறொரு வகையிலும் துன்பம் தருவதுண்டு. இரவு நேரத்தில் விளக்கைப் பிடித்துக்கொண்டு நடந்து செல்கிறோம். பாதை ஒழுங்காக இல்லை. மேடும் பள்ளமுமாக உள்ளது. விளக்கொளியைத் துணையாகக் கொண்டு நடந்தாலும் ஓரிடத்தில் குழியில் தடுமாறி விழுகிறோம். காலை ஒடித்துக் கொள்கிறோம். இந்தத் துன்பத்திற்கு எது காரணம்? இருள்தான் காரணம். மங்கலான விளக்கொளியில் இருள்தான் குழியை வழிபோலத் தவறாக உணரும்படி செய்து அதில் கால் வைக்கும்படியும் செய்தது. அதனால் வந்த துன்பம் இது.

முதல் நிகழ்ச்சியில் இருள், பார்வையை முற்றிலும் மறைத்து ஒன்றையும் அறிய வொட்டாதபடி செய்து அதனால் துன்பத்தை விளைவித்தது. அடுத்த நிகழ்ச்சியில் இருள், பார்வையை மயக்கித் தவறாக உணரும்படி செய்து துன்பத்தைத் தந்தது. இவ்வாறு இருள் இரு விதங்களில் செயற்பட்டுத் துன்பந்தரும் என்பதை அறியலாம்.

இந்தப் புற இருளைப் போன்றது அக இருளாகிய ஆணவம். புற இருளைப்போல ஆணவமும் இரு நிலைகளிற் செயற்பட்டு உயிர்களின் துன்பத்திற்குக் காரணமாகும். அநாதி நிலையில் ஆணவ இருள் உயிர்களை முழுவதும் மறைத்து முழு மூடமாக்கித் துன்பத்தில் மூழ்கச் செய்யும். இது, இரவு நேரத்தில் இருள் கண்ணை முழுவதும் மறைத்து ஒன்றையும் அறியவிடாமற் செய்த நிலையைப் போன்றது. பின்னர் ஆணவ இருள், உயிர்கள் பிறப்பிற்கு வந்த சகல நிலையில், சிறிது விளங்கிய உயிர்களின் அறிவைத் திரிவுபடுத்தி மயக்கிப் பொருள்களைத் தவறாக உணரும்படி செய்து பெருந்துன்பத்தில் ஆழ்த்தும். இது, சிறிது வெளிச்சமுள்ள நேரத்தில் இருள் பார்வையை வேறுபடுத்திக் குழியை வழி என்று தவறாகக் கருதும்படி செய்த நிலைமையைப் போன்றது. ஆணவத்தின் செயற்பாடும் அதனால் உண்டாகும் துன்பமும் பற்றி முன்னே 20ஆம் செய்யுளின் உரையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே, எல்லா வகையான துன்பத்திற்கும் அடிப்படைக் காரணம் ஆணவ இருளே யாகும். இது கருதியே, "இருள் இன்றேல் துன்பு என்" என வினவுகிறார் உமாபதி சிவம்.

**ஆணவம் உயிரின் குணமன்று:**

ஆணவம் உயிரிடத்தில் தொன்றுதொட்டு உடனாக உள்ளதே. அதனை உயிரின் குணம் என்று கொண்டால் என்ன? என்று கேட்கலாம். ஒரு பொருளிடத்தில் உடன் தோன்றுவதெல்லாம் அதன் குணம் என்று சொல்வதற்கில்லை. எடுத்துக் காட்டாகச் செம்பினிடத்தில் களிம்பு உடன் தோன்றுகிறது. அதனைச் செம்பினது குணம் என்று கூறுவார் இல்லை. களிம்பு செம்பிற்குக் குற்றமேயன்றிக் குணமாகாது. அரிசி தோன்றிய அன்றே அதனிடத்தில் உமியும் அமைகின்றது. உமி அதற்குக் குற்றமேயன்றிக் குணமாகாது.

ஒரு பொருளுக்குக் குணம், குற்றம் என்ற இரண்டு உண்டு. இரண்டும் பொருளிடத்தில் முதலிலேயே உள்ளவையாயினும் குணம் என்பது பொருளைவிட்டுக் கடைசி வரையில் நீங்காமல் இருக்கும். குற்றம் என்பது முதலில் பொருளோடு தோன்றியதாயினும் பின்பு அதனை விட்டு நீங்கிவிடும். முற்கூறிய எடுத்துக்காட்டுக்களில் இவ்வுண்மை விளங்கும். இரசவாதம் செய்வோர் செம்பை உருக்கிப் பதமறிந்து இரச குளிகையைச் சேர்க்கும்பொழுது செம்பிலுள்ள களிம்பு முழுதும் நீங்கப் பெறுகிறது. நெல்லைக் குற்றும்பொழுது உமி அரிசியைவிட்டு நீங்கி விடுகிறது. இதனால், களிம்பும் உமியும் குற்றங்களேயாதல் புலனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் என்று உண்டோ அன்றே அதனிடத்தில் ஆணவமும் உடன் இருப்பது பற்றி அதனைக் குணம் என்று கூறிவிடக் கூடாது. ஆணவம் குணம் என்றால் அஃது உயிரைவிட்டு என்றும் நீங்காமல் இருக்க வேண்டும். ஆனால், முத்திக் காலத்தில் உயிரைப் பற்றியிருந்த ஆணவம் முழுவதும் நீங்கி விடுவதை அருளாளர் வாக்குகள் தெளிவுபடுத்துகின்றன. தாயுமானவர் கூறுவதை இங்கே குறிப்பிடலாம்.

"களிம்பு தோய்ந்த செம்புபோல நான் ஆணவ மலத்தோடு கூடியிருந்தேன். செம்பைப் புடம் இட்டுப் பதம் அறிந்து இரச குளிகையைச் சேர்த்துக் களிம்பைப் போக்குவதுபோல, இறைவன் என்னை ஞானமாகிய நெருப்பிலே கனிவுபெற உருக்கிப் பருவம் அறிந்து தனது திருவருளாகிய குளிகையைக் கொண்டு என்னைப் பற்றியிருந்த மலமாகிய களிம்பினைப் போக்கி என்னைத் தூய பொன் ஆக்கித் தனது திருவடியிற் சேர்த்தான்" என்று கூறுகிறார். (சின்மயானந்த குரு.7)

இதனால் முத்தி நிலையில் மலம் உயிரைவிட்டு நீங்குதல் தெளிவு. இவ்வாறு பின்னால் நீங்குவதால் அஃது உயிரின் குணமன்று என்பது விளங்கும்.

மேலும், குணம் அழியுமானால் குணத்தை உடைய பொருளும் அழியும். குணம் கெடப் பொருள் மட்டும் நிற்கும் என்பது என்றும் நிகழாத ஒன்று. ஆனால் முத்தியில் மலம் கெட உயிர் நின்று இறையின்பத்தைத் துய்க்கும் என்று சொல்லப்படுகிறது. மலம் உயிரின் குணமாயின், மலம்கெட உயிரும் அல்லவா கெட வேண்டும்? அவ்வாறு நிகழாமையால் மலம் உயிரின் குணம் ஆகாமை விளங்கும்.

(தொடரும்...

## அன்பான சந்நிதி முருகனுக்கு...

கனத்த மனதுடனே யான் தந்தேன் ஒருமடல்
சினத்துடன் பார்க்காமல் மனம் திறந்து பார்த்தாயே
அனேக அடியார்கள் தந்திருப்பர் விண்ணப்பம்
என் மடலைப் பார்த்ததற்கு நன்றியப்பா வேல்முருகா!

காய்ந்து போன நிலங்களெல்லாம் கண்ணீர் விடமுடியலையே
வாய் பேசமுடியாமல் மௌனியானோம் நாங்களெல்லாம்
ஒய்ந்து நாங்கள் உயிர்விடமுன் உன் கண்ணில் நீரப்பா
சேய் எங்கள் நிலை பார்த்து ஏன் அழுதாய் முருகப்பா.

உன் நெஞ்சில் ஈரமுண்டு எங்களுக்குத் தெரியுமப்பா
வான் பொய்த்து விட்டாலும் உன் கருணை பொய்க்காது
உன் அப்பன் தலையிருக்கும் கங்கையைக் கவிழ்த்து விட்டாய்
என் நெஞ்சு குளிர்ந்த தப்பா வாழ்த்துகின்றேன் பூமித்தாய்!!

*-பொ. பாலேஸ்வரன்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம் பூதங்களும் அருளும்

– திரு இரா. இராஜகோபால் அவர்கள் –

மனிதர்களே!
சாமியை உனக்குள்ளே
வைத்துக் கொண்டு
பூமியில் என்ன
புதிதாய்த் தேடுகிறாய்

ஐந்து புலன்
ஐந்து பூதம்
ஐந் தொழில் அனைத்திலும்
அடங்கி உள்ளதே
ஆண்டவன் சக்தி

மனிதா..... நீ
மண்ணை வணங்கு
நின்று வாழ ஈர்ப்புடன்
இழுத்து வைத்திருக்கிறதே
அதற்காக...!

தண்ணீரை தரிசி – நீ
வளைந்து கொடுக்க
வசதி செய்கிறதே
அதற்காக!

காற்றைக் கும்பிடு
உனக்குள்ளே புகுந்து
உயிர் மூச்சை உன்னில்
உட்கார வைத்திருக்கிறதே
அதற்காக!

தீயைத் தியானி
உனக்குள்ளே தீ வைத்து
உன்னை எரிக்காமல்
உஸ்ணப் படுத்துகிறதே
அதற்காக!

ஆகாயத்தை ஆராதனை செய்
உன்னைச் சுருக்கி வைக்காமல்
உயரத்தில் நின்று
சேவை புரிகிறதே
அதற்காக!

எதற்காக – நீ
இத்தனையும் அறியாமல்
பித்தனைப் போல்..
அத்தனையும்
உன்னைக் கைவிட்டால்
தொட்டனை இந்த
பூமியைத் தவிர
புதிய கடவுள் இல்லை!

மனிதா இனியாவது
இயற்கையை இறைவனாய் நேசி
இல்லையேல் உன்னைக்
காப்பதற்கு மட்டுமல்ல – உனக்குக்
காலனாயும் உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

– சுவாமி கிருஸ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

**6. மகாபாரதத்தின் சாராம்சம் கீதை:**

மகாபாரதம் தனது செய்தியில் அதன் முழுச் சாராம்சத்தையும் வழங்குவதற்கு மிகப் பொருத்தமான நேரமாகக் கருதப்படும் ஒரு மைய நிகழ்ச்சியை வைத்துத் தனது போதனையைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. மகாபாரதத்தின் மிகப் பரந்துவிரிந்த பழச்சுளையே பகவத்கீதை ஆகும். இந்தியப் பண்பாடு என்ற மரத்தில் நன்கு முற்றிப் பழுத்த கனியே பகவத்கீதை ஆகும். பகவத்கீதையின் அனைத்துப் பாடங்களிலும் தரப்படுகின்ற மெய்ப்பொருள் செய்திகள் அந்த இதிகாசக் கதையிலுள்ள பாத்திரங்களினால் நாடகமாகவே நடித்துக் காட்டப்படுகின்றன. இந்த வகையில் மகாபாரதம் பகவத்கீதையை விளக்குகின்றது. பகவத்கீதை மகாபாரதத்தை விளக்குகின்றது. மகாபாரதக் கதை என்ற இந்தப் பெரிய படைப்பின் இதிகாச அம்சம் மனித சமுதாயம் என்ற பெரும் மேடையில் மேடையேற்றிக் காட்டப்படும் ஓர் அவைக்காற்று நிகழ்ச்சி ஆகும். அதன் செய்தி பகவத்கீதை என்ற வடிவிலேயே வழங்கப்பட உள்ளது. இன்னொரு வகையில் நாம் பார்ப்போமாயின் மகாபாரதத்தின் முழுக்கதைக்கும் பின்னணியாக உத்தேசிக்கப்பட்ட விடயம் பகவத்கீதை ஆகும்.

**7. எல்லா இடத்துக்கும், எல்லாக் காலத்துக்கும், எல்லா மனிதர்களுக்கும் உரிய நூல் பகவத்கீதை:**

மகாபாரதத்தின் மாபெரும் ஆசிரியரான வியாசபகவான் மனித சமுதாயத்துக்குத் தான் வழங்கியுள்ள மிக உயர்ந்த கலைப்படைப்பின்மூலம் ஒரே சமயத்தில் இரண்டு விடயங்களைச் சாதித்து விடுகின்றார். ஒன்று, எமது ஆன்மாக்களுக்கு உள்ளே நாம் ஊடுருவிச் சென்று பார்ப்பதற்கான ஒரு செய்தியை அவர் நேரடியாகவே தருகின்றார். மற்றது, அதே சமயம் எமது உணர்வுபூர்வமான ஆளுமையில் அடங்கி உள்ள பல்வேறு விதமான உளவியல் அம்சங்களையும் கவர்ந்து, அவற்றைத் திருப்தி செய்யக்கூடிய வகையில் அதனை அவர் ஆக்கித் தந்துள்ளார். சற்று முன்னர் குறிப்பிட்டதுபோல சமயம் என்பதன் பொதுவான அர்த்தத்தில் அதனுடைய செய்தி சமயம் மட்டுமன்று. அது எந்த ஒரு குறித்த சமயத்தையும் போதிக்கவில்லை. அதாவது, சமயம் என்ற வார்த்தையினால் குறிக்கப்படும் இந்துமதம், பௌத்த மதம், கிறிஸ்தவ மதம், ஸ்லாமிய மதம் முதலாக இன்று உலகில் உள்ள எந்த ஒரு சமயப் பிரிவின் நம்பிக்கையையும் பகவத்கீதை போதிக்கவில்லை. ஆனால் நாம் அது ஒரு இந்து சமயநூல் என்றே கற்பனை செய்து கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவத்கீதை இந்தியாவிலேயே உருவாக்கப்பட்டது என்பது உண்மையே. ஆனால் இந்தப் பிரபஞ்சத்தின் வரலாற்றில் அச்சம்பவம் தற்செயலாகவோ சூழ்நிலையின் ஒரு தேவையாகவோதான் அவ்வாறு நிகழ்ந்தது. ஆனால் அந்த பகவத்கீதை இந்திய மக்களுக்காக மட்டும்தான் என்று கருதப்படுவதில்லை. அது எல்லா இடங்களிலுமுள்ள எல்லாக் காலங்களுக்கும், எல்லா மனிதர்களுக்கும் பொருத்தமானதாக இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே அது கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு வழங்கும் ஒரு செய்தி மட்டுமன்று. இற்றை நாட்களில் பயன்படுத்தமுடியாத, முன்னொரு காலத்துக்கு மட்டும் பொருத்தமான ஒரு நூல் என்று நாம் அதனை ஒதுக்கித்தள்ள முடியாது. அது தன்னகத்தே என்றைக்கும் பொருத்தமான ஒரு செய்தியையே வைத்துக் கொண்டிருக்கிறது. அது ஒவ்வொருவருக்கும் எக்காலத்துக்கும் பொருத்தமான செய்தியையே கொண்டுள்ளது. புவியியல் ரீதியாகவோ, சமூக ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ ஏற்படும் நிகழ்ச்சி மாற்றங்களினால் அல்லது கால ஓட்டங்களினால் துருப்பிடித்து அழிந்துவிடக் கூடிய செய்தி அது அன்று. வாழ்க்கை மாற்றங்களைக் கடந்ததாக உள்ள ஒரு மூலத்தில் இருந்து அச்செய்தி உருவாவதனால் அந்தச் செய்தியின்மீது வாழ்க்கையில் ஏற்படக்கூடிய எந்த மாற்றங்களும் பாதிப்பைச் செலுத்த முடியாது.

### 8. கீதையின் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் வரும் வார்த்தைகள்.

பகவத்கீதையின் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அதன் மணிமுடியாகச் சில வார்த்தைகள் அமைந்திருக்கின்றன. அவ்வார்த்தைகளுக்குள் அதன் உள்ளடக்கத்தின் என்றும் அழியாத நிலையான தன்மை, நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்கக்கூடிய அதன் இயல்பு, அதன் தெய்வீகத் தன்மை என்பவற்றுக்கான ஒரு குறியீடு தரப்படுகின்றது. அக்குறியீடு யாதெனில், அது தற்காலிகமான இவ்வுலகத்துக்கு மட்டும் பெறுமதியுள்ளதோ அர்த்தம் உள்ளதோ மட்டுமன்றி இறுதியுண்மை பற்றிய அறிவின் உருவமான ஒரு செய்தி என்றே கருதப்பட வேண்டும். கீதையின் ஒவ்வொரு பாட இறுதியிலும் அவ்வுண்மை பற்றிய விடயங்களைத் தெரிவிக்கும் அவ்வார்த்தைகள் ஆவன:

1. ஓம் தத் சத் 2. பிரம வித்தை 3. உபநிடதங்கள் 4. கீதைப் பாடல்கள் 5. மறைபொருள் பற்றிய கோட்பாடு 6. யோக சாத்திரம் 7. கிருஷ்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் இடையே நடந்த உரையாடல் என்பன ஆகும்.

### 8.1. ஓம் தத் சத்

இந்த மூன்று வார்த்தைகளும் ஒவ்வொரு பாடமுடிவில் மட்டும் அன்றிப் பதினேழாம் பாத்தின் இருபத்து மூன்றாம் சுலோகத்திலும் வருகின்றன. எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பரம்பொருள் ஓம், தத், சத் என்ற மூன்று பெயர்களால் அழைக்கப்படுகிறது. முதலில் வரும் ஓம் என்பது பிரணவ மந்திரம் ஆகும். ஓம் என்ற பிரணவம் இறைவனின் ஒலிக்குறிப்பாகும். இது ஆற்றல் மிக்கது. ஆதி அந்தம் இல்லாதது. அந்தப் பரம்பொருள் ஒலி வடிவிலும் ஒலி அற்றதாகவும் இருக்கின்றது. ஏனெனில் ஒலியிலிருந்து ஒலியற்றது வெளிப்படுகின்றது என மைத்ராயணீ உபநிடதம் கூறுகிறது. ஓம் என்ற அட்சரம்தான் அப்பரம்பொருள். இந்த அட்சரம்தான் நேரானது. இதை அறிந்துகொண்டு எவன் எதை விரும்புகிறானோ அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை அடைகிறான் என்று கடோபநிடதம் கூறுகின்றது. எழுத்துக்களில் நான் ஓங்காரமாக இருக்கின்றேன் என்கிறார் கிருஷ்ண பரமாத்மா. ஓம் ஓசைகள் அனைத்திற்கும் முதல் காரணமாகிறது. இதுவே நாதப்பிரமம் என்று கூறப்படுகிறது. ஓங்கார ஓசை உலகங்கள் அனைத்திலும் ஒலித்துக்கொண்டு இருக்கின்றது. ஓங்காரமே நிகழ்ந்தது. நிகழ்கின்றது, நிகழப்போவது எல்லாவற்றுக்கும் விளக்கமாகும். முக்காலத்துக்கும் அப்பால் உள்ளது ஓங்காரம். சிவகீதையில் சிவபிரான் இராமனிடம் தான் ஓங்காரமாயிருப்பதாகக் கூறுகின்றார். ஓங்காரம் அனைத்திலும் வியாபித்துள்ளது என்று சாந்தோக்கிய உபநிடதம் கூறுகிறது. ஓங்காரம் அப்பரம்பொருளின் புனித நாமங்களுடன் சேர்த்து உச்சரிக்கப்படுகிறது. வேதம் ஓதுபவர்கள் ஓம் என்று ஆரம்பித்த பின்பே வேதத்தை ஓதுகின்றனர். எல்லையற்ற அறிவு, எங்கும் பரவி இருப்பது, சர்வ வல்லமை உடையது என்ற இவை மூன்றும் ஓங்காரத்தில் இருந்தே பிறந்தவை ஆகும். எல்லையற்ற அறிவு என்றால் ஓங்காரத்தை அறிந்தவர் என்றும், எங்கும் பரவியிருப்பது என்றால் ஓங்காரத்துடன் இருப்பவர் என்றும், சர்வ வல்லமை கொண்டது என்றால் ஓங்காரத்தைப்போலச் சர்வ வல்லமை கொண்டவர் என்றும் பொருள்படும். ஓம் என்ற அனாகதத்துவனியைப் பின்பற்றிச் சென்றால் அந்தத் துவனி குறிப்பதான பரம்பொருளோடு சேரலாம். அதுவே பரமபதம் ஆகும்.

அடுத்த இரண்டாவது வார்த்தை தத் ஆகும். அவ்வார்த்தையில் நேரடிப் பொருள் அது என்பதாகும். தத் என்பது வேதத்தினால் மட்டுமே அறியப்படுகின்றவன், கண்முதலான புலன்களுக்குப் புலப்படாதவன் என்று மறைமுகமாக உணர்த்துகிறது. நமக்கு எட்டாமலும், உணர்வதற்கு மிகமிக அரியதாகவும் உள்ள பரம்பொருளைக் குறிக்கத் தத் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

மூன்றாவது வார்த்தை சத் என்பதாகும். எது சத்தியமாகவும், நித்தியமாகவும் உள்ளதோ அது சத் எனப்படும். ஏனெனில் காலம், இடம், செயல் என்பவற்றினால் பாதிக்கப்படாமல் இருப்பதனால் அது சத் எனப்படுகிறது. எனவே பகவத்கீதை எந்தச் செயலும் ஓம் தத் சத் அல்லது பரம்பொருளின் பொருட்டே செய்யப்படவேண்டும் என்று கூறுகிறது.

(தொடரும்...

**மனிதன் மனிதனாக வேண்டின்...**

தோற்றத்தில் அடக்கம் வேண்டும்.
செல்வத்தில் எளிமை வேண்டும்.
வறுமையில் வாய்மை வேண்டும்.
சினத்தில் பொறுமை வேண்டும்.
தொழிலில் நேர்மை வேண்டும்.
கடமையில் நாணயம் வேண்டும்.
வாழ்க்கையில் கட்டுப்பாடு வேண்டும்.
பழகுவதில் கண்ணியம் வேண்டும்.
வாக்கில் உண்மை வேண்டும்.
சிந்தனையில் தெளிவு வேண்டும்.
செயலில் மனிதத் தன்மை வேண்டும்.
முயற்சியில் தூய்மை வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிரையும் காதம் கிழவியும் காதம்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

ஒளவை அழகு மிக்க சிறுமியாயிருந்த காலத்திலிருந்தே விநாயக வழிபாட்டில் பற்றுள்ளவராயிருந்தார். அதன் மூலம் தெய்வீக ஞானம் பெற்றவர். இல்வாழ்வையும் சுக போகங்களையும் வெறுத்து முதுமையையும் துறவையும் பிள்ளையாரிடம் வேண்டிப் பெற்றவர். உடம்பைப் பக்குவப்படுத்தவே முதுமையை நாடியவர். “என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து” என்பதற்கமைய விநாயகப் பெருமானால் ஒளவையார் வழிநடத்தப்பட்டவர். அந்தக் கணபதியை இராமலிங்க அடிகள் “கலை நிறைகணபதி சரணம்; சரணம், கஜமுக குணநிதி சரணம்! சரணம்! என்கிறார்.

ஒளவை தினமும் ஐங்கரனை நறுமலர்களால் அர்ச்சித்துப் பாமாலை சூடிப்பணியும் வழக்கம் உடையவர். அவ்வாறொரு நாள் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும்போது சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான் பெருமாள் நாயனாரும் கயிலைக்குச் செல்லவுள்ள செய்தியறிந்து தாமும் கயிலை செல்லும் ஆசையால் பூஜையை அவசர அவசரமாகச் செய்தார். (சில நூல்களில் சேரமான் பெருமாள் ஒளவையிடம் தம்முடன் கயிலைக்கு வருகிறாயா? என்று கேட்டதாகவும் விநாயக பூஜையைச் செய்ய வேண்டியுள்ளதால் முடியாது என்றதாகவும் அதனால் ஒளவைக்குப் பலனில்லை போலும் என்று கூறிச் சென்றதாகவும் காணக் கிடக்கிறது.)

இவர் எண்ணத்தை உணர்ந்த தும்பிக்கையான் “அம்மையே! என்ன அவசரம். நிதானமாகவும், அவதானமாகவும் ஆறுதலாகவும் பூஜையைச் செய்யுங்கள். அவர்களுக்கு முன்பு கயிலையில் சேர்ப்பது எனது பொறுப்பு” என அருளினார். இதனை,

“முத்தமிழ் தெய்வப் புலமையிற் சான்றமுதிய ஒளவை சித்த மகிழ்ந்து விரைந்து செய்பூசைத் திறங் கருதா மத்தமிலைந்த மகேசன் கயிலைக் கண்மா இலர்ந்தே உத்தமச் சேரன் வருமுனர்ச் சேர்த்தருள்” என்று விநாயகர் அலங்காரம் கூறுகிறது.

ஐங்கரனின் அருளுரை கேட்ட ஒளவை பஞ்சமுகனிடத்து அன்பு பெருகப் பூசை செய்து “சீதக் களபச் செந்தாமரைப் பூம் பாதச் சிலம்பு பல இசை பாட” என்று பாடத் தொடங்கி “வித்தக விநாயக விரைகழல் சரணே” என்று அகவல் பாடி ஆனந்தமாக அற்புதமாக அருளாளனாம் விநாயகரைத் தொழுது நின்றார். இதனால் மகிழ்ந்த விநாயகர் விஸ்வரூபம் காட்டி நின்றார். இது கண்டு ஒளவை இன்புறுநிலை எய்தினார். அம்மையைத் தமது தும்பிக்கையால் தூக்கியெடுத்துக் கயிலையில் சேர்த்தார் கஜமுகன். இங்கே “அகவல்” என்னும் சொல்லின் இரண்டாம் எழுத்து “க”வை நீக்கிப் பாருங்கள்; ஐங்கரனுக்கும் எங்கட்கும் விருப்பமான “அவல்” என்னும் தித்திக்கும் தீன் பண்டம் கிடைக்கிறதல்லவா? எனவே ஒளவை தந்துள்ள அவலாகிய அகவல் நாம் பெற்றுள்ள வழிபாட்டுப் பொக்கிஷம் இது மந்திர ஆற்றல் மிக்கது. ஒப்புயர்வற்ற ஞான நூல். மிக உயரிய யோக நூல்.

கயிலைக்கு அழகிய குதிரையிலே சேரமான் பெருமாள் நாயனாரும் வெள்ளை யானைமீது அமர்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளும் (வெள்ளை யானை சுந்தரமூர்த்திகட்கு கயிலை நாதனால் அனுப்பி வைக்கப்பட்டதாகும்.) கயிலையை அடைந்தனர். அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபுர வாசலில் தாம் புறப்பட்டபின் பூசை முடித்துப் புறப்பட்டுத் தங்கட்கு முன்னரே வந்து ஒளவை இருப்பது கண்டு திகைப்பும் அதிர்ச்சியும் கொண்டனர். பெருவியப்புற்ற சேரமான் பெருமாள் "அம்மையே! தாங்கள் எவ்வாறு எங்கட்கு முன்பு வந்து சேர்ந்தீர்கள்" என்றார். உடனே ஒளவையார்,

"மதுரமொழிநல் உமையாள்
புதல்வன் மலரப் பதத்தை
முன் நினைய வல்லார்க்கு
அரிதோ? முகில் போல் முழங்கி
அதிர நடந்திடும் யானையும் தேரும்
அதன் பின் வரும்
குதிரையும் காதம் கிழவியும்
காதம் குல மன்னனே"

"சேரர் குடியாகிய உயர்ந்த மரபிலே தோன்றிய மன்னவனே! நன்மையைத் தருகின்ற உமையம்மையின் குமாரனது திருவடித் தாமரைகளை எப்போதும் அழுத்தமாக நினைக்கும் அன்பர்க்கு இது அரிய செயல் இல்லையே! நீவிர் ஏறிவந்த குதிரையும் யானையும் இடி முழக்கம்போல் முழங்கி நிலம் அதிரும்படி வேகமாக வந்தன. ஆனால் காததூரம் கடக்க முடியாத கிழவி கணபதியின் கருணையால் மிக எளிதாகக் கடந்து வந்து விட்டாள் அல்லவா" என்றார் ஒளவை.

இவ்வாறு ஒளவைப் பாட்டியால் பூஜிக்கப்பட்டு நாமெலாம் அகவலாம் அவல் பெறக் காரணமாயிருந்த மத்தள வயிறனாய பெருந் தொந்திக் கணபதியார் சிறிய மூஞ்சூறுவை வாகனமாகக் கொண்டுள்ளதை நம்பமுடிகிறதா? ஆனாலும் நடைமுறையில் காண்பதை நம்பித்தானேயாகவேண்டும். விநாயகர் என்றால் "மேலான தலைவர்" என்பது பொருள்.

கந்தருவ மன்னனான கிரவுஞ்சன் கஜமுக பக்தன். அவன் வான் வழி வந்து கொண்டிருந்தபோது சவுபரி முனிவரின் மனைவியான ரிஜிபத்தினியைக் கண்டு அவரை அடையும் நோக்கில் அரசன் என்னும் மமதையில் பூமிக்கு வந்து ரிஜி பத்தினியின் கையைப் பற்றினான். பதறிய பத்தினி உதவி; உதவி என அவலக் குரல் எழுப்பினார். அதுகேட்டு ஓடிவந்த கணவரான சவுபரி முனிவர் கிரவுஞ்சனைக் கண்டு கோபம் கொண்டு மூஞ்சூறாகும்படி சாபமிட்டார். அதிர்ந்து போன கிரவுஞ்சன் முனிவரின் கால்களில் விழுந்து சாபவிமோசனம் அருளுமாறு அழுதான். அதனால் இரங்கிய முனிவர் "விநாயகர் காப்பாற்றுவார்" என்றார். ஒருநாள் ஆரவாரமிட்டு ஆங்காரமாக வந்த மூஞ்சூறுவைத் தன் பாசமாம் கயிற்றால் கட்டினார். அதனை அறுத்தோட முடியாமல் மூஞ்சூறு பணிந்து நின்றது. விநாயகர் அதனை வாகனமாக ஏற்றுக்கொண்டார். அது அவரைச் சுமந்து திரிகிறது.

ஒளவையார் அகவல் பாடியுள்ள ஆலயம் திருக்கோவலூராகும். இது சிவபிரானது அட்டவீரட்டத் தலங்களில் ஒன்று. இது அந்தகாசூரனை அழித்த தலமுமாகும். அது கோவில் வீரட்டமாகும். ஆழ்வார்கள் கண்டு தரிசித்த ஸ்ரீ உலகளந்த பெருமான் கோவிலும் ஞானானந்தகிரி சுவாமிகள் தபோவனமும் இதுவே. இங்குதான் ராஜேந்திரசோழன் பிறந்ததுமாகும்.

*தேய்த்தாலும் சந்தனக்கட்டை மணம் மாறாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிப்பரவிய இக்கோவிலில் மெய்ப்பொருள் நாயனாரும் வாழ்ந்துள்ளார். இத்தலத்தின் முகப்பு வாயிலின் வலப்புறத்தில் பெரியானைக் கணபதியார் காட்சி தருகிறார். இங்கு ஔவையார் கயிலை செல்வதான சிற்பம் காட்சி தருகிறது.

ஔவை பாடியுள்ள அகவல் மந்திர ஆற்றல்மிக்கதாகும். அகவல் என்பது மனம் ஒடுங்கிய நிலையில் ஓதுதல் எனும் பொருள் தருவது. பாடலின் தொடக்கத்திலும் நிறைவிலும் பாதச் சிலம்பையும் கழலையும் துதிப்பதன்மூலம் விநாயகரின் திருவடியழகைப் போற்றுவ தாகும். 72 வரிகள் கொண்ட இப்பதிகம் யோகியர் வழிபடும் ஞான மார்க்கத்தை வகுத்துச் சொல்லும் தனிச்சிறப்புடையது.

தொலைக்காட்சியில் ஒலியும் ஒளியும் இணைந்து இயங்குவது போன்ற விநாயகர் அகவலும் ஒலிக்கும் ஒளிக்கும் நிலையமாக அமைந்துள்ளது. அதனால் அகவல் பாடல்கள் சகல நிலையில் உள்ளவர்கட்கும் பயன்படுகிறது. அது பக்திநெறியினர்க்குச் சிறந்த பக்தி நூலாகும். ஞானியர்க்கு அளப்பரிய ஞானப் பொக்கிஷம். யோகநெறியாளருக்குச் சிறந்த யோக நூல்.

ஔவையார் "பேரம்" பேசுதலிலும் வல்லவர். "துங்கக் கரிமுகத்துத் தூமணி"யிடத்து பால், தேன், பாகு, பருப்பு ஆகிய நான்கு பொருள் கொடுத்து இயல், இசை, நாடகமாகிய சங்கத்தமிழ் மூன்று தரும்படி கேட்கிறார். அதுவும் கலப்படமில்லாத "தெளிதேன்" அல்லவா? தருகிறார். அதுமாத்திரமன்றி மூதுரை பாடித் தந்த ஔவையார் காப்பு வெண்பாவாக

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு" என்கிறார்.

அஃதாவது "பூக்கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு; வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது" என்கிறார். இதுவன்றி "கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ" என ஆனை முகனைப் புகழ்கிறார் அருணகிரி. சாணம் மாட்டின் கழிவு. கழிபட்ட மறுதினம் உளுத்து மக்கிப்போகும். அதில் சிறிய உருண்டை செய்து அறுகம்புல் செருகிப் பிள்ளையாராகப் பூஜித்தால் ஆண்டுக் கணக்கில் செருகிய அறுகு காய்ந்து விநாயக விறாட்டி உளுக்காது உடையாதிருப்பது அதிசயம் அல்லவா?

சுபம்

"நம்பிக்கை கொண்டவர்க்குத் தும்பிக்கை துணை"

## ஐயம் இட்டு உண்

ஐயம் இட்டு உண்பது என்பதும், ஏற்பது இகழ்ச்சி என்பதும் இல்லறத்தானுக்குக் கூறிய அறிவுரைகள். "போனகம் என்பதும்" தானுழுது உண்டல் என்பதும் ஔவையார் வாக்கு. துறவிகள், வானப்பிரஸ்தர்கள், பிரம்மச்சாரிகள், பாடுபட முடியாத நோயாளிகள், கண் காது முதலிய அங்கவீனர்கள் ஆகிய இவர்களுக்கு நாம் ஐயம் இடல் வேண்டும். உடல் வலு உள்ளவர்கள் உழைத்துத்தான் உண்ணவேண்டும்.

*-ஆர்.வீ. கந்தசாமி-*

*மதிப்பு இழந்தவன் இந்த உலகில் இறந்தவனுக்கு ஒப்பாவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம்! இக்காலத்து இளஞ் சந்ததிக்காகவும், சமய மாற்றத்தைத் தடுப்பதற்காகவும் சைவ மகாசபையினரின் இம்முயற்சி இன்றைய காலகட்டத்திற்கு மிகமிக அவசியப்படுகின்றது மட்டுமல்ல அதனை இவர்கள் நடைமுறைப்படுத்தி வருவதையும் அவதானிக்க முடிகின்றது. அதாவது தீக்கை, சிவதீட்சை பெற்ற ஒருவர் ஒழுகும் விதத்தில் இத்தீட்டு வழக்கம் இக்காலத்தில் சமூகத்தோடு சேர்ந்து வாழ்வதற்கு சற்று இடைஞ்சலாக இருக்கிறது. இதனால்த்தான் அவர்களின் கேள்விகளுக்காக மட்டும் உகந்த வகையில் இதில் சற்று விளக்கம் வேண்டித் தரப்படுகின்றது.

தீட்டு, தொடக்கு, துடக்கு, ஆசௌசம், ஆசூசம் என்ற வார்த்தைப் பிரயோகங்கள் ஒரே கருத்தைக் குறிப்பனவாக எம்மால் தற்காலத்தில் பாவிக்கப்படுகின்றன. தீட்டு என்பது விலத்தி, ஒதுக்கி வைத்தல், தீண்டாமை என்கிற விதத்தில் பொருள்படும். ஒரு குடும்பத்தில் ஒருவர் இறந்தால் (இறப்பு) ஒரு குழந்தை பிறந்தால் (ஜனனம்) தீட்டு ஏற்படுகிறது. அதைவிடப் பெண் பிள்ளைகள் பூப்பெய்தினால் ஏன் பெண்களின் மாதவிடாய்க் காலங்கள், மரணக் கிரியைகளில் பங்குபற்றல் இப்படிப் பல சந்தர்ப்பங்களில் தீட்டு எம்மவரினால் கைக்கொள்ளப்படுகிறது. அதேவேளையில் இதற்குரிய காலங்களும் வரையறுத்து 1 நாள் தொடக்கம் ஒரு வருடம் வரை நிகழ்வுகளின் தன்மைகளிற்கேற்ப அனுட்டிக்கப்பட்டு வருகின்றன. இது இடத்திற்கு இடம், பிரதேசத்திற்குப் பிரதேசம், சமூகத்திற்குச் சமூகம் வேறுபட்டு கைக்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனை விளக்கவே பல தொடர்கள் எழுத வேண்டும். இது எமது கட்டுரையின் நோக்கமுமல்ல. ஆனால் நிகழ்காலக் கண்ணாடியாகவும் வருங் காலத்தில் சரித்திரமாகவும் எம் இளஞ் சந்ததிக்கு ஆய்வாகவும், தேடலுக்குரியதாகவும் உள்ள பல கட்டுரைகளைத் தாங்கிய ஞானச்சுடர் வாசகர்களுக்காகவும் இப்பதிவுகள் இங்கு வரையப்படுகின்றன. இதனைப்பற்றி மேலதிக விபரங்கள் பெறின் கருடபுராணத்திலும், அக்னிபுராணத்திலும் காணலாம். ஆனால் அவை அனைத்தும் அச்சொட்டாக எம்மால் இச் சூழலில் பேணக்கூடியனவாக இல்லை என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆம்! அங்கே தீட்சை பெற்றவர்களின் பிரதானதொழில் கடற்றொழில், பிரதான உணவு கடலுணவுகள்தான். மரக்கறிகள் விளைவித்துக்கொள்ளக்கூடிய மண் வளமோ, நீர் வளமோ (சவர், உவர், உப்புநீர்) இல்லை. பொருளாதாரப் புறச்சூழல் இப்படி இன்னோரன்ன காரணங்களும் தீட்சை பெற்றவர்கள் மச்சம் சாப்பிடலாகாது என்ற தீவிர நம்பிக்கையுந்தான் இவர்களைத் தீட்சைபெறாமல் தடுத்தது.

அத்துடன் துடக்கும்கூட. இதுவும் இன்று ஒரு வில்லங்கத்துக்குரியதாகவே உள்ளது. ஒருவரின் இறப்புத் தொடக்கு ஆணடிக்கு மகன், பேரன், பூட்டன், எள்ளுப்பேரன் என ஏழு சந்ததிகள் பேணப்படவேண்டும் என்றுமிருக்கிறது. ஆனால் இக்காலத்தில் ஆண் மகனாலேயே

*ஒரு சிறிய ஆத்திரம் சில நேரங்களில் பெரிய திட்டங்களைக் குலைத்துவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைப் பேணமுடியா நிலை வெளிநாட்டில் இருக்கும் தம் உறவுகளுக்காக ஒரு கிழமை தொடக்கம் 15 நாட்கள்வரை பூதவுடலைக் கருவாடாக்கி அருகில் இருக்கப் பார்த்துப் பார்த்துப் பசியாறுகின்ற பரிதாபத்திற்குள் நாம் நிஜ வாழ்க்கையில் இருக்கிறோமல்லவா. எம்மில் தீட்சை கேட்ட பலர் இதனைக் கைக்கொள்ள முடியாதிருப்பதையும் பலர் சுட்டிக்காட்டியே வருகின்றனர். ஆனால் ஏதோ சீவியம் நெளிந்து சுளிந்து செல்கிறது. அதுமட்டுமல்ல நீங்கள் இப்போ பெற்றுள்ளது பிரவேச சிவதீட்சையே. இதன் படிகளாக விசேட தீட்ஷை, நிர்வாண தீட்ஷை, ஆச்சார்ய அபிடேகம் எனப் பல உண்டு. அவற்றிற்குள் உங்களில் ஒருவர் பிரவேசிக்கும்பொழுது எல்லாம் படிப்படியாக விட்டு விலகி ஓர் பூரண நிலைக்கு வருவீர்கள். முதலில் நாங்கள் ஓர் சைவ சமயி எனக் காட்டுவதற்கும், எமது திருமுறைத் தேனமுதங்களை இறைவன் சந்நிதி தொடக்கம் நாளாந்த வழிபாடுகள் வரை ஓதுவதற்குரிய தகுதியைப் பெறும்பொருட்டு நாங்கள் ஒவ்வொருவரும் சமய தீட்சை பெற்றேயாகவேண்டும். இதில் இப்போ நீங்கள் ஒருமண்டலம் சைவபோசனத்துடன் இருந்து பின் உங்கள் வசதிக்கேற்ற வகையில் செவ்வாய், வியாழன், வெள்ளி, விசேட சதுர்த்தி, பௌர்ணமி தினங்களில் ஆசார சீலர்களாக இருக்க முயற்சியுங்கள். அதுவே இப்போதைய காலத்தின் தேவை என விளக்கி அவர்களிடமிருந்து விடைபெற்று மீண்டும் அடுத்தநாட் காலை சந்நிதியானிடம் வந்து சேருகின்றோம்.

அன்பு வாசகர்களே ஆச்சிரம சுவாமிகளால் மாதமொருமுறை குடாநாட்டிற்கு வெளியேயான தமது ஆன்மீகப் பயணப் பணிகளை விஸ்தரிக்கவேண்டிய தேவையை சந்நிதியான் தந்துள்ளான். அதன்படி மறுமுறை உங்கள் உரிய உதவிகளுடன் வந்து சந்திப்போம் என்ற வாக்கிற்கு அமைய 06.02.2015 வெள்ளி இரவு மீண்டும் சைவ மகாசபைத் தொண்டர்களும் நாமும் பயணத்தை ஆரம்பிக்கிறோம்.

இதற்கிடையில் சந்நிதியானின் பேரருளால் சமன்பிட்டி அறநெறிப் பாடசாலையினரின் கூரை வேலை பூர்த்தி செய்யும் பொருட்டுக் கோரியிருந்த 110 கூரைத்தகடுகளும் (10'x3' abeeo sheet) ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டன. அந்தவேலையின் முன்னேற்றத்தையும், கோமாரி அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை, மற்றும் வாக்களித்தபடி எல்லா அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களிற்கான மாதாந்த உதவிப்பணம் வழங்க, கோணமுட்டாவ அறநெறிப் பாடசாலையினரின் 3ஆம் ஆண்டு நிறைவு விழாவில் சுவாமிகளையும் பிரதம அதீதியாக அழைத்திருந்தனர். அவ்வழைப்பையும் பூர்த்தி செய்தல் என்ற வகையில் இப்பயணம் ஆரம்பமாகியது. வழமைபோன்று சந்நிதியானின் பேரூந்தில் இரவு 8.00 மணிக்கு ஆரம்பமான பயணம் இரவு 11.00 மணிக்கு வவுனியா கோவில்குளம் சிவன் கோவிலை அடைந்து அன்றிரவு சிறுபொழுது கழித்து அதிகாலை 5.00 மணிக்கு மன்னம்பிட்டியை நோக்கி பயணம் தொடர்கிறது.....

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆச்சிரமத்தில் இடம்பெறும் விசேட நிகழ்வுகள்

**15.08.2015 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

விடயம் :- "பஜனை"

வழங்குபவர்கள் :- வடபிராந்திய சாயி சமித்தி அன்பர்கள்

**16.08.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "கடவுள் இருக்கின்றாரா?"

வழங்குபவர் :- திரு J. சந்திரப்பிரகாஷ் அவர்கள்

[ஆசிரியர்]

**17.08.2015 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

விடயம் :- "பஜனை"

வழங்குபவர்கள் :- முருகன் அடியார்கள்

**18.08.2015 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "புது வாழ்வுறவே புவிமீது அருள்வாய்"

வழங்குபவர் :- பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்கள்

[சின்மயா மிஷன்]

**19.08.2015 புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "தெய்வம் படும் பாடு"

வழங்குபவர் :- சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்கள்

**20.08.2015 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "உதித்தனன் உலகம் உய்ய"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

[அதிபர்- புட்டளை மகாவித்தியாலயம்]

*சேராத இடத்தில் சேர்ந்தால் வாராத துன்பம் எல்லாம் வரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21.08.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை]

**22.08.2015 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "சைவத்தின் மேல் சமயமில்லை"

வழங்குபவர் :- திரு யோ. சிவஉமாகரன் அவர்கள்

[உயர் பட்டப்படிப்பு பீடம்]

**23.08.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பாசமாம் பற்றறுப்போம்"

வழங்குபவர் :- திரு ஜ. சண்முகலிங்கம் அவர்கள்

[இளை. ஆசிரியர்]

**24.08.2015 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "அழிந்த எழுத்து"

வழங்குபவர் :- சங்கரத்தையூர் திரு க. கைலைநாதன் அவர்கள்

[ஆசிரியர், யாழ்/ அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்]

**25.08.2015 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பற்றற்றான் மீதொரு பற்று"

வழங்குபவர் :- திரு ச. லலீசன் அவர்கள்

[பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை]

**26.08.2015 புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பக்தி வலையிற் படுவோன்"

வழங்குபவர் :- செஞ்சொற் செம்மல் இரா. கேதீசன் அவர்கள்

**27.08.2015 வியாழக்கிழமை** சப்பறம்

**28.08.2015 வெள்ளிக்கிழமை** தேர்

**29.08.2015 சனிக்கிழமை** தீர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகர் தந்த கோவைச் சிறப்பு

-செல்வி தில்லைநாயகி நடராசா அவர்கள்-

மாணிக்கவாசகர் தந்த திருவாசகம் தேன்போல சுவைதரும் அமுதம் போல அதனை அனுபவிக்கலாம். திருவாசகத்தினை, எம் இறைவன் தம் கரங்களால் எழுதியதோடு மாணிக்க வாசகரை நோக்கி, பாவை பாடிய வாயால் கோவையும் பாடுக" என வேண்டி நின்றார். இறைவன் விருப்பத்தை நிறைவு செய்ய அவன் அருளாலே திருச்சிற்றம்பலக்கோவை என்னும் 400 பாடல்களைக் கொண்ட அரிய நூலைப் பாடினார். இதனை "மறையார் வேதம்" என்பர். காமுகர் "இன்பநூல்" என்பர். தமிழ்ப் புலவர் "இலக்கண நூல்" என்பர். இதைப் பாடக்கேட்டவரும் எழுதியவரும் வேதியராகி உண்ணின்றருளிய ஆதியங் கடவுளேயாதலால் இதன் மெய்ச் சிறப்பு நன்கு உணரப்படும்.

கோவையின் தேவையை உணருமிடத்து மானிட வாழ்வு அன்பை வேராகக் கொண்டது. அறத்தைக் கிளையாகக் கொண்டது. அருளை மலராகக் கொண்டது. அறிவைக் கனியாகக் கொண்டது. அன்பின் வழியது உயிர்நிலை. அறத்தால் வருவதே இன்பம். அன்பும் அறனும் பண்பும் பயனுமாகும் என்ற உண்மைகளை அனைவரும் அதாவது அறத்தின் வழி நிற்போர் எல்லோரும் அறிவர்.

"அன்பிலார் தம்மைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே" என்று முறையிடுகிறார் மாணிக்கவாசகர். இந்த அன்பு உணர்ச்சிதான் அறமாகி அறத்திற்கேற்ற பொருளாகி அதன் பயனாகிய இன்பமாய் இன்பத்தின் வளமையான வீடாகின்றது.

இந்த அன்புதான் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சாதனைப் படிகளாக வளர்கிறது. அன்பே கடவுள். இன்பமே என்பெரும் அன்பே என்று கடவுளைக் கூவுகிறார் மாணிக்கவாசகர். தமிழிலக்கியத்தின் தனிச்சிறப்பு அகப்பொருளும் புறப்பொருளுமாகும். அகப்பொருள் உள்ளுணர்வு. புறப்பொருள் வெளியுணர்வு. "உள்ளுணர்வை கோவையாக விளக்குவதே கோவைப் பாட்டாகும்"

இந்த இன்பத்திற்கு படிப்படியாகப் பயிற்சிகளை வகுத்துக் காட்டுவது ஆகமம் ஆகும். வேதம் தந்தை ஆகமம் தாய்போலும் இரண்டும் சித்தாந்தத்தில் கூடிக் குழைந்து இயல்பான முத்திநெறியினை சீவன் முத்தி நெறியைக் காட்டுகின்றன. திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், திருக்கோவை இந்நான்கும் பேரின்பத்திற்கும் வழிவகுக்கும் நான்கு திருக்களாக அமைகிறது. இவை தமிழிற்கே அரிய சிந்தனைச் செல்வங்களாகும். இவற்றின் கருத்தெல்லாம் வேதாகமத் தெளிவாகும். தமிழுலகின் அருட்சுடர் மாணிக்கவாசக சுவாமிகள் ஆவர்.

இவ்வாறு மனித ஆன்மீகத்திற்கும் தமிழ் மொழிக்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்கி சாதி, குலம், பிறப்பு என்று தடுமாறும் மானிடவாழ்வை சிவக்கனலில் சேர்த்து வைத்தவர் அவரேயாகும். அன்பினாலே சிவமான பெருந்தகை மாணிக்கவாசகராகும் தமிழர் பண்பாட்டில் உயிரும் உடலும் போன்றதே திருவாசகமும் திருக்குறளுமாகும்.

வெற்று அம்பல வாழ்வை சிற்றம்பல வாழ்வாக மாற்றுவது மாணிக்கக் கோவையாகும். திருவாசகமும் திருக்கோவையும் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி ஆளும் நூல்களாகும். இந்நூல்களைப் பொருளுணர்வுடன் கற்றுப் பெரும்பேறடைவது இந்துக்கள் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருவல்லம்

—வல்வையூர் அப்பாண்ணா—

வேலூருக்குப் பக்கமாக வள்ளி மலைக்குத் தெற்காக 10 கி.மீ தொலைவில் இருப்பதுதான் "திருவல்லம்" திருக்கோவில். ஆர்க்காட்டிலிருந்து ராணிப்பேட்டை வழியாக காட்பாடி செல்லும் சாலையில் "திருவல்லம்" அமைந்திருக்கிறது. இந்த சாலை "சிப்காட் தொழிலகம்" உள்ள பகுதியைக் கடந்து "திருவல்லம் பாலம்" தாண்டியவுடன் திருவல்லம் ஊர் வருகிறது. வள்ளி மலைக்கும் திருவல்லம் கோயிலுக்குமாக வேலூர் - ஆற்காடு - ராணிப்பேட்டை - சோளிங்கர் - திருத்தணி முதலான நகரங்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

ஊருக்குள் நுழையும் முன்னரே "திருவல்லம்" திருக்கோவிலின் கோபுரம் தெரிகிறது. ஊரின் மையத்தை ஊடறுத்து ஓடிக்கொண்டிருக்கும் "நிவா" நதியின் கரையின் வடமேற்குக் கரையில் கோயில் உள்ளது. இந்த "நிவா" நதியிலிருந்துதான் அந்நாளில் சுவாமியின் திருமஞ்சனத்திற்குத் தீர்த்தம் கொண்டுவரப்பட்டது. இப்போது கோவிலினுள் கௌரி தீர்த்தமும்- தீர்த்தக் கிணறும் உள்ளன.

இந்த ஸ்தலத்தின் அமைவிடம் ஒரு காலத்தில் வில்வக் காடாக இருந்தமையினால் "வில்வவனம்", "வில்வாரண்யம்" எனவும் அழைக்கப்பட்டு வந்தது. இந்த வில்வக் காட்டினுள் ஒரு பாம்புப் புற்றின்மீது பசுவொன்று தினமும் பால் சொரிந்து வந்ததாகவும், அதனால் புற்றுமண் கரைந்து சிவலிங்கம் வெளிப்பட்டதாகவும், அந்தச் சிவலிங்கமே இன்று திருவல்லத்தின் கருவறையில் அருள் பாலிக்கும் ஈசன் என்றும் சொல்கிறார்கள்.

கோயில் சீரான சுற்றுச் சுவர்களுடன் உட்புறம் தென்னை - பலா மரங்கள் நிறைந்து குளிர்ந்த சோலை வனமாக உள்ளது.

ஞானசம்பந்தரின் தேவாரத்தில் "திருவல்லம்" என்றும், அருணகிரிநாதரின் திருப்புகழில் "திருவலம்" என்றும் இத்தலம் குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

நசையொடு தோலுந் தசைதுறு நீரும்
நடு நடுவே யென் ...... புறுகீலும்

எனத் தொடங்கும் திருப்புகழ்,

தெரிவையர் தாம்வந் தருநடமாடுந்
திருவல மேவும்..... பெருமாளே

என முடிவதை நாம் நோக்கலாம்.

இறைவன்: வில்வநாதீஸ்வரர், வல்லநாதர்
இறைவி : தனுமத்யாம்பாள், வல்லாம்பிகை
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : கௌரி தீர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு நிலைகளுடன் கூடிய தெற்கு ராஜகோபுரமே பிரதான வாசல். சிவபெருமானின் திருவிளையாடல்களை விளக்கும் பல்வேறு சிலைகள் ராஜகோபுரத்திற்கு அழகு சேர்க்கின்றன. வலது புறத்தில் வாகன மண்டபமும் இடது புறத்தில் கோவில் அலுவலகமும் என இரு மண்டபங்கள். இடதுபுற கோவில் அலுவலகத்திற்கு முன்பாக சிறிய இரு சந்நிதிகள். உட்கோபுரத்தை நோக்கி நீண்டு செல்லும் வழியின் அருகில் இடது புறமாக உள்ள தனிக்கோவிலில் அம்பிகேஸ்வரர் உடனான ராஜேஸ்வரி அருள் பாலிக்கிறார். இந்த சந்நிதானத்தைத் தனியாக வலம் வரலாம். அருகிலேயே நாகலிங்க மரத்தினையும்- மரம் நிறைந்த பூக்களையும் பார்த்து ரசிக்கலாம். இந்த அம்பிகேஸ்வரர் ஆலயம் பிற்காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்தச் சந்நிதிக்கு எதிர்ப்புறம் உள்ள அழகான திருக்குளம் "கௌரி தீர்த்தம்" எனப்படுகிறது. இதுவே ஸ்தல தீர்த்தமாகும். செம்மையான படிக்கட்டுக்களுடன் அழகாக உள்ள குளத்தின் நடுவே நீராழி மண்டபமும் உண்டு.

மூன்று நிலைகள் கொண்ட உட்கோபுரத்தினூடாக உள்நுழைந்தால் இடது பக்கம் வலம்புரி விநாயகரையும் - ஆத்மலிங்கத்தையும், வலப்பக்கம் பைரவரையும் தரிசிக்கலாம். இந்தப் பெரிய பிரகாரத்தின் தென்சுற்று வழியாக மேற்குச் சுற்றுக்குள் நுழைகிறோம். இங்குள்ள கல்யாண மண்டபத்தினுள் உற்சவத் திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளன. அடுத்து காசி விஸ்வநாதர் சந்நிதியும், சந்திர மௌலீஸ்வரர் சந்நிதியும் கிழக்கு நோக்கியுள்ளன. இரண்டு மூர்த்தங்களும் சிறிய லிங்கங்கள் ஆகும். அடுத்த சந்நிதியில் அருணாசலர் அமர்ந்துள்ளார். சதாசிவர், அனந்தர், ஸ்ரீகண்டர், அம்பிகேஸ்வரர் எனும் நான்கு சிறிய லிங்கங்களும் வரிசையாக உள்ளன.

அடுத்து 1008 சிறிய லிங்கங்கள் கொண்ட அழகான "சஹஸ்ரலிங்கம்" உள்ளது. அருகே வள்ளி - தெய்வானை சமேத ஆறுமுகர் சந்நிதியும் - சந்நிதியின் ஒரு மூலையில் அருணகிரிநாதர் விக்கிரகமும், பக்கத்தில் குருஈஸ்வரர் - விஷ்ணுஈஸ்வரர் - விதாதாஈஸ்வரர் எனும் பெயர்கள் கொண்ட சிவலிங்கங்களும் உள்ளன.

மேற்குறித்த லிங்கங்கள் உள்ள மண்டபச் சுவரில் அருணகிரிநாதரின் திருப்புகழ், பாம்பன் சுவாமிகளின் "குமாரஸ்தலம்" பாடலும் எழுதப்பட்டுள்ளது. இதன் அருகே காணப்படும் வசந்த மண்டபம் மிகப் பெரியது. கிழக்கு நோக்கியுள்ள ஆதிவில்வ நாதேஸ்வரர் சந்நிதியின் எதிரில் நெடுங்காலமாக இருந்துவரும் முதிர்ந்த பலாமரம் ஒன்றுள்ளது. அத்துடன் பிற்காலத்தில் நாட்டப்பட்டு வளர்ந்துள்ள பலாமரங்கள் பலவுமுண்டு.

வலமாக வரும்போது கிழக்கு நோக்கிய அம்பாளின் தனிச் சந்நிதிக்கு வருகிறோம். அம்பிகை "தனுமத்யாம்பாள்" நான்கு திருக்கரங்களுடன் அபயம் தருகிறார். கோஷ்டத்தில் நிருத்த விநாயகர், காத்யாயினி, பரமேஸ்வரி, பிராம்ஹி, துர்க்கையுடன் தனிச் சந்நிதியில் சண்டிகேஸ்வரியும் உள்ளனர்.

கிழக்குச் சுற்றிலேயே மீனாட்சி சமேத சுந்தரேஸ்வரரின் தனிக்கோயில் கிழக்குப் பார்த்தபடி உள்ளது. தெற்கு நோக்கிய மீனாட்சியம்மை கருவறையின் வாசலில் துவார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரும் துவார சுப்பிரமணியரும் காட்சி கொடுக்க, கோஷ்டத்தில் விநாயகரும் - தட்சணாமூர்த்தியும் - மகாவிஷ்ணுவும் - பிரம்மாவும் - துர்க்கையும் தரிசனம் தருகின்றனர். சண்டிகேஸ்வரருக்கான தனிச் சந்நிதியுமுண்டு. இரண்டு சந்நிதிகளையும் தனித்தனியாகவும், சேர்ந்தும் வலம்வரக்கூடியதாக வீதி அமைப்பு உள்ளது. இந்தச் சுற்றில்த்தான் பைரவருக்கும் சூரியனுக்கும் சந்நிதிகள் உள்ளன. வெளியே வர கொடிமரம் கண்ணில் படுகிறது.

கொடிமரத்தைப் பார்த்தபடி கருவறைக்குள் நுழைந்தால் மிக... மிகப் பெரிய நந்தியொன்று சுவாமியைத் தரிசனம் செய்ய முடியாதவாறு (எதிர்த்திசையில்) கிழக்குப் பார்த்தபடியே உள்ளன. அர்த்த மண்டபத்தின் உள்ளே உள்ள அதிகார நந்தி மட்டும் சுவாமியைப் பார்த்தபடி இருக்க, இன்னும் இரு நந்திகள் எதிர்த்திசையைப் பார்த்தபடியே உள்ளன.

கருவறையின் உள்ளே சதுர ஆவுடையார் பீடத்துடனான சிறிய லிங்கத் திருமேனியாக ஒற்றை மாலையுடனும் அளவான அலங்காரத்துடனும் மூலவரின் திருவுருவம் கண்முன்னே தெரிகிறது. சிரசுமீது படமெடுக்கும் 5 தலை நாகபடம். நாகபடம் மேலாக லிங்க பாணத்தை மூடி நிற்குமளவிற்கு உருத்திராட்ச மாலையுடன் மூலவர் "வில்வநாதீஸ்வரர்" அனைவருக்கும் அருள் பாலிக்கிறார். கோஷ்ட மூர்த்தங்களாக நிருத்த விநாயகர், தெட்சணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா உள்ளதுடன், சண்டிகேஸ்வரருக்குத் தனிச் சந்நிதியும் உண்டு.

மூலவரை நோக்கி நாம் நிற்கும்போது நமக்கு வலது புறமாக அருள்மிகு நாராயணரையும் வணங்குகிறோம். மூலவர் கருவறையின் இடப்பக்கத்தில் பள்ளத்தில் உள்ள சிவலிங்கத்தை "பாதாளேஸ்வரர்" என்கிறார்கள். அவருக்கு எதிரே நந்தியும் - விநாயகரும் சிறிய உருவில் வீற்றிருக்கின்றனர்.

உட்பிரகாரத்தின் தென்புறம் 63 நாயன்மார்களின் உற்சவத் திருமேனிகள் ஒரு வரிசையிலும், மூலத் திருமேனிகள் ஒரு வரிசையிலுமாக இரண்டு வரிசைகளில் வைக்கப்பட்டுள்ளன.

மூலவர் சந்நிதிக்கு வெளியே உள்ள பெரிய நந்திக்குப் பக்கத்தில் நடராஜர் சபையும், அடுத்து நவக்கிரக சந்நிதியும் உள்ளன. மூலவரைத் தரிசனம் செய்து, வெளியே வந்து நடராஜப் பெருமானைத் துதித்து, நவக்கிரகத்தை வலம் வந்து கொடி மரத்தடியில் வீழ்ந்து வணங்கி வலமாக வலம் வருவது அனைவரதும் வழக்கமாக உள்ளது.

பங்குனியில் நடைபெறும் பிரம்மோற்சவமும், மார்கழியில் நடைபெறும் ஆர்த்திரா தரிசனமும் மிக விசேடமானவை.

"எரித்தவன் முப்புரம் எரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவன், உறைவிடம் திருவல்லமே"

-சம்பந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர் 2015 ஆடி மலர்

## ஆவணிமாத வாராந்த நிகழ்வுகள்

07.08.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "சைவநெறி"

வழங்குபவர் :- திரு பூ. சோதிநாதன் அவர்கள்

[முன்னாள் பேராசிரியர், பல்கலைக்கழக விரிவுரையாளர்- பேராதனை]

---

14.08.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

சொற்பொழிவு :- "பக்தி வலையில் பெறும் சித்திகள்"

வழங்குபவர் :- சைவப்புலவர் சி. நவரத்தினம் (கீழ்க்கரவை நவம்) அவர்கள்

[ஆசிரிய ஆலோசகர்]

---

21.08.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

28.08.2015 வெள்ளிக்கிழமை தேர் உற்சவம்

29.08.2015 சனிக்கிழமை தீர்த்த உற்சவம்

---

04.09.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் ஆவணிமாத வெளியீடு

**212ஆவது மலர்**

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீச்சந்திரன் அவர்கள்

[ஆசிரியர், அ.மி. கல்லூரி]

மதிப்பீட்டுரை :- திரு க. நடேசன் (தெணியான்) அவர்கள்

[இளை. அதிபர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/112/NEWS/2015

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org